400

குண்டூசி

ஏப்ரல்' 53 எட்டு அணா

ஜூபிடர்-
லாவண்யா
மனிதன்
டைரக்ஷன்: K.ராம்நாத்... ஸ்டுடியோ: நெப்ட்யூன்

சத்தியசோதனை

தமிழ்

ஸ்டுடியோ : ஏவிஎம்

G. H. RAO

வசனம் : S.D. சுந்தரம்

தயாரிப்பு குப்பி கர்னாடகா

மதுரை	—	நியூ சினிமா	கோவை		வெரைட்டி & பாலஸ்
திருச்சி	—	ராஜா	திருநெல்வேலி	—	பாபுலர்
சேலம்	—	பாலஸ்	காரைக்குடி	—	சரஸ்வதி

மற்றும் 20 இடங்களில்.

இந்த ஊசியில்

ஏப்ரல் 1953

134144

கட்டுப்பாடு எங்கே? ...	தலையங்கம்	3
சிறிய மேடையில் பெரிய விருந்து	...	4
இம்மாத வெளியீடுகள் ...	...	6
எஸ். ஆர். ராஜகுமாரி	வாழ்க்கை வர்ணனை	8
குண்டூசியைக் கேளுங்கள்	பதில்கள்	13
கிருஷ்ண குமாரி ...	மூவர்ணப் படம்	21
எஸ். ஆர். ராஜகுமாரி	... ஆர்ட் படம்	22
மானகிரி "லே"னு	வாழ்க்கைக் குறிப்பு	24
நாட்டிய முத்திரைகள்	... அ. ரா. கி.	26
"மதன மோஹினி"	பட விமர்சனம்	29
"சத்திய சோதனை"	படக் காட்சிகள்	31
நுனிப்புல் ...	'வெட்டுக்கிளி'	35
திரையழகன் திலீப் குமார்	பேட்டி	40
பொதுஜனம் பேசுகிறார் ...	கடிதங்கள்	46
வீரத்தேவன் கோட்டை	தொடர் கதை	51
பிரிவுபசாரமும், வரவேற்பும்	செய்தி	60
ஜி. வரலக்ஷ்மி ...	... ஆர்ட் படம்	63
டி. ஆர். ராதா ...	... ஆர்ட் படம்	64
இரவல் ஒழிக! ...	மு. புரட்சிப் பித்தன்	65
புஸ்தகப் பொழுது	... விமர்சனம்	69
சென்னை மேடையில் சென்ற மாதம்	...	72
செங்கோட்டை ராணி ...	...	73
பிரம்மலோகம் ...	படச் செய்திகள்	82

வருஷ சந்தா

இந்தியா, இலங்கை ... ரூ. 6
வெளிநாடுகள் ... ... ரூ. 9

தனிப் பிரதி

இந்தியா ... ... 8 அணா
இலங்கை ... ... 50 சதம்
வெளி நாடு ... ... 12 அணா

கட்டுரையாளர்களுக்கு

"குண்டூசி"யில் வெளியிடுவதற்கு நல்ல சிறு கதைகள், கட்டுரைகள், ஹாஸ்யத் துணுக்குகள் முதலியவை வரவேற்கப்படுகின்றன. வெளியிடப்படுபவைகளுக்குத் தக்க சன்மானம் உண்டு.

அங்கீகரிக்கப் படாத விஷயங்களைத் திரும்பப் பெற வேண்டுபவர்கள் போதிய ஸ்டாம்ப் உள்ள கவர் வைத்து அனுப்ப வேண்டும்.

குண்டூசி காரியாலயம்,
26, கிடங்குத் தெரு,
சென்னை—1.

குறிப்பு :—"குண்டூசி"யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகள், விகடத் துணுக்குகள் முதலியவைகளில் காணப்படும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே. அவை நிஜ நபர் எவரையுமே குறிப்பிடுபவை அல்ல.

குண்டூசி

ஆசிரியர்-பி.ஆர்.எஸ்.கோபால்

நிகரற்ற விநியோகமுள்ள மாத சினிமாப் பத்திரிகை

ஏப்ரல், 1953

பட்டை—6 ஊசி—7 பிரதி—67

கட்டுப்பாடு எங்கே?

"எங்கள் ஊருக்கு போலீஸ்காரனே வேண்டாம். இங்கு யாரும் சட்டத்தை மீறாமல் நாங்களே பார்த்துக் கொள்ளுவோம்"—என்று ஒரு ஊர்க்காரர்கள் கூறினால், அது எவ்வளவு சந்தோஷப்படத் தக்க விஷயம்! சர்க்காருக்கு எவ்வளவு வேலையும் சிரமமும் மிச்சம்! இந்தப் பொறுப்பு உணர்ச்சியைக் கண்டு யார் தான் ஆச்சரியப்படமாட்டார்கள்?

சமீப காலத்தில், படத்தொழிலில் இது மாதிரி ஒரு பேச்சு கிளம்பியிருக்கிறது: "சர்க்கார் அதிகாரிகளை வைத்து பட தணிக்கை நடத்தும் சிரமத்தை வகிக்க வேண்டாம். அதை எங்களிடமே விட்டு விட்டால், நாங்களே சட்ட வரம்பை மீறாத வகையில் படங்களைத் தயாரித்துக் கொடுப்போம்" என்று படப் பிரமுகர்கள் கூறத் தொடங்கியுள்ளனர்.

இந்த வார்த்தைகள் காதில் மதுரமாக ஒலிக்கின்றன! படத் தொழிலினரிடமே தணிக்கை விஷயத்தை விடுவதற்கு முன்னால் அவர்களிடம் கட்டுப்பாடு இருக்கிறதா என்பதை முதலில் கவனிக்க வேண்டும். அந்த நிலைமை ஏற்படக் கூடிய அளவுக்கு படத் தொழிலில் கட்டுப்பாடு ஏற்பட்டு விட்டால் மெச்சத் தக்கதே.

தற்போது, இந்தியாவில் எந்த ஒரு தொழிலாவது கட்டுப்பாடின்றி, ஒற்றுமையின்றி நடந்து வருகிறதென்றால் அது நம் சினிமாத் தொழில்தான். போட்டியும், பொறாமையும், சுயநலமும் படமுதலாளிகளிடையே காணப்படும் சகஜமான குணங்களாகும். தங்கள் படத்திற்கு வசூலை அதிகரித்துக் கொள்ளுவதற்காக அவர்கள் பொதுநலத்திற்கு ஹானி விளைவிக்கும் பல விஷயங்களைத் தம் படங்களில் புகுத்தி வருகின்றனர். அவர்களிடம் உண்மையிலேயே கட்டுப்பாடு இருப்பின் ஒரே கதையை பலர் படமாகத் தயாரிப்பார்களா? ஒரு சாதாரண 'எக்ஸ்ட்ரா' நடிகைக்கு போட்டி போட்டுக் கொண்டு திடீரென்று ஏராளமாய் (பணம்) கொடுத்து அவளை ஒரே நாளில் லக்ஷ ரூபாய் நக்ஷத்திரம் ஆக்கி வைப்பார்களா? அல்லது கொள்ளை வசூலைக் கருதி படங்களில் காமக் காட்சிகளைக் குவிப்பார்களா?

படத் தொழிலினரிடம் கட்டுப்பாடும், கூட்டுறவும் சூன்யமா யிருக்கும்போது, விஷயத்தை மறைத்து ஜம்பமாகப் பேசுவதில் பயனில்லை. இந்த அவல நிலைமையில், அவர்களிடமே தணிக்கை பொறுப்பையும் ஒப்படைத்தால் சமூகத்திற்கு மாபெரும் தீங்கே ஏற்படும் என்பது எம் அபிப்பிராயம்.

முதலில் படத் தயாரிப்பாளர்களின் மனப்பான்மை மாறவேண்டும். "சுய நலம் முதலில்; சமூக நலம் பிறகு" என்ற கொள்கைக்குப் பதில், "சமூக நலம் முதலில்; சுய நலம் பிறகு" என்ற கொள்கையுடன் அவர்கள் படங்களைத் தயாரிக்க முற்பட வேண்டும். நிர்ணயம் இருந்தால் தான் சுய நிர்ணயத்தை எதிர் பார்க்கலாம் என்பதை அவர்கள் மறந்து விடக் கூடாது.

ஆகவே, கொள்கையளவில் இந்த யோசனையை நாம் வரவேற்கிறோம். ஆனால், செயலளவில், தற்போதைக்கு, ஆட்சேபிக்க வேண்டியிருக்கிறது.

சிறிய மேடையில் பெரிய விருந்து

"ஆடத் தெரியாத நடன மாது கூடம் கோணல் என்று குறை சொல்வான்" — என்று ஒரு பழமொழி உண்டு. ஆடத் தெரிந்த பெண், கூடம் கோணலாயிருந்தாலும், இடம் குறைவானாலும் அழகாக ஆடிவிடுவாள் என்ற உண்மையை ஊர்ஜிதப்படுத்திக் காட்டுவதேபோல் இருந்தது—சென்ற மாதம் 24-ந் தேதியன்று கோடம்பாக்கம், சனாதன மார்க்க சபாவில் நடைபெற்ற பி. சந்திரா, ஆர். லீலா—ஆகிய சிறுமிகளின் நடனக் கச்சேரி.

கோடம்பாக்கத்தில், ஒரு சிறிய வீட்டின் மேல் தளத்தில் இக்கச்சேரிக்கு மேடை அமைக்கப் பட்டிருந்தது. பனிரண்டடி சதுரமே உள்ள மேடையில் பக்கவாத்யக்காரர்கள், நடன ஆசிரியை—பின்பாட்டுக்காரர்கள் அத்தனைபேரும் ஒரு ஓரத்தில், அமர்ந்திருக்க இரு சிறுமிகள் ஏககாலத்தில் நன்கு ஆடிக்காட்டியது ஆச்சரியமாயிருந்தது!

பழைய மாம்பலத்தில் நடராஜ நாட்டிய நிகேதனத்தை நடத்திவரும் நாட்டிய நடிக திலகம் ஸ்ரீமதி நீலா பாலசுப்ரமண்யத்தின் சிஷ்யைகளே இந்த சிறுமியர். குமாரி சந்திரா அவருடைய சொந்த புத்திரி. குமாரி லீலா, ஸ்டாண்டர்டு வேக்கூம் ஆயில் கம்பெனி என்ஜினீயர் ஸ்ரீ. ஏ. கே. ராவின் புத்திரி ஆவார். இச்சிறுமிகளுக்கு நல்ல பயிற்சி அளித்திருப்பதோடு, அன்றையக் கச்சேரியில் ஆசிரியையே இனிமையாகவும் ஸ்பஷ்டமாகவும் பாடி, நட்டுவாங்கமும் செய்து, கச்சேரியை நன்கு சோபிக்கச் செய்தார்.

சந்திராவும், லீலாவும், சேர்ந்து ஆடிய போது சில குறைகள் தென்பட்டன. இருந்த போதிலும், தனித்தனியே ஆடிய போது இக் குறைகள் தென்படவில்லை. சந்திரா ஆடிய "நந்த கோபாலன்" (மார்வாரி) நடனமும், இருவரும் ஆடிய நாடோடி நடனமும் பிரமாதமாய் இருந்தன. சந்திராவின் விறுவிறுப்பான அங்க அசைவுகளும், கண் வீச்சும் சபையோரின் மனதைக் கவர்ந்தன. லீலா "நடனம் ஆடினார்" பாட்டிற்கு நன்கு பதாபிநயம் செய்தார்.

அன்றையக் கச்சேரிக்கு "குண்டூசி" யின் நடன ஆசிரியர் "நந்தி" தலைமை வகித்தார். அவர் இந்தக் குமாரிகளின் ஆட்டத்தைப் பாராட்டிவிட்டு, சபையின் சார்பாக குமாரிகளுக்கு இரு மெடல்களை பரிசளித்தார்.

கச்சேரிக்கு விஜயம் செய்திருந்த "குண்டூசி" ஆசிரியர் பி. ஆர். எஸ். கோபால் இந்த சபையின் சன்மார்க்க சேவையைப் பாராட்டி விட்டு, கோடம்பாக்கம் வாசிகளுக்கு பெரிய அளவில் நல்ல பொழுது போக்கை அளிக்கக்கூடிய பெரிய சபையாக இது வளர்ச்சி பெற வேண்டும் என்று ஆசி கூறினார். "ஜதி"

பி. சந்திரா

ஆர். லீலா

படத்தில் இல்லாத நக்ஷத்திரம்

உங்களுக்குத் தெரியும் நக்ஷத்திரங்கள் படங்களில் நீங்கள் காணும் நடிக, நடிகைகள் தான். உங்களைச் சிரிக்கவோ அழவோ செய்பவர்கள் அவர்கள் தான். ஆயினும் அவர்கள், டைரக்டர் ஆட்டி வைக்கும் பொம்மைகளே. இவர்தான் நக்ஷத்திரங்களுக்கு அவசியமும், அர்த்தமும் கொடுப்பவர், நாம் படத்தில் பார்க்காமலும் பாடாமலும் இருக்கும் இவர்தான் உண்மையான நக்ஷத்திரம்.



தேனீரின் குணங்களும் இதுபோன்றதுதான் அதைப்பற்றி யாரும் பாடாவிட்டாலும் உலகிலுள்ள லக்ஷக்கணக்கான மக்கள், புத்துயிரளிப்பதும் எப்பொழுதும் விரும்பி ஏற்றுக் கொள்ளக்கூடியதுமான தேனீரை அருந்தி ஊக்கமும் இன்பமும் பெறுகின்றனர்.

உங்களுக்கு அதிக
இன்பத்தை கொடுக்கிற

ஸென்ட்ரல் 'டீ' போர்டாரால்
வெளியிடப்பட்டது

CTB—

இம்மாத வெளியீடுகள்

ஏப்ரல் மாதம் சினிமா ரஸிகர்களுக்கு நல்ல மாதமாகவே இருக்கும். இம் மாதத்தில் "மனிதன்", "பணக்காரி", "வாழப் பிறந்தவள்", "ஜினேவா", "சத்திய சோதனை" ஆகிய ஐந்து தமிழ்ப் படங்கள் திரையிடப்பட வீருக்கின்றன.

"மனிதன்"—ஜுபிடர் - லாவண்யாவின் கூட்டுத் தயாரிப்பாகும். டி. கே. எஸ். பிரதர்ஸ் கோஷ்டியினர் நாடகமாக நடித்து வெற்றி கண்ட மறுமலர்ச்சிக் கதை. பிரபல டைரெக்டர் கே. ராம்னுத் டைரெக்ஷனில் தயாராகி யுள்ளது. டி. கே. ஷண்முகம் சைத்ரீகனுகவும், டி. கே. பகவதி டாக்டராகவும் நடித்திருக்கின்றனர். மற்றும் மாதுரி தேவி, பண்டரி பாய், ஸி. வி. வி. பந்துலு ஆகியோருடன் ஆந்திர நடி கிருஷ்ண குமாரியும் முதல் முறையாக தமிழ்ப் படத்தில் நடித்திருக்கிருர். இப் படம் நெப்டியூன் ஸ்டுடியோவில் தயாரிக்கப் பட்டது.

உமா - ஓம் பில்ம்ஸ் "பணக்காரி"யும் ஏப்ரல் மாதத்திலே தான் திக் விஜயத்திற்குக் கிளம்புகிருள். பிரபல நாவலாசிரியர் லியோ டால்ஸ்டாயின் சிறந்த நாவலான 'அன்னு கரினு'வின் கதையைத் தழுவியது இந்தப் படக் கதை. நாகய்யா, டி. ஆர். ராஜகுமாரி, எம். ஜி. ராமச்சந்திரன், ஜாவர் சீதாராம், மங்களம், ஸி. வி. வி. பந்துலு ஆகப் பலர் நடித்துள்ள இப் படத்தை கே. எஸ். கோபாலகிருஷ்ணன் டைரெக்ட் செய்திருக்கிருர். படம் நியூடோன் ஸ்டுடியோவில் தயாரிக்கப் பட்டதாகும்.

"வாழப் பிறந்தவள்" — இதுவும் இம் மாதம் திரையிடப்பட விருக்கிறது. இது ஆர். ஆர். பிக்சர்ஸின் தயாரிப்பாகும். ஹெச். எல். என். ஸின்ஹாவின் கதையாகும் இது. இப் படத்தின் வசனங்களை "விந்தனு"ம் பாட்டுகளை கா. மு. ஷெரீபும் எழுதியுள்ளனர். சங்கீத டைரெக்ஷனை ராஜேஸ்வர ராவ், ஜி. ராமனுதன் இருவரும் கவனித்திருக்கிருர்கள். கே. சாரங்கபாணி பணப் பித்துப் பிடித்த தந்தையாகவும், அவரது அசட்டுப் பிள்

விஜயகர்
சுருட்டுகள்
ஷெல் பிராண்டு
TRADE MARK REGISTERED
PROPRIETOR V. ARUMUGA CHETTY
மணிலா சுருட்டுகள்
V. ஆறுமுக செட்டி. 18. அண்ணு பிள்ளை தெரு,
சென்னை-1.
N.B. பொடிக்த உயர்ந்த பந்தர் புகையிலைகளும் .....
எம்மிடம் கிடைக்கும் ....

ணையாக ஸ்ரீராமும், வில்லனாக டி. எஸ். பாலய்யாவும் நடிக்கின்றனர். டி. ஆர். ராஜகுமாரி, பண்டரி பாய், பி. எஸ். சரோஜா ஆகிய மூவரும் முக்கிய பாத்திரங்களில் நடிக்கின்றனர். கதாநாயகனின் நண்பனாக சந்திர பாபு வெகு நன்றாக நடித்திருக்கிறாராம். இப் படம் ராமண்ணாவின் டைரெக்ஷனில் வாஹினி ஸ்டுடியோவில் தயாரிக்கப் பட்டது.

மற்றொரு வெளியீடு, தமிழ்–மலையாளம் இரு பாஷைப்படமான "ஜினேவா" ஆகும். சந்திரா பிக்சர்ஸாரின் இப் படம் நியூடோனில் தயாரிக்கப் பட்டதாகும். பி. எஸ். ஸரோஜா, எம். ஜி. ராமச்சந்திரன், எம். ஜி. சக்ரபாணி, டி. எஸ். துரைராஜ் முக்கிய பாத்திரங்களில் நடித்துள்ளனர். "ஞான செளந்தரி" போன்ற ஒரு உருக்கமான கதையாம் இது. இப் படத்தின் வசனங்களை "சுரதா" எழுதியிருப்பதுடன் சில பாட்டுகளையும் அமைத்துக் கொடுத்திருக்கிறார். சங்கீத டைரெக்ஷனை காலஞ் சென்ற ஸி. வி. சுப்பராமனின் சிஷ்யர் விஸ்வநாதன் கையாண்டிருக்கிறார். இந்தப் படத்தை எப். நாகூர் டைரெக்ட் செய்திருக்கிறார்.

ஏப்ரல் மாதம் 3ம் தேதி முதல் "சத்திய சோதனை" தமிழ் நாட்டில் திரையிடப் படுகிறது. இது, குப்பி கர்னாடகா புரொடக்ஷன்ஸ் தயாரிப்பாக ஏவி. எம். ஸ்டுடியோவில் தயாரிக்கப்பட்டது. இது கன்னடம், தமிழ் இரு பாஷைகளிலும் தயாரிக்கப் பட்டுள்ளது. தமிழ்ப் படத்தின் வசனங்களை எஸ். டி. சுந்தரம் எழுதியிருக்கிறார். நீண்ட நாட்களுக்குப் பிறகு ரஸிகர்களை மகிழ வைக்க வெளிவரும் ஒரு புராணப் படம் இது. டி. எஸ். பாலய்யா, ஹொன்னப்ப பாகவதர், பண்டரி பாய், ஜெயம்மா, கிருஷ்ண குமாரி, குமாரி கமலா, ராதாகிருஷ்ணன், ஆகியோர் நடித்துள்ள இப் படத்தை எச். எல். என். ஸிம்ஹா டைரெக்ட் செய்திருக்கிறார்.

வாழ்த்துகிறோம்

"மாலை மணி" ஆசிரியர் டி. எம். பார்த்தசாரதி, தமது மகன் பா. சந்திரனுக்கு வரலட்சுமியை வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக் கொண்டார். இந்தத் திருமணம், சென்ற மாதம் 13-ம் தேதி சென்னையில், ஸி. என். அண்ணாத்துரை தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

மோஹினி ராஜகுமாரி

திரை யுலகிற்கு வருவதற்கு திக்குத் தெரியாமல் திண்டாடுவோர் ஆயிரக் கணக்கானவர்கள். திரையுலகிற்கு வந்த பின்னரும் புகழுலகை அடைய முடியாமற் தவிப்போர் பலர். இவர்களுக் கெல்லாம் வழிகாட்டியாய்—வரப்பிரசாதியாய் — தஞ்சம் புகுந்தோருக்கு அஞ்சல் அளிக்கும்—திரையுலக கற்பக விருக்ஷமாய் விளங்குபவர்—''லே''னாதான் என்றால் மிகையாகாது. அவரால் கைதூக்கி விடப்பட்டு, நக்ஷத்திரங்களாக விளங்குபவர் அநேகர். அவரால் கண்டு பிடிக்கப் பட்டு, அவரது உலைக் கூடத்திலேயே உருவாக்கப்பட்டவர்தான் எலி. ஆர். ராஜ குமாரியும்.

காஞ்சீவரத்தில், ஒரு பிரபல சங்கீத பரம்ப

ரையில் பிறந்தவர் ரத்னம்மாள் என்பவர். அவ்வூரில் கிருஷ்ணப்ப முதலியார் என்பவரிடம் அவர் சங்கீத சிக்ஷை சொல்லிக் கொண்டார். சங்கீதக் கச்சேரிகள் செய்து பிரபலம் அடையவேண்டுமென்று அவர் தீவிரமாய் முயன்றார். ஆனால். அந்த நோக்கத்தில் அவருக்கு தகுந்த வெற்றி கிடைக்கவில்லை. பிறகு. அவர் கொஞ்ச காலம் நடிப்புக் கலையிலும் ஈடுபட்டிருந்ததாகத் தெரிகிறது. மேற்கூறிய ரத்னம்மாளின் ஏக புத்திரிதான் இம்மாதம் வர்ணனைக்கு அகப்பட்டிருக்கும் ஸி. ஆர். ராஜகுமாரி. அவர் ஸ்ரீமுக (1934) வருஷம் பங்குனி மாதம் 30-ந்தேதி, வியாழக்கிழமையன்று காஞ்சிவரத்தில் பிறந்தவர்.

ரத்னம்மாள் தாம் பிரபலப் பாடகியாக வேண்டும் என்ற நோக்கத்தில் வெற்றி பெறாததனால், ‘தம் பெண்ணையாவது சங்கீதத்திலும். படிப்பிலும் மிகத் தேர்ச்சிபெறச் செய்யவேண்டும்’ என்று தீர்மானித்துக்

லாவண்யா

கொண்டார். ஐந்தாவது வயதிலேயே ராஜகுமாரி காஞ்சிவரத்திலுள்ள டி. ஆர். எஸ். பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்பட்டார். அதே சமயத்தில் பிரபல காஞ்சீவரம் எல்லப்ப நட்டுவனுரிடம் பரத சிக்ஷை பெறவும் ஏற்பாடு செய்யப்பட்டது. அவரிடம் ராஜகுமாரி முதலில் மூன்று வருஷ காலம் சிக்ஷை பெற்ருர். பிறகு ஸ்ரீ. எல்லப்பா கல்கத்தாவிலுள்ள சிலருக்கு சிக்ஷை சொல்லித் தருவதற்காக கல்கத்தா சென்ருர். அவர் அங்கேயே இரண்டு வருஷ காலம் தங்கிவிட்டதால் ராஜகுமாரியும் நடனம் பயிலுவதை இரண்டு வருஷ காலத்திற்கு நிறுத்தவேண்டியதாயிற்று. அவர் திரும்பி வந்ததும், ராஜகுமாரி அவரிடமே மீண்டும் பயிற்சி பெறத் தொடங்கினுர்.

ராஜகுமாரி பள்ளியில் படித்தபடியே நடனத்தையும் பயின்று வந்தார். இப்படியாக ராஜகுமாரி பனிரண்டு வயதை அடைந்தபோது, பள்ளியில் மூன்ருவது பாரத்தையும், நடனத்தில் அரங்கேற வேண்டிய தேர்ச்சியையும் அடைந்திருந்தார். அந்த சமயத்தில்தான் ரத்னம்மாள் தமது பெண்ணுடன் ஜாகையை சென்னைக்கு மாற்றிக் கொண்டார். அத்துடன் ராஜகுமாரி படிப்பையும், நடன

சிக்ஷையையும் முடித்துக் கொண்டார். சென்னைக்கு வந்த சில தினங்களுக்குப் பிறகு, தாயார் மகளின் அரங்கேற்றத்திற்கும் ஏற்பாடு செய்து வைத்தார். இந்த அரங்கேற்றல் கச்சேரி—சென்னை கோகலே ஹாலில் 1947-ம் வருஷம், அக்டோபர் மாதம், 24-ந் தேதியன்று புரபஸர் பி. சாம்பமூர்த்தி அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அதன் பிறகு ராஜகுமாரி வெளிக் கச்சேரிகளுக்குச் செல்ல முற்பட்டார்.

ராஜகுமாரி நடனத்துடன் நின்று விடுவது தாயாருக்குப் பிடிக்கவில்லை. ஆதலால், சென்னைக்கு வந்ததும் முடி கொண்டான் வேலுசாமி என்பவரிடம் மகள் கொஞ்ச காலம் சங்கீத சிக்ஷை சொல்லிக் கொண்டார். பிறகு காக்கினாடாவைச் சேர்ந்த சங்கீத வித்வான் ராஜேஸ்வர ராவ் என்பவரிடம் அவர் ஹிந்துஸ்தானி சங்கீதத்தைக் கற்றுக் கொள்ளத் தொடங்கினார். அவரிடமே தான் அவர் இப்பொழுதும் சங்கீதம் பயின்று வருகிறார்.

சென்னையில் தம் சிநேகிதி ஒருவரின் வீட்டில் தங்கிய ரத்னம்மாவைப் பற்றியும், அவரது குட்டி நடன புத்திரியைப் பற்றியும்—அப்போது "கிருஷ்ண பக்தி" படத்தைத் தயாரித்துவந்த கிருஷ்ணா பிக்சர்ஸ் "லே"னா செட்டியார் கேள்விப் பட்டார். பிறகு அப் பெண்ணின் ஆட்டத்தையும் பார்த்தார். பின்னர், அவர் சிறுமி ராஜகுமாரியை எம். கே. சரோஜாவுடன் ஜோடி சேர்த்து. "கிருஷ்ண பக்தி"யில் ஒரு தில்லானா நடனத்தை ஆடும்படியும் செய்து விட்டார். "கிருஷ்ண பக்தி"யில் ஆடிக் கொண்டிருந்த போதே—"லே"னா வின் சிபார்சின் பேரில்—மேற்சொன்ன புது ஜோடிக்கு "நல்லதம்பி" படத்திலும் நடனம் ஆடும் சந்தர்ப்பம் கிடைத்தது. இவ்விரு படங்களிலும் ராஜகுமாரியின் நடனம் அழகாக அமைந்து விட்டதால்

ராஜாம்பாள்

மதன மோகினி

அவர் படவுலகில் வைத்த கால் வழுக்கி விடவில்லை. அதற்கு மாருக, அவர் படங்களில் பாத்திர மேற்று நடிக்கவும் துணிந்தார். டி. ஆர். மஹாலிங்கம் நடித்த "லைலா மஜ்னு" படத்தில் பால கையிஸாக ஆண் வேஷத்தில் நடித்தார். அது சிறிய வேஷமே என்ருலும், பாத்திரம் ஏற்று நடிக்கும் திறமையும் அவருக்கு இருக்கிறது என்பது நன்கு தெரிய வந்தது. அந்த சந்தர்ப்பத்தை கை நழுவவிடாது "லெ"னு ராஜகுமாரிக்கு "வன சுந்தரி" படத்தில் கொஞ்சம் பெரிய வேஷத்தையே கொடுத்து நடிக்கச் செய்தார். அப் படத்தில் ராஜகுமாரி 'வெடுக் வெடுக்'கென்று பேசி, "பரவாயில்லை" என்று கூறும்படியாக நடித்திருந்தார். அதன் பிறகு, ராஜகுமாரிக்கு பட உலகில் ஆதரவு அதிகரிக்கலாயிற்று. ஆனல், அவரது நடிப்பைவிட நடனத்தையே படமுதலாளிகள் பயன்படுத்திக்கொள்ள முற்பட்டனர். "லாவண்யா", "பிச்சைக்காரி", "ராணி", "பசியின் கொடுமை", "சின்னதுரை", "தந்தையும் மகளும்" ஆகிய அரை டஜன் படங்களில் அவர் தனியாகவும், ஜோடியாகவும் நடனம் ஆடி முடித்தார். பின்னர், "ராஜாம்பாள்" படத்தில்தான் மீண்டும் அவருக்கு நடிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அப்படத்தில் தாஸி பாலாம்பாளாகத் தோன்றி திருப்திகரமாய் நடித்திருக்கிருர். சிக்கிரமே வெளிவரவிருக்கும் ஜுபிடர்-லாவண்யா

வனசுந்தரி



[தொடர்ச்சி 84-ம் பக்கத்தில்]

குண்டூசியைக் கேளுங்கள்

சினிமா, நாடகம், நடனம், சங்கீதம் ஆகிய கலைகள் சம்பந்தமாக உங்களுக்குள்ள சந்தேகங்களைத் தீர்ப்பதற்கே இந்தப் பகுதி ஏற்பட்டிருக்கிறது. யாருடைய மனமும் நோகாதபடி தமாஷாகவே பதிலளித்து, மேற்சொன்ன கலைகளைச் சீர்திருத்துவதே என்னுடைய நோக்கமாகும்.

''தமிழ்ப் பித்தன்'' (வடக்கன் குளம்)

சாந்தாராம் ''டாக்டர் கோட்னிஸ்'' படத்தை ஆங்கிலத்தில் வெளியிட்டது போல், ''சந்திரலேகா''வையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டால் வெற்றி பெறுமா?

மேல் நாட்டில் மிக வெற்றி பெற்ற படங்கள் இந்தியாவிலும் சிறந்த வெற்றி பெற்றிருக்கின்றன. ஆதலால், இந்தியாவில் கோடிக் கணக்கானவர்களால் ரஸிக்கப்பட்ட இப்படமும் ஆங்கிலத்தில் வெளிவந்தால் இதர நாட்டவர்களால் நன்கு வரவேற்கப்படும் என்று தீர்மானிக்கலாம். ஆங்கில வர்ணனையுடன் தயாரிக்கப் பட்டுள்ள ''சந்திரலேகா'' சீக்கிரமே மேனாட்டில் திரையிடப்பட விருக்கிறது.

சுப்பய்யா (செட்டிநாடு)

பிரேமாவதி ஏன் படத்தில் நடிக்கவில்லை? அவரது விலாஸம் என்ன?

ஏன்; அவருடைய சிறந்த செய்கைக்காக நீர் வாழ்த்துக் கூற விரும்புகிறீரோ?

ராவணன் (புதுவை)

தாங்கள் எப்பொழுதும் என். எஸ். கிருஷ்ணனைத் தாக்கி எழுதுவதற்குக் காரணம் என்ன? அவர் உங்களுக்கு ஏதேனும் துரோகம் செய்தாரா?

அவர் துரோகமும் செய்யவில்லை; எனக்கு அவர்மீது மனஸ்தாபமும்கிடையாது. அவரை எப்பொழுதும் நான் தாக்கி எழுதுவதாகக் கூறுவதும் பெரும் தவறு. அவரது ஹாஸ்ய நடிப்பு சிறப்பாக அமையும்போது நான் பாராட்டவே செய்கிறேன். ஆனால், அரசியல், மத விஷயங்களில் அவர் தலையிட்டுச்செய்து வரும் அதிகப் பிரசங்கங்களைத் தான் கண்டிக்கிறேன்.



'நான் பெரியவள் ஆனதும் இதுபோல நிஜ மோட்டாரே வாங்கிவிடுவேன், தெரியுமா?' என்று இந்தக் குழந்தை ஏவி. எம். ''செல்லப் பிள்ளை''யில் கூறுகிறாப் போலிருக்கிறது.

இராம. சோமசுந்தரம் (புதுக்கோட்டை)

பிரபல லதா மங்கேஷ்கருக்குத் தமிழ் தெரியுமா? நீங்கள் பேட்டி கண்டபோது எந்த பாஷையில் பேசினார்?

அவருக்குத் தமிழ் தெரியாது. பேட்டி கண்டபோது ஹிந்தியில்தான் பேசினார்.

எஸ். கிருஷ்ண குமார் (சென்னை)

பண்டரி பாயின் புதிய வீட்டு விலாஸத்தைத் தெரிவிக்கவும்.

நெ. 7, சரவண முதலி தெரு, தியாகராயநகர், சென்னை – 17.

அப்துல் ஸலிம் (தைப்பிங், மலேயா)

வைஜயந்திமாலா தற்போது எந்தப் படத்தில் நடித்து வருகிறார்? அவர் கரன் திவானின் வாழ்க்கைத் துணைவியாக ஆகி விட்டாரா?

இது ஆதாரமற்ற செய்தி. அவர் கரன் திவானுக்குத் துணைவியாகிவிட்டால்அவருடைய பாட்டிக்குயார் துணையிருப்பார்கள்! வைஜயந்தி தற்போது ஏவி. எம். தயாரித்து வரும் "லட்கி" (ஹிந்தி), "பெண்" (தமிழ்), "பில்லா" (தெலுங்கு) ஆகிய மூன்று பாஷைப் படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறார். மற்றும் பம்பாயில் தயாராகிவரும் "மிஸ்மாலா" (தமிழ், தெலுங்கு, ஹிந்தி) படங்களிலும் அவர் நடித்து வருகிறார்.

டி. ஜெயராமன் (சிதம்பரம்)

டி. ஆர். ராஜகுமாரிக்கு விவாஹம் ஆகி விட்டதா? குழந்தைகள் உண்டா?

படங்களில் பல ஆடவர்களைக் காதலித்தும், கல்யாணம் செய்து கொண்டும் அவர் சலித்துப் போய் விட்டார்! அசல் வாழ்க்கையில் அவர் நிஜமாகவே மணந்து கொண்டால் அது நடிப்பாக முடிந்து விடுமோ என்று பயப்படுகிறார் போலிருக்கிறது! அவர் வீட்டில் குழந்தைகளுக்குக் குறைவே யில்லை. ஆனால், அவை அவருடையவை அல்ல!

எம். கோபால் ராவ் (செகந்தராபாத்)

தெலுங்கிலும், தமிழிலும் இப்பொழுது ஏராளமான சமூகப் படங்கள் வந்து கொண்டிருக்கின்றன. இவைகளைப் பார்த்

"நல்ல வேளை! காய்ச்சலாக படுத்தபோதிலும் (புஷ்பவல்லியின்) உடம்பு இளைக்கவில்லை" என்று பி. கே. சரஸ்வதியிடம் குமாரி கூறுகிறார் போலிருக்கிறது. பிரஸாத் ஆர்ட் புரொடக்ஷன்ஸ் தயாரித்து வரும் "பெற்ற மனம்" தமிழ்ப் படத்தில் இக்காட்சியைக் காணலாம்.



எம். கே. டி. பாகவதர் முதல் முறையாய் நடிக்கும் ''புது வாழ்வு'' சமூகப் படத்தின் ஷூட்டிங்கின் போது எடுக்கப்பட்ட படம் இது. படத்தில் ஜித்தன் பானர்ஜி, மாதுரி தேவி, ஜி. ராமனுதன், குமாரி துளசி, எம். கே. டி. பாகவதர் ஆகியோரைக் காணலாம்.

துப் பார்த்து ரஸிகர்கள் மிகச் சலிப்புறத் தொடங்கி விட்டனர். இவைகளால் நன்மை சொற்பம்: ஆனால், தீமைகளோ ஏராளம். உங்கள் அபிப்பிராயம் என்ன?

தற்போது வெளிவரும் சமூகப் படங்களில் பல வெறுக்கத் தக்கவையாக இருப்பது உண்மைதான். அதற்காக, சமூகப் படங்களே வெறுக்கப்பட வேண்டியவை என்று நினைப்பது தவறு. சமூக நலத்திற்கு முதல் ஸ்தானமும், சுய நலத்திற்கு இரண்டாவது ஸ்தானமும் அளித்து நம் பட முதலாளிகள் படங்களைத் தயாரிக்க முற்பட்டால் இந்தக் குறை நீங்கி விடும்.

'லக்கி' (கும்பகோணம்)

''ஔவை கூழுக்கும், கம்பன் பொன்னுக்கும் பாடினார்களே; அது 'பிளாக் மார்க்கெட் இல்லையாடி?'' —என்று வசனம் எழுதியுள்ள கருணாநிதியும் காசுக்காகத்தானே எழுதியிருக்கிறார்? ஆகவே, இதையும் 'பிளாக் மார்க்கெட்' என்றே சொல்லலாம் அல்லவா?

கம்பனும், ஔவையும் பிளாக் மார்க்கெட் செய்தார்களோ இல்லையோ! ஆனால், கருணாநிதி போன்ற சில கருஞ்சட்டை வசனகர்த்தாக்கள் இப்பொழுது சினிமா மார்க்கெட்டை 'பிளாக்'-மார்க்கெட்டாகச் செய்து வருகிறார்கள் என்பது உண்மை!

ஆர். பிரகாசம் (கோட்டையூர்)

என். எஸ். கிருஷ்ணனிடம் சில முக்கிய விஷயங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டியிருப்பதால் அவரது விலாஸத்தைத் தெரிவிக்கவும்.

''என். எஸ். கிருஷ்ணன், தாண்டவராயன் தெரு, ராயப்பேட்டை, சென்னை—*14*'' என்று எழுதும்.

தமிழ் நாடெங்கும் இப்பொழுது சக்கை போடு போட்டுக் கொண்டிருக்கும் ஸ்ரீ கிருஷ்ணா பிக்சர்ஸின் ''மருமகள்'' படத்தில் ஒரு நல்ல மருமகளாய் நடித்திருக்கும் பத்மினி.

எஸ். நாகூர்கனி (கொழும்பு)

பானுமதி, கிரிஜா, பண்டரீபாய் இம் மூவருள் நடிப்பில் சிறந்தவர் யார்?

பானுமதியின் 'பழுத்த' நடிப்புடன் மற்ற இரு இளம் 'பிஞ்சு'களின் நடிப்பை ஒத்திட்டதே தவறு.

எஸ். எஸ். அலாவுதீன் (மதுரை)

நீங்கள் ஹிந்தி நக்ஷத்திரங்களின் வாழ்க்கை வரலாறுகளை வெளியிடுவது பற்றி மிக மிக சந்தோஷம். நிம்மியின் வாழ்க்கை வரலாற்றை வெளியிடுவீர்களா?

நிம்மி மட்டுமென்ன? வட இந்தியப் பிரபல நக்ஷத்திரங்கள் அத்தனை பேருடைய வரலாறுகளும் ''குண்டூசி''யில் வெளிவரும்.

எஸ். மார்ட்டின் (வடகரை)

ஜெமினி வாஸன் அவர்களின் விலாஸத்தைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

எஸ். எஸ். வாஸன், எலியட்ஸ் ரோடு, மைலாப்பூர், சென்னை—4 என்பது அவர் விலாஸம்.

கோ. முருகையா (கவுந்தப்பாடி)

உங்கள் பத்திரிகையில் வெளியிடுவதற்கு கட்டுரைகள், கதைகள் எவ்வாறு இருக்கவேண்டும்? சினிமா சம்பந்தமானவைகளாகவே இருக்கவேண்டுமா?

சென்ற ஐந்து ஆண்டுகளாக 'குண்டூசி'யில் சினிமா சம்பந்தமான கதைகளையும், கட்டுரைகளையுமே வெளியிட்டுவந்தேன். ஆனால், நேயர்கள் ஒரே மாதிரியான கட்டுரை, கதைகளையே அனுப்பி வருவதால், இனி இம்மாதம் முதல் எந்தவிதமான கதைகளையும் ஏற்றுக்கொள்ளுவது என்று தீர்மானித்திருக்கிறேன். ஆனால் கட்டுரைகள் மட்டும் கலைகள் சம்பந்தமானவைகளாகத்தான் இருக்க வேண்டும்.

ராம. மெய்யம்மை (கோட்டையூர்)

அங்கமுத்துவுக்கு ஆண் வேஷமும், புளிமூட்டை ராமசாமிக்கு பெண் வேஷமும் போட்டால் படம் சோபிக்குமா?

இதேபோல அவர்களுடைய பெயர்களையும் மாற்றி வைத்துவிட்டால் மிகப் பொருத்தமாயிருக்கும்! ஆனால் இந்த வேஷம் மாற்றும் யோசனையை இப்பொழுதே மறந்துவிடும். பெண் வேஷத்திலேயே மிகப் பயங்கரமாய் நடிக்கும் அங்கமுத்து ஆணாக மாறிவிட்டால் நம்மால் தாங்கமுடியாது!

என். எம். மரைக்காயர் (அனுராதபுரம்)

படங்களில் காதல் கட்டங்களில் தோன்றி அழகாக நடிக்கும் நடிகைகள் அசல் வாழ்க்கையிலும் அதே போல் நடிப்பார்களா?

அது போல் நடிக்க முற்பட்டால்தான் உம் போன்ற ரஸிகர்களின் பாடு வேட்டையாய் இருக்குமே! ஆனால், அவர்களது நடிப்புத் திறமைதான் படங்களில் நடிப்பதற்கே போதவில்லையே!

எஸ். ஞானப்பிரகாசம் (யாழ்ப்பாணம்)

''பராசக்தி''யில் எல்லோர் மனதையும் கவரும்படி நடித்த கணேசன் ஏன் ''பணம்'' படத்தில் பலரும் இகழும்படி நடித்திருக்கிறார்?

''பராசக்தி''யை அவர் பன்முறை நாடகமேடையில் நடித்திருப்பது இதற்குக் காரணமாய் இருக்கலாம்.

சேந்தன் (அச்சுவேலி, இலங்கை)

கவிஞர் கம்பதாஸன் ஏதேனும் படத்தில் நடித்திருக்கிறாரா என்பதைத் தெரிவிக்கவும். இதுபற்றி இங்கு நண்பர்களிடையே ஒரு பெரிய சர்ச்சை இருந்து வருகிறது.

''மங்கையர்க்கரசி'' படத்தில் கவியாக நடித்திருப்பவர் கம்பதாஸன்தான்.

த. சிங்கம் (யாழ்ப்பாணம்)

பானுமதியின் விலாஸம் என்ன? அவருக்கு தற்போது வயது என்ன?

பானுமதிக்கு தற்போது வயது 29 ஆகிறது. விலாஸம் :– மலோனி ரோடு, தியாகராயநகர், சென்னை – 17.

கே. எஸ். மணி (திருத்தணி)

தங்கள் பத்திரிகைக்கு பட விமர்சனங்களை எழுதி அனுப்பினால் வெளியிடுவீர்களா ?

விமர்சனங்களை வெளியிடுவதற்கில்லை. ஆனால், ஒரு படத்தில் நீர் பார்க்கும் ஒரு சில நல்ல அல்லது கெட்ட அம்சங்களைப் பற்றி மட்டும் சுருக்கமாக எழுதி அனுப்பினால் வெளியிடுவோம்.

கே. டி. சின்னராஜ் (வடமலைபுரம்)

''மறு பிறப்பில் ஒரு நடிகனாக ஆக வேண்டும்'' என்று நான் அடிக்கடி கனவு காண்கிறேன்.

உம் புத்திசாலித்தனத்திற்காக நான் உம்மை மிக மெச்சுகிறேன்! 'இந்தப்பிறப்பிலேயே நடிகனாகிவிட வேண்டும்' என்று பல நேயர்கள் என் பிராணனை வாங்கி வருகிறார்கள்!

* * *

நடிகைகளைக் கல்யாணம் செய்து கொள்ளவேண்டுமென்று நேயர்கள் சதா

''வாழப் பிறந்தவள்'' டி. ஆர். ராஜகுமாரி ரொம்பவும் வருத்தப்படும்படி பண்டரி பாய் என்ன சொல்லிவிட்டாரோ தெரியவில்லையே ? இது ஆர். ஆர். பிக்சர்ஸின் தமிழ்ப் படம்.



கடிதம் எழுதி வருகிறீர்களே, இதற்கு என்ன உபாயம்?

தற்போதுள்ள பைத்தியக்கார ஆஸ்பத்திரிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதே இதற்கு சிறந்த உபாயம்!

எஸ். கண்ணன் (தோசப்பாடு)

''பராசக்தி'' படத்தில் நடித்த கணேசனை ''சிவாஜி கணேசன்'' என்று குறிப்பிடக் காரணம் என்ன?

நாடகமேடையில் சிவாஜி வேஷத்தை அவர் திறம்பட நடித்ததால் அவரை ''சிவாஜி கணேசன்'' என்று ஜனங்கள் குறிப்பிடத் தொடங்கி விட்டார்களாம்.

துரை, முருகேசன் (காரமடை)

சினிமா சிங்காரிகளின் உருவங்கள் சிகரெட் பீடி விளம்பரங்களில் உபயோகிப்பதிலிருந்து என்ன தெரிகிறது?

பீடி, சிகரெட் தயாரிப்பாளர்கள்கூட சினிமாப் பார்க்கிறார்கள் என்பது தெரிகிறது! இதைச் சொல்ல வந்துவிட்டீரே. ஒரு பிரபல நக்ஷத்திரத்தின் உருவப் படம் சென்னையில் ஒரு தியேட்டரில் கக்கூஸ் சுவற்றில் காணப்படுகிறது. அதற்கென்ன சொல்கிறீர்!

* * *

நம் நாட்டு நடிக, நடிகைகளுக்கு எதில் ஆசை அதிகம்?

பிணம் ஆவதற்குள் ஏராளமாய் பணம் சேர்த்துவிடுவதில்தான்!

பி. துரைராஜ் (டிக்கோயா, இலங்கை)

டி. கே. பட்டம்மாளும், பி. ஏ. பெரியநாயகியும் ஏன் இப்பொழுதெல்லாம் முன்போல் அடிக்கடி பின்னணி பாடுவதில்லை?

வெல்லம் இனிப்புதான் என்றாலும் அதிகமாய் சாப்பிட முடியாதல்லவா?

''குண்டூசிப் பித்தன்''

(சுல்தான்பேட்டை)

வைஜயந்தி தற்போது யாருடைய மேற்பார்வையில் இருக்கிறார்?

பாட்டியின் மேற்பார்வையில்தான் இருக்கிறார் என்று சொல்ல வேண்டும். ஏனென்றால், அவருடைய தகப்பனார் வைஜயந்தியின் முகத்தைப் பார்ப்பதற்கு நிமிர்ந்துதான் பார்க்கவேண்டியிருக்கிறது!

கே. ஆர். பாலு (சென்னை)

சினிமா டெக்னிக் சம்பந்தமான நுணுக்க விஷயங்களைப்பற்றிக் கேட்டால் நீர் பதிலளிப்பீரா?

இந்த மாதிரி விஷயங்களை —காரியதரிசி, சினி டெக்னீஷ்யன்கள் சங்கம், தியாகராய நகர், சென்னை – 17— என்ற விலாஸத்திற்கு எழுதிக் கேளும்.

''மறவன்'' (நெற்குப்பை)

ஸி. என். அண்ணாத்துரை மு. கருணாநிதி இருவருள் யார் அதிகப் படங்களுக்கு வசனம் எழுதியுள்ளார்?

மு. கருணாநிதிதான் அதிகப் படங்களுக்கு வசனங்கள் எழுதியிருக்கிறார்.

''சின்னச் சின்ன வீடு கட்டி'' மாப்பிள்ளை-பெண்ணாக வாழப் போகும் மாஸ்டர் சுதாகரையும், பேபி சரஸ்வதியையும் ''மருமகள்'' தமிழ்ப் படத்தில் நீங்கள் சந்திக்கலாம்.



இந்தமாதிரி நோட்டு நோட்டாய் நிறையப் பணம் கிடைத்தால் ராஜகுமாரி "பணக்காரி" ஆவதற்குக் கேட்கவும் வேண்டுமா? கே. எஸ். கோபாலகிருஷ்ணனின் டைரெக்ஷனில் தயாராகியுள்ள ஆர். ஆர். பிக்சர்ஸின் "பணக்காரி" படத்தில் இக் காட்சியைக் களிக்கலாம்.

எஸ். பஹ்ருதீன் (கோட்டைக்குப்பம்)

ஹிந்தி (ஸ்டன்ட்) நடிகர்களான நாடியாவும், ஜான் கவாஸும் தற்போது என்ன செய்து வருகிறார்கள்?

படத்தில் நடிக்கவில்லை. ஒரு வேளை எங்காவது மரத்திற்கு மரம் தாவிக் கொண்டிருக்கிறார்களோ என்னவோ!

ஏ. சாமுவேல் (மண்குழி)

அஞ்சலிதேவி, மாதுரிதேவி, பானுமதி, சுந்தரிபாய், பி. எஸ். சிவபாக்கியம்—ஆகியோரில் 'வில்லி' நடிப்பில் சிறந்தவர் யார்?

பி. எஸ். சிவபாக்கியம், சுந்தரிபாய் இருவரையும் கூறலாம்.

ஆர். ராஜகோபன் (கூத்தூர்)

பி. எஸ். கோவிந்தன் தற்போது எப் படத்தில் நடித்து வருகிறார்?

சென்ற வருஷம் அவர் நடித்த படமொன்று 'கோவிந்தா' ஆயிற்று. இந்த வருஷம் அவர் நடித்துக் கொண்டிருந்த படக் கம்பெனி யொன்று 'கோவிந்தா' ஆகிவிட்டது! அவர் இப்பொழுது எந்தப் படத்திலும் நடிக்கவில்லை.

ஏ. என். கிருஷ்ணன் (பாலக்காடு)

மனோஹர், ஜெமினி கணேசன், என். டி. ராமராவ்—ஆகிய மூன்று பேரில் அழகு, நடிப்பு இந்த இரண்டிலும் யாருக்கு முதல் ஸ்தானம் அளிக்கலாம்?

என். டி. ராமராவுக்கு அந்தப் பெருமையை அளிக்கலாம்.

நா. கணபதி பிள்ளை (மட்டக்களப்பு)

"பராசக்தி" படத்தில் நம்ப முடியாத பல சம்பவங்களை திணித்து, ஏன் தோழர் கருணாநிதி கதையை எழுதினார்?

பழம் புராணக் கதைகளில் வரும், நம்ப முடியாத சம்பவங்களை கருணாநிதியால் சகித்துக் கொள்ள முடியாது. ஆனால், அவரது கதையில் வரும் நம்ப முடியாத சம்பவங்களை நாம் சகித்துக் கொள்ளத்தான் வேண்டும். ஏனென்றால், "பராசக்தி" ஒரு சீர்திருத்தச் சமூகக் கதை என்பதனால்!

எஸ். ஏ. நவரத்தினம் (பாஹாங், மலாயா)

"பில்மிந்தியா" என்ற வட இந்திய ஆங்கிலப் பத்திரிகை பெயருக்கு ஏற்ற மாதிரியில் தென்னிந்திய நக்ஷத்திரங்

களின் படங்களையும் வெளியிட்டு, அகில இந்திய சினிமாப் பத்திரிகையாக விளங்காததேன்?

"சந்திரலேகா" வெளிவரும் வரையில் "தமிழர்களுக்குப் படமே எடுக்கத் தெரியாது; தமிழ் பாஷை நாராசம்" என்றெல்லாம் அவர் பிதற்றிக் கொண்டிருந்தார். ஆதலால் அவர் அகில இந்திய மனப்பான்மையை அடைவதற்கு இன்னுமொரு கால் நூற்றாண்டாவது ஆகவேண்டும்.

வி. டி. ரவிசாலா (தஞ்சை)

ஆந்திர ராஜ்யப் பிரிவினையால் தமிழ் மக்களின் அபிமானம் பெற்ற ஆந்திர நக்ஷத்திரங்களும் பிரிந்து விடுவார்களா?

நாம் வெறுமனே கொண்ட அபிமானம் அல்லவே அது. கோடிக்கணக்கில் பணத்தைக் கொட்டிக் கொடுத்தல்லவா அவர்களை நக்ஷத்திரங்களாக்கியிருக்கிறோம்! ஆதலால் யார் எதைப் பிரித்துக் கொண்டு எங்கு சென்றாலும் நம் ஆந்திர நக்ஷத்திரங்கள் மட்டும் தம் கொள்ளை வாபத்தை விட்டுப் பிரிய மாட்டார்கள் என்பது நிச்சயம்! பயப்படாதேயும்!

எம். ஏ. ஜி. ராஜன் (கோபி)

"ரத்தக் கண்ணீர்" படத்திற்கு யார் வசனம் எழுதுகிறார்?

தங்கராசு என்பவர்.

டி. என். ராகவன் (யாழ்ப்பாணம்)

கே, பி. சுந்தராம்பாள் எந்தெந்தப் படங்களில் நடித்து வருகிறார்?

அவர் சென்ற ஐந்து வருஷ காலமாய் நடித்துக் கொண்டிருக்கும் ஒரே படம் "ஔவையார்" தான். இந்தப் படமில்லையென்றால் சினிமா உலகிற்கும் அவருக்கும் பல வருஷங்களுக்கு முன்பே தொடர்பு விட்டுப் போயிருக்கும்.

கிருஷ்ண குமாரி

இம்மாதம் வெளிவரவிருக்கும் ஜூபிடர்-லாவண்யா கூட்டுத் தயாரிப்பான "மனிதன்" தமிழ்ப் படத்தில் மனதைக் கவரும் வண்ணம் நாட்டியளிப்பாராம் கிருஷ்ணகுமாரி.

ஸி. ஆர். ராஜகுமாரி

விநியோகஸ்தர்கள் : தமிழ் நாடு, மலபார், வெளிநாடு, சென்னை நகரம்

ஏவி. எம். லிமிடெட், சென்னை-2.

மானகிரி 'லேஞ'

படத்தொழிலுக்கும் பணலேவாதேவித் தொழிலுக்கும் இந்தக் காலத்தில்தான் நெருங்கிய சம்பந்தம் ஏற்பட்டுள்ளது என்று நினைக்க வேண்டாம். பதினைந்து வருஷங்களுக்கு முன்பாகவே முதன் முதல் அந்த சம்பந்தம் ஏற்பட்டு விட்டது. அதன் பலனாகத்தான், பரம்பரைத்தொழிலான பண லேவாதேவித் தொழிலைவிட்டு, இன்று பட உலகில் பிரபல புள்ளியாக இருந்து வருகிறார் மானகிரி லெக்ஷ்மணன் செட்டியார். 'யார் இந்த லக்ஷ்மணன் செட்டியார்?' என்றுதான் பலர் மூளையைக் குழப்பிக் கொள்ளுவார்கள். ''லேஞ'' என்று சொன்னால்தான் சட்டென்று புரியும்!

சினிமா உலகிலே ''லேஞ''வைத் தெரியாதவர்கள் இருக்க முடியாது. திரை உலகிலே புதிதாகப் பிரவேசிப்பவர்களை ஆதரித்து, ஆசி கூறி ஆளாக்கி விடுகிறவர் அவர்தான். சினிமாவில் சேரவேண்டுமெனயாராவது சென்னைக்கு வந்தால் அவர்கள் முதலில் போய்ப் பார்ப்பது ''லேஞ''வைத்தான். அவர், தம் படத்திலே சந்தர்ப்பம் கொடுக்க முடிந்தால் கொடுப்பார். இல்லையெனில் வேறு எங்காவது சிபார்சு செய்து சந்தர்ப்பம் வாங்கிக் கொடுப்பார். இன்று பட உலகில் பிரபலமாக இருக்கும் பல நடிகர், நடிகைகள், பின்னணிப் பாடகிகள் முதலியோர் அவரால் இத்துறையில் அறிமுகம் செய்யப்பட்டவர்கள்தாம்.

ராமநாதபுரம் ஜில்லாவிலுள்ள மானகிரி என்றஊரில் 1904ம் வருஷத்தில் பிறந்தவர்தான் ''லெஞ'' செட்டியார் அவர்களுடைய பரம்பரைத்தொழிலான லேவாதேவித் தொழிலையே அவரது தந்தை சோமசுந்தரம் செட்டியாரும் செய்து வந்தார். ''லேஞ''வுக்கு பள்ளிப் படிப்பு அதிகம்கிடையாது. அவரும் தந்தையின் தொழிலில்தான் முதலில் பிரவேசித்தார். என்றாலும், அதில் அவரது நாட்டம் செல்லவில்லை.

1928ம் வருஷம், காரைக்குடியில் ''கிருஷ்ணா மோட்டார்'' கம்பெனி என்ற பெயரில் இவர் ஒரு மோட்டார் கம்பெனியை ஆரம்பித்து நடத்தினார். அந்தக் காலத்திலே 'செவர்லெட்' மாடல் கார்களுக்கு இக் கம்பெனிதான் ஏஜன்ஸி எடுத்திருந்தது. அப்பொழுதெல்லாம் ''லேஞ'' தொழில் விஷயமாக சதா கால



''லெ''ஞ மோட்டார் சைக்கிள் சவாரி செய்கிறார்.

மும் மோட்டார் சைக்கிளில்தான் சுற்றிக் கொண்டிருப்பார்.

நாடகங்கள்மீது அவருக்கு அந்தக் காலத்திலேயே ஒரு பற்றுதல் உண்டு. மோட்டார் கம்பெனியை நடத்தியபடியே, 1932 ஆண்டு முதல் ஸ்பெஷல் நாடகங்களை கான்டிராக்ட் எடுத்து நடத்தினார். திருச்சி, காரைக்குடி நகரங்களில் அவர் எடுத்து நடத்திய நாடகங்கள் பல. அவைகளுக்கெல்லாம் நல்ல ஆதரவு கிடைத்தது. பிரபல நடிகரான எம். கே. தியாகராஜ பாகவதர் முதன் முதலில் மேடையில் ஏறி நடித்தது இவர் கான்டிராக்ட் எடுத்து நடத்திய "வள்ளி திருமணம்" என்ற நாடகத்தில்தான்.



மானகிரி "லெ"னா

காரைக்குடியில் "லெ"னா கான்டிராக்ட் எடுத்து நடத்திய "பவளக்கொடி" நாடகம், 1936ம் வருஷம் பிரமாதமான வசூலுடன் நடந்தது. அப்பொழுதுதான் பேசும் படங்கள் வர ஆரம்பித்த சமயம். "லெனா"வுக்கு "பவளக்கொடி"யை ஏன் பேசும் படமாகத் தயாரிக்கக்கூடாதெனத் தோன்றியது. ஏஎல். ஆர்எம். அளகப்ப செட்டியார் என்பவரை பாகஸ்தராகச் சேர்த்துக்கொண்டு, நாடகத்தில் நடித்த தியாகராஜ பாகவதர் — எஸ். டி. சுப்புலக்ஷ்மி ஜோடியையே படத்திலும் நடிப்பதற்கு ஒப்பந்தம் செய்து அதைப் படமாகத் தயாரித்து வெளியிட்டார்.

1927ம் வருஷம், ராஜகோபால் டாக்கீஸ் என்ற படத் தயாரிப்புக் கம்பெனியை சில பாகஸ்தர்களைச் சேர்த்து ஆரம்பித்தார். அவர், தமது மேற்பார்வையில் இக்கம்பெனிக்காக "கிருஷ்ணன் தூது" என்ற புராணப் படத்தைத் தயாரித்துக் கொடுத்தார். இப்படம் ஒருமுறை தீக்கிரையாகி மறுமுறை தயாரிக்கப்பட்டதாகும். பி. கண்ணம்பாவைத் தமிழ்ப் பட உலகுக்கு அறிமுகம் செய்து வைத்தவர் "லெ"னாதான்.

"லெ"னாவால் "கிருஷ்ணா பிக்சர்ஸ்" 1940-ம் வருஷத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இக்கம்பெனியின் தயாரிப்பாக அதே வருஷம் "கதம்பம்" என்ற முழுநீள ஹாஸ்யப் படத்தை வெளியிட்டார். அடுத்தபடி "பிரபாவதி"யைத் தயாரித்து வெளியிட்டார். "பிரபாவதி"யில், அப்பொழுது நக்ஷத்திரமாக இருந்தவர்களில் நடிக்காதவர்கள் யாருமே கிடையாது எனலாம்.

மூன்றாவதாக, "கிருஷ்ண பக்தி"யை 1945ம் வருஷம் தயாரிக்க ஆரம்பித்து 1947ல் திரையிட்டார். அதைத் தொடர்ந்து "வனசுந்தரி"யைத் தயாரித்தார். இப்பொழுது தமிழ் நாட்டில் வெற்றிகரமாக நடைபெற்று வரும் "மருமகளும்", ஆந்திராவில் திக்விஜயம் செய்துவரும் "அம்மலக்கலு" படமும் கிருஷ்ணா பிக்சர்ஸின் தயாரிப்புகள் தாம்.

பல நல்ல குணங்களுக்கு உறைவிடமானவர் "லெனா". கம்பெனி வாசலில் "எந்த வேலையும் காலி இல்லை" என்று எழுதிப் போடப் பட்டிருக்கிறது என்றாலும், அதற்காக வேலை தேடி உள்ளே வருகிறவர்கள் கடுமையாகப் பேசப்பட்டு வெளியே அனுப்பப்படுவது கிடையாது.

குதூகலன்

தியாகராயநகர் வாசிகளுக்கு அவசரமான—அவசியமான—ஒரு முக்கிய உதவி தேவை யென்றால் அவர்கள் சட்டென்று "லெனா"விடம்தான் ஓடிவருவார்கள். அவரிடம்

[தொடர்ச்சி 62ம் பக்கம் பார்க்கவும்]

நாட்டிய முத்திரைகள்

பிரபல நாட்டியக் கலை ஆராய்ச்சியாளரான ஸ்ரீ. அ. ரா. கிருஷ்ணமூர்த்தி நாட்டிய முத்திரைகளைப்பற்றி எழுதியிருந்த கட்டுரையை சென்ற மாத ஊசியில் படித்திருப்பீர்கள். இக் கட்டுரை அதன் இரண்டாம் பகுதியாகும்.

அ. ரா. கிருஷ்ணமூர்த்தி

ஆள்காட்டி விரலையும், பெருவிரலையும் நுனியில் சேர்த்து மற்ற விரல்களை மடக்கினால் 'கபித்த' முத்திரையாகும் என்பது முன் கட்டுரையில் விளக்கப்பட்டது. இந்த கையில் நடுவிரலையும் பெருவிரலோடு சேர்த்தால் **கடகாமுக** முத்திரையாகும். (கடைசி இரண்டுவிரல்களையும் நேராக நீட்டவேண்டுமென்பர் சிலர்) புஷ்பங்களை கொய்தல், புஷ்ப ஹாரம் அல்லது கழுத்து அணிகலம் எதையாவது ஏந்தியிருத்தல், வில்லின் நாணைப் பிடித்து மெதுவாக இழுத்தல், மடித்த வெற்றிலையைக் கொடுத்தல், வாசனை திரவியங்களை பூசுதல், முதலிய செய்கைகளையும், மேற் போக்கான பார்வை, பிரசங்கம் முதலியவைகளையும் இந்த முத்திரையினால் காட்டலாம்.

கடகாமுக முத்திரையில் ஆள்காட்டி விரலை உயர்த்திப் பிடித்தால் **ஸூசீ** முத்திரையாகும். ஒன்று என்ற எண்ணைக் குறிக்க, நூறு, அதைப்போல் என்பதைக் குறிக்க, பரப்பிரம்மம், சூரியன், உலகம், நகரம், தனிமை, கம்பு, உடல், குடை, சக்கரம், வட்டம், ஒரு நாளின் கடைசி நேரம், ஆச்சரியம், சாமர்த்தியம், சிகை யலங்காரம், பயமுறுத்தல், மெலிந்துபோதல், தாள வாத்தியத்தை வாசித்தல், குயவன் சக்கரத்தை திருப்புதல், விவரித்தல், முதலியவைகளை இந்த முத்திரை குறிக்கும்.

ஸூசி கையில் பெருவிரலை நீட்டினால் **சந்திரகலா** முத்திரையாகிறது. சந்திரனின் கலை, கங்கை, ஈஸ்வரனின் மகுடம், முகம், முதலியவைகளை இம்முத்திரை குறிக்கும்.

எல்லா விரல்களையும் பிரித்து முன்பக்கம் கொஞ்சம் வளைத்து, உள்ளங்கையையும் குழிவுடன் வைத்துக் கொண்டால் **பத்மகோச** முத்திரையாகும். பழங்கள், வில்வப்பழம், ஸ்திரீகளின் வட்டமான ஸ்தனங்கள், வட்டமான அசைவு, பந்து, சமையற் பாத்திரம், மொட்டு, எரும்புப் புற்று, தாமரை, முட்டை, புஷ்பச் செண்டு, புஷ்பக் கொத்து, புஷ்பமாரி, அல்லிப் புஷ்பங்களை சிதற இறைத்தல், முதலியவைகளை இந்த முத்திரை குறிக்கும்.

பதாகைக்கையில் விரல்களை கொஞ்சம் முன்பக்கம் வளைத்துக் கொண்டால் **சர்ப்பசிரஸ்** முத்திரையாகிறது. சந்தனம், பாம்பு, சத்துள்ளது, தேவதை ரிஷிகளுக்கு அபிஷேகம், பயில்வான்களின் உடல் தேய்ப்பு, யானைக்காதுகளின் அசைவு, நிதானம், தெளித்தல், இவைகளை இந்த முத்திரை குறிக்கும்.

சர்ப்பசிரஸ் முத்திரையில், பெருவிரலையும், கடைவிரலையும் நீட்டினால் **மிருகசீர்ஷ** முத்திரையாகும். கன்னம், ஸ்திரீ, மான் தலை, யாழ், படிகள், இருப்பிடம், வழக்கமான (கர்ம) பரியாதை, பெண்குறி, நடிகனின் உடை (நேபாத்யம்), பயம், விவாதம், அழைத்தல், பாதங்களை தடவுதல், குடை பிடித்தல், அடிவைத்தல், காதலியை அழைத்தல், திரிதல், முதலியவைகளை இந்த முத்திரை குறிக்கும்.

மிருகசீர்ஷக் கையில் மடித்த விரல்களின் நுனியை பெருவிரலால் தொட்டு,

ஆள்காட்டி விரலை நீட்டினால் சிம்ஹமுக முத்திரையாகிறது. முத்து, பவழம், ஜலத்துளி, வாசனைத் திரவியம், முயல், யானை, தாமரைமாலை, சிங்கத்தின் முகம், குதிரை, ஹோமம், மோக்ஷம், சிகை சீவுதல், குசப்புல்லை வீசுதல், மருந்து தயாரிப்பை பரிசோதித்தல், முதலியவைகளை இந்த முத்திரை குறிக்கும்.

பத்மகோசக் கையில் மோதிரவிரலை மடித்தால் லாங்குல முத்திரையாகும். லகுசபழம், குழந்தைகள் அணியும் சிறு மணிகள், பறவை, கொடி, பாக்குமரம், வெண் அல்லி, இளம் பெண்ணின் ஸ்தனம் முதலியவைகளை இந்த முத்திரை குறிக்கும்.

பத்மகோசக்கையில் எல்லா விரல்களையும் பிரித்து சிறு விரலை நோக்கி திருப்பினால் சோலபத்ம முத்திரையாகும். மலர்ந்த தாமரை, வில்வம், ஸ்தனம், முகம் பார்க்கும் கண்ணாடி, பூர்ணசந்திரன், அழகான பாத்திரம், சிகைக் கொண்டை, கிராமம், ஏரி, வண்டி, சக்ரவாகப் பறவை, அழகு, கோபம், உயரம், புகழுரை, வட்டமான அசைவு, காதலியிடமிருந்து பிரிவது, முணுமுணுப்பது, முதலியவைகளை இந்த முத்திரை குறிக்கும்.

மோதிர விரலின் அடியைப் பெருவிரல் நுனியால் தொட்டு, சிறுவிரலை தனியாக நீட்டி, மற்ற விரல்களைச் சேர்த்து நீட்டினால் சதுர முத்திரையாகிறது. வாசனை திரவியம், பொன், செம்பு, இரும்பு, கண், முகம், எண்ணெய், நெய், ஆசனம், நனைந்தது, வருத்தம், கொஞ்சம், ஜாதி வித்தியாசம், அத்தாட்சி, இனிமை, சரசமாடல், துண்டுகளாக உடைத்தல், மெதுவாக அடிவைத்தல் இவைகளை சதுர முத்திரை குறிக்கிறது.

பெருவிரல், நுனியையும் நடுவிரல் நுனியையும் சேர்த்து, ஆள்காட்டி விரலை உள் பக்கமாக வளைத்து, மற்ற விரல்களை நீட்டினால் பிரமர ஹஸ்தம் ஆகிறது. கருவண்டு, வண்டு, கிளி, சிறகு, கொக்கு (சாரசம்), கோகிலம், யோகம், முதலியவைகளைக் காட்ட இந்த முத்திரை உபயோகப்படுகிறது.

பெருவிரல், ஆள்காட்டி விரல் நுனிகளைச் சேர்த்து, மற்ற விரல்களை பிரித்து நீட்டினால் ஹம்ஸாஸ்ய முத்திரையாகும். இந்த முத்திரை ஆசீர்வதிப்பதைக் குறிக்கும். திருவிழா, முத்துக்கள், மல்லிகை, சித்திரம், தேய்த்துப் பரீக்ஷிக்கும் வஸ்து-





22. பிரமரம்
23. ஹம்ஸாஸ்யம்
24. ஹம்ஸபக்ஷம்
26. முகுளம்
27. தாம்ரசூடம்
28. திரிசூலம்

-கள், அக்கறை, நிச்சயம், "சோஹம்" என்பது, கடினமான வேலைகளை முடித்தல், உபதேசம் பெறுதல், விளக்கின் எரியும் பாகத்தை (திரியை) ஏற்றுதல், சித்திரம் வரைதல், தாலிக் கயிற்றை முணிதல், ஆராய்தல், கோடுகள் வரைதல், மாலைகளை ஏந்துதல் இவைகளை ஹம்ஸாஸ்ய முத்திரை குறிக்கும்.

சர்ப்பசிரஸக் கையில் கடைவிரலை நீட்டினால் **ஹம்ஸபக்ஷ** முத்திரையாகும். இது ஆறு என்ற எண், பாலம் கட்டுதல், நகங்களால் அடையாளம் செய்தல், ஒழுங்காக வைத்தல் முதலியவைகளைக் குறிப்பதாகும்.

பத்மகோச ஹஸ்தத்தில் விரல் நுனிகளைச் சேர்த்து, பிரித்து, சில தடவைகள் செய்தால் **சந்தம்ச** முத்திரை எனப்படும். மற்றமுத்திரைகளைப்போல் இதற்கு ஒரே நிலை என்று இல்லாமல், தொடர்ந்த ஒரே மாதிரியான அசைவுகளின் சேர்க்கையே ஒரு முத்திரை என சொல்லப்பட்டிருக்கிறது. சிறு ஜந்துக்கள், வீக்கம், ஐந்து என்ற எண், காயம், அர்ச்சனை, யக்ஞத்தில் அளிக்கப்படுபவை, விஷயங்களை சொல்லாமல் மறைத்தல் (ரகசியம்). பெருந்தன்மை முதலியவைகளை இந்த முத்திரை குறிக்கும்.

ஐந்து விரல்களின் நுனியையும் ஒன்றாக சேர்த்தால் **முகுள** முத்திரையாகும். அல்லிப் புஷ்பம், வாழைப் பூ, ஐங்கணை மாரன் (மன்மதன்), உண்ணுதல், ஒரு அடையாளத்தைப் பிடித்திருப்பது போன்றவைகளை இந்த முத்திரை குறிக்கிறது.

முகுள ஹஸ்தத்தில் ஆள்காட்டி விரலை பட்டும் மடித்தால் **தாம்ரசூட** ஹஸ்தமாகிறது. கோழி, கொக்கு (பகம்), காகம், ஒட்டகம், கன்று, எழுதுகோல் முதலியவைகளைக் குறிக்க இந்த முத்திரையை உபயோகிக்கலாம்.

ஒற்றைக் கைவரிசையில் கடைசியான **திரிசூல** முத்திரைக்கு, பெருவிரலையும், கடை விரலையும் மடித்து மற்ற விரல்களை சூலத்தின் முகத்தைப் போல நீட்ட வேண்டும். திரிசூலம், மும்மூர்த்தி. வில்வ பத்ரம், ஒன்றாக இருக்கும் மூன்று வஸ்துக்கள் முதலியவைகளைக் குறிக்க இந்த முத்திரை உபயோகப்படும்.

பரத முனிவரின் நாட்டிய சாஸ்திரத்தில் 24 ஒற்றைக்கைகள் (அசம்யுத ஹஸ்

'மதன மோஹினி' - ஒரு சித்திரவதை!

அழுது புலம்பச் செய்யும் ஹாஸ்யம் நிறைந்தது!

ஒரு சினிமாப் படத்தில் ஒரு கிராமியக் கதை. சரித்திர சம்பவம்—இப்படி எதாவது ஒரு பழங்கால விஷயத்தைக் காட்டி, நாகரீகத்தில் மூழ்கிக் கிடக்கும் தற்கால ரஸிகர்களின் எண்ணங்களைப் பின்னிழுத்துச் சென்று, கதை நடந்த முற்காலத்தில் லயித்துப் போகும்படிச் செய்வது சுலபமான காரியமல்ல. அதைச் சாதிப்பதற்காக சில ட்டமுதலாளிகள் லக்ஷக்கணக்கில் செலவழித்துத் தோல்வியுற்றிருக்கின்றனர். ஆனால் லிபர்ட்டி பிக்சர்ஸார் இந்த அரிய விஷயத்தில் பெரிய வெற்றி கண்டிருக்கின்றனர்! "மதன மோஹினி" படத்தைப் பார்த்தவுடன் என் எண்ணங்களெல்லாம்—இருபது வருஷங்கள் பின்சென்று, பேசும்பட ஆரம்ப காலத்தில் லயித்துவிட்டது! 1952ம் வருஷத்தில் 1932ம் வருஷத்திய தரத்தில் ஒரு படத்தைத் தயாரிப்பது லேசான காரியமா, சொல்லுங்கள்!

"மதன மோஹினி" கதையை எழுதுவதற்கு கதாசிரியர் கற்பனையைச் செலவழித்துக் கஷ்டப் படவில்லை. முன்பே வெளிவந்த சில படங்களிலிருந்து கதைச் சம்பவங்களை எடுத்துக்கொண்டு அவைகளை ஒன்று சேர்க்க முயற்சி செய்திருக்கிறார். அவ்வளவுதான். "சந்திரலேகா" அறிமுகப்படுத்திய ஜிப்ஸி கூட்டம் என்றுதான் சினிமா உலகைவிட்டு ஒழியுமோ என்று நாம் அங்கலாய்க்க வேண்டியிருக்கிறது. இது போன்ற அல்ப சொல்பமான கதைகளை நம்பி படமுதலாளிகள் லக்ஷக்கணக்கில் செலவழிக்கத் துணிவது வருத்தத்தையே அளிக்கிறது.

இந்தக் கதையையாவது டைரெக்டர் நேரான முறையில் படமாக்க முயன்றிருந்தால் ஒரு மாதிரியாக இருந்திருக்கும். அதற்குப் பதில் படத்தின் ஆரம்பம் முதல் கடைசிவரையில்—மூச்சுவிட இடமில்லாமல்—சம்பந்தா சம்பந்தமின்றி—கீழ்த்தரக் காமிக்குகளை நிரப்பி, படம்

மதன மோஹினி

தயாரிப்பு	—லிபர்ட்டி பிக்சர்ஸ்
ஸ்டுடியோ	— ஸிடாடல்
டைரெக்ஷன்	— எம். எல். பதி
கதை	'கயற்கண்ணமுகன்'
வசனம்	— எம். பி. சிவம், கே. வி. பார்த்தசாரதி
பாட்டு	— எம். பி. சிவம்

நடிகர்கள் :

ஸி. ஆர். ராஜகுமாரி, பொன்னாச்சி கமலா, நவநீதம், அங்கமுத்து, நரசிம்மபாரதி, வீரப்பா, எம். எல். பதி, 'புளிமூட்டை' ராமசாமி. ஏழுமலை முதலியோர்.

தங்கள்) விவரிக்கப் பட்டுள்ளன. அந்த நூலில் உள்ள ஹஸ்தங்களுக்கும், இங்கு சொல்லப்பட்ட அபிநயதர்ப்பண ஹஸ்தங்களுக்கும் சிற்சில மாறுபாடுகள் உள்ளன. ஒவ்வொரு முத்திரையும் தோன்றிய சந்தர்ப்பம், விதம், அதற்குரிய தேவதை, நிறம், முதலிய விவரங்களையும் இந்நூல்கள் சொல்லுகின்றன.

ஒரு முத்திரைக்கு பல அர்த்தங்களை இங்கு காண்கிறோம். ஆனால், அவைகளை உபயோகிக்கும் நேரம். நிலை முதலியவைகளுக்கு தக்கபடி ஒவ்வொரு அர்த்தமும் ஒலிக்கும். உதாரணமாக, 'சிகர'க் கைகளை நெற்றியின் ஓரங்களில் வைத்தால் 'அழகு' என்பதைக் குறிக்கும். நல்ல அழகான ஒரு பெண்ணைப் பார்த்ததும், அவள் கன்னத்தைத் தடவி நமது நெற்றியின் ஓரத்தில் கைகளை வைத்து 'திருஷ்டி' சொடக்குகிறோமே; அந்த நிலையில் இரு 'சிகர'க் கைகளை அழகான பெண் என்று பொருள்பட உபயோகிக்கலாம். 'சர்ப்ப சிரஸ்'க் கையை மூக்கின் மீது வைத்தால் பிராணாயாமம் என்றும், 'சிம்ஹமுக'க் கையை மார்பின் மீது வைத்தால் மோக்ஷம் என்றும் அர்த்தமாகும். அதைப் போலவே ஒவ்வொரு முத்திரையும் ஒவ்வொரு நிலையில் ஒவ்வொரு அர்த்தம் தரும். (தொடரும்)

பார்ப்பவர்களைச் சித்திர வதை செய்கிறார் டைரெக்டர். இந்தக் காமிக்குகளைப் பார்க்கும் ரஸிகர்கள் சிரிப்பதற்குப் பதில், டைரெக்டரின் புராதன எண்ணங்களுக்காக புலம்பிக் கதற வேண்டியிருக்கிறது! மற்றும், டைரெக்ஷனில் பிரமாதமாய் குறிப்பிடக் கூடியவை ஒன்றுமில்லை.

புலிகேசியாக நடிக்கும் வீரப்பா வழக்கம்போல் விறைப்பாகப் பேசி நடித்திருக்கிறார். ஆனால், நடிப்பு சோபிக்கவில்லை. ஸி. ஆர். ராஜகுமாரி இப் படத்தில் இரு வேஷங்களில் நடித்திருக்கிறார். நடிப்பும், நடனமும் பரவாயில்லை. நரசிம்ம பாரதியின் நடிப்பு சுமாராக இருக்கிறது. ஆனால் இவரைப் படத்தில் சரிவரப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. படத்தின் முடிவில் புளிமூட்டையும், ஆரியவீரசினனும் போடும் குத்துச் சண்டைக் காட்சி தமாஷாக இருக்கிறது. மற்றவர்களின் நடிப்பு சர்வ சாதாரணம்.

படத்தில் வசனம் திருப்தியை அளிக்கவில்லை. பாட்டுகள் நிறைய உள்ளன. அவை கிராமிய நடையில் இயற்றப்பட்டிருக்கின்றன. ஆனால், இரண்டு மூன்று பாட்டுகள் மட்டுமே ரஸிக்கக் கூடியவையாய்உள்ளன.



சீக்கிரமே வெளிவரவிருக்கும் ''செல்லப் பிள்ளை''யில் பண்டரிபாய் தோன்றி நடிக்கும் ஒரு கட்டம் இது.

ஒலிப்பதிவும், ஒளிப்பதிவும் சாதாரண ரகத்தைச் சேர்ந்தவை. டெக்னிக்கும் பிரமாதமாயில்லை. சில இடங்களில் காட்சிகளும், ஒலியும் திடீரென்று தாவுகின்றன. பொதுவாக ஸ்டுடியோ வேலைகள் ஏமாற்றத்தை அளிப்பதாகவே இருக்கின்றன. தயாரிப்பாளர்களின் பெயர்களைக் காட்டக் கையாண்டுள்ள முறை மட்டும் நன்றாயிருக்கிறது.

மொத்தத்தில், ''மதன மோஹினி'' சென்னை போன்ற நகர ரஸிகர்களின் பொறுமையைச் சோதிக்கும் ஒரு படம் என்று கூற வேண்டும். ஒரு வேளை, 'டென்ட்'சினிமா ரஸிகர்கள் இப்படத்தை ரஸித்தாலும் ரஸிக்கலாம்.—'' நிழல் ''

நக்ஷத்திரத் தேர்தல்

*1951-52*ம் வருஷம் திரையிடப்பட்ட படங்களில் சிறந்த தமிழ், தெலுங்குப் படத்தையும், அவைகளில் நடித்த சிறந்த நக்ஷத்திரங்களையும் தேர்ந்தெடுக்க ஒரு தேர்தல் இம்மாதம் நடைபெறும். இத் தேர்தலை சென்னை, சினிமா ரஸிகர்கள் சங்கத்தினர் நடத்துவார்கள். இத் தேர்தல் சென்னை, மதுரை, பங்களூர், விஜயவாடா, நான்கு இடங்களிலும் அவர்களால் நடத்தப்படும்.

குப்பி கர்னாடகா புரொடக்ஷன்ஸ்

சத்திய சோதனை



பிரபல கன்னட நடிகரான குப்பி வீரண்ணா
வின் தயாரிப்பான—குப்பி கர்னாடகாவின்—
''சத்திய சோதனை'' தமிழ்ப் படத்தில் ஹொன்
னப்ப பாகவதர், டி. எஸ். பாலய்யா,
ஜெயம்மா, பண்டரி பாய், குமாரி கமலா,
கிருஷ்ணகுமாரி, லக்ஷ்மிகாந்தா முதலிய
பிரபல நடிகர்கள் நடித்துவருகின்ற
னர். ஏவி. எம். ஸ்டுடியோவில்
தயாரிக்கப்பட்ட படம்.

நுனிப்புல்

வெட்டுக்கிளி

கடந்த ஜனவரி மாதம், சென்னையில் நக்ஷத்திர கிரிக்கெட் ஆட்டம் நடந்த சமயம், பல ரஸமான சம்பவங்கள் நிகழ்ந்தன. அவைகள் அனைத்தையும் அடுத்த மாத ஊசிமூலமே ரஸிகர்களுக்குக் கூறிவிடவேண்டும் என்பதுதான் என் எண்ணம். ஆனால், பல சினிமா உலகப் பிரமுகர்களைப் போலவே, என்னையும் கடந்த இரண்டு மாதங்களாக 'அஸ்வபூமி' ஆகர்ஷித்துக் கொண்டு விட்டது. ரேஸ் ஸீஸன் முடிந்ததும்தான் என் கவனம் வேறு பக்கம் திரும்பியது என்பதையும் ஒளிக்காமல் ஒப்புக் கொள்கிறேன். ''இவ்வளவெல்லாம் எழுதினீர்களே, நீங்கள் மட்டும் ஏன் அங்கு போனீர்கள்?'' என்று நேயர்கள் பலர் நியாயம் கேட்பது என் காதில் விழாமல் இல்லை. அவர்களுக்கெல்லாம், ஒரு பிரபல ஹாஸ்ய நடிகை தம் கணவருக்குச் சொன்ன பின்கண்ட பதிலைத்தான் நான் கூற விரும்புகிறேன். ''அவர் (என்னை) விஷயம் சேகரிக்கத்தான் அங்கு வந்திருப்பார்'' என்ற உண்மையான காரணத்தைக் கூறிய அந்த ஹாஸ்ய நடிகைக்கு என் வந்தனத்தைத் தெரிவித்துக் கொண்டு, புது விஷயத்திற்குத் தாவுகிறேன்.

* * *

கிரிக்கெட் விழாவுக்கு இரண்டு நாட்களுக்கு முன் ஒரு நாள் : சென்னையில் நடைபெற்று வந்த காங்கிரஸ் கண்காட்சியில் அன்று ராஜமாணிக்கத்தின் ''ஏசுநாதர்'' நாடக ஆரம்ப தினம். நாடகம் ஆரம்பமானதுமே மழைத் தூற்றலும் ஆரம்பமாகி விட்டது. மழை பலத்து விடவே, நாடகம் பார்த்துக் கொண்டிருந்த ஹாஸ்ய நடிகர் கே. சாரங்கபாணி, பக்கத்திலிருந்த என் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு, ''நாடகம் எப்படிப்பட்ட நாடகம்! போதாததற்கு ராஜாஜி வேறு சென்னையில் இருக்கிறார். மழை பெய்யாமல் என்ன செய்யும்?'' என்று தமது ஆஸ்திகப் பற்றுதலையும், ராஜாஜி பக்தியையும் வெளிப்படையாகக் கூறிக்கொண்டே, ஒண்டிக் கொள்ள இடம் தேடி ஓடினார். மழைக்காக, நவாபின் கம்பெனி கொட்டகையிலேயே, சிறிது நேரம் தங்கினோம். கிரிக்கெட் விழாவிற்கு முன் தினம், வடநாட்டிலிருந்து கிரிக்கெட் ஆடுவதற்கு வந்த நக்ஷத்திரங்களும், தமிழ் நாட்டின் ஆட்டக்கார நக்ஷத்திரங்களும் பரஸ்பரம் அறிமுகம் செய்து வைக்கப்படும் சடங்கு தம் கம்பெனி (ஜயந்தி)யில் நடப்பதாக சாரங்கபாணி கூறினார். என்னை அவசியம் அதற்கு வரும்படி அழைத்து, தமக்கென்றுள்ள அனுமதிச் சீட்டையும் எனக்கு அளித்து என் வரவை நிச்சயப்படுத்திக் கொண்டார்.

* * *

கம்பளி 'வெயிஸ்ட் கோட்'டும், தூய கதர் ஆடையுமாக, கே. சாரங்கபாணி அனைவரையும் வரவேற்கத் தயாராக நின்றிருந்தார். ஜயந்தி புரொடக்ஷன்ஸ் கட்டடம் கொஞ்சம் கொஞ்சமாகப் பிரகாசமடையத் தொடங்கியது. அதாவது, நம் நக்ஷத்திரங்கள் ஒவ்வொருவராக வர ஆரம்பித்ததையே குறிப்பிடுகிறேன். லலிதா-பத்மினி சகோதரியர் தங்கள் தாயார் உட்பட வந்து, வேறு இடத்தில் அன்று நடன நிகழ்ச்சி இருந்தமையினால், தலையைக் காட்டிவிட்டுப் பறந்துவிட்டார்கள். குறிப்பிட்டிருந்த நேரத்திற்கு ஒரு மணி நேரம் தாமதித்து வட நாட்டு நக்ஷத்திரங்களும் வந்து சேர்ந்தார்கள். ஆட்டத்தில் கலந்து கொள்ளாத டி. சூர்ய குமாரியும் ஆஜராகியிருந்தார். முன்னமேயே வட நாட்டு நக்ஷத்திரங்களின் ''நண்பி'' என்ற முறையில்தான் அவர் வந்திருந்தார். அன்று வந்திருந்த—ஆடின, ஆடாத—வடநாடடு நக்ஷத்திரங்கள் அனைவரும் அவரிடம் பழகிய தோரணையிலிருந்து, சூர்யகுமாரி அவர்களிடை எவ்வளவு தூரம் செல்வாக்குப் பெற்றிருக்கிறார் என்பது நன்கு தெரிந்தது. அது தவிர, படித்த நக்ஷத்திரங்களென்றாலே, அவர்களிடம் தனியானதொரு பெருந்

தம் சொந்தப் படமான (பரணியின்) ''சண்டிராணி'' தமிழ்ப் படத்தில் இப்படிக் குஷியாகக் காட்சியளிக்கிறார் பானுமதி.

தன்மை உண்டு என்பதையும், அன்று டி. சூரியகுமாரி மற்றவர்களிடம் மனம் விட்டுப் பழகியதிலிருந்து நான் தெரிந்து கொள்ள முடிந்தது.

*   *   *

நாலு பேர்கள் மத்தியில் இங்கிதமாகப் பேசுவது, நடந்து கொள்வது என்பது ஒரு தனிக் கலை. அந்தக் கலையிலும் தாம் தேர்ந்தவர் என்பதையும் அன்று, நம் சூர்யகுமாரி வெளிப்படுத்தினார். நமது நக்ஷத்திரங்களும் மற்ற பலரும் வட நாட்டு நக்ஷத்திரங்களின் வரவிற்காகக் காத்திருந்தனர். அப்பொழுது 'தாவி'த் 'தாவி' சேஷ்டைகள் செய்தபடி குதித்து வந்தார் தெலுங்கு ஹாஸ்ய நடிகர் கே. சிவராவ். வந்தவர் பேசாமல் வரக்கூடாதா? ''ஏமய்யா ஆந்திர ராஜ்யமு...'' என்று ஏதோ பேச்சை ஆரம்பித்தபடி வந்தார். ஆனால், அவர் அதற்கு மேல் பேசாது அவர் வாயை அடக்கினார் டி. சூர்யகுமாரி. ''உஸ்...போதும்! அந்தப் பேத்தல் பிதற்றல் எல்லாம் இங்கே வேண்டாம். அதற்காக நாம் இங்கு வரவில்லை'' என்று தெலுங்கில் கண்டித்துக் கூறினார் அவர். அதன் பிறகு, சிவராவ் வாயடைத்துப் போகாமல் என்ன செய்வார். ஆந்திர ராஜ்யத்திற்கு ஆசைப்படும் டி. பிரகாசம் காருவின் உறவினராக இருந்தும், ''கலை உலகில் அரசியலுக்கு இடம் இல்லை'' என்பதை உணர்ந்திருக்கும் சூர்யகுமாரியை என்னைப் போலவே அன்று அனைவரும் பாராட்டினார்கள். அரசியலைக் கலை உலகில் புகுத்தி குட்டை குழப்பும் நமது நக்ஷத்திரங்கள் சூர்யகுமாரியை பின்பற்றி நடந்துகொண்டால் எவ்வளவு நல்லது!

*   *   *

அதிகம் பேருக்குத் தெரியாது ஏற்பாடு

செய்யப்பட்ட நிகழ்ச்சிதான் என்றாலும், பல போட்டோகிராபர்கள் வந்து விட்டார்கள்! வடநாட்டு நக்ஷத்திரங்களைச் சூழ்ந்துகொண்டு. தங்கள் வேலையில் முனைந்தார்கள். அவர்கள் அனைவரும் விழுந்து, விழுந்து வடநாட்டு நக்ஷத்திர நடிகைகளையே படம் எடுத்துக் கொண்டிருந்தார்கள். ஒருவரும் வாயை விட்டுச் சொல்லாவிட்டாலும், இது வடநாட்டு நக்ஷத்திர நடிகர்களுக்கு வெறுப்பாகவே இருந்திருக்கும். ஆனால், ஹாஸ்ய நடிகர் டேவிட் மற்றவர்களைப் போல் மௌனமாக இருந்து விடவில்லை. “போட்டோகிராபர்களே! எல்லாரும் புடவை புடவையையே கவனிக்கிறீர்களே. நாங்கள் இங்கிருப்பது உங்கள் கண்களில் படவில்லையா?’ என்று கத்தியபோது, அந்த மைதானமே பலமான சிரிப்பிலே எதிரொலித்தது.

*   *   *

அன்று மீண்டும் ஒரு முறையும் அதிர் வேட்டுச் சிரிப்பு அங்கே எதிரொலித்தது. பரஸ்பரம் நக்ஷத்திரங்கள் அனைவரையும் அறிமுகப் படுத்தியபின், நடிகர்-டைரெக்டர் பாலசந்தர் மறுநாளைய நிகழ்ச்சி நிரல் குறித்து விளக்கினார். ‘‘நாளைய இரவு அனைவருக்கும் நேர்த்தியான ஒரு விருந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. விருந்து ‘ஐட’ங்கள் பூராவும் தென்னிந்திய உணவுதான்’’ என்று அவர் சொன்னபோது வடநாட்டு நக்ஷத்திரங்கள் ‘‘ அச்சா ’’ கூவிப் போட்ட கூக்குரல் வானத்தையே எட்டியிருக்கும். அவர்களுக்குத் தென்னிந்திய உணவு வகைகள் மீது உள்ள பிரியத்தையே அந்தக் கூச்சல் தெளிவு படுத்தியது.

*   *

மறுநாள் கிரிக்கெட் விழாவின் போது

‘‘பெற்ற தாய்’’ தமிழ்ப் படத்தில் நாகேஸ்வர ராவும், ஜி. வரலக்ஷ்மியும் தோன்றும் காட்சி.

தான் பல ரஸமான நிகழ்ச்சிகள் நடந்தன. ரஸிகர்கள், அன்று கட்டணம் இல்லாத ஒரு நிகழ்ச்சியையும் காணும் வாய்ப்புக் கிடைத்தது. சில நக்ஷத்திரங்கள் ஒன்று கூடி செய்த மறியல் விழாவைத்தான் நான் சொல்லுகிறேன். அந்த மறியல் விழாவுக்குக் காப்டன் ஹாஸ்ய நடிகர் என். எஸ். கிருஷ்ணன் ஆவர். ஆனால் மறியல் விழாவில் அங்கம் வகித்தவர்களின் ஜாபிதாவைப் பார்த்தபோது எனக்கு ஒரே ஆச்சரியமாகி விட்டது. என். எஸ். கிருஷ்ணன் இத்தகைய செய்கையில் ஈடுபட்டது கண்டு நான் ஆச்சரியமோ, வருத்தமோ அடையவில்லை. கடந்த சில வருஷங்களாகவே அவரிடம் ஏற்பட்டுள்ள ‘மறுமலர்ச்சி’யிலிருந்து அத்தகைய ‘லீலை’கள் பல அவரிடம் எதிர்பார்க்கக் கூடியதுதான்! ஆனால் அந்தப் புனித கோஷ்டியில், டைரெக்டர் கே. சுப்ரமண்யம், ஜி. வரலக்ஷ்மி, என். டி. ராமராவ் இவர்களெல்லாம் இடம் பெற்றிருந்ததுதான் என்னைப்போன்ற பலருக்கும் வியப்பளித்தது. டைரெக்டர் கே, சுப்ரமண்யத்தைப் பற்றி ‘‘குண்டூசி’’யில் எழுதியிருந்தபோது ‘‘குதூகலன்’’, அவர் செய்த ஒரே தவறு, அவர் ‘‘அனந்த சயனம்’’ படத்தில் நடித்தது’’ என்று குறிப்பிட்டிருந்தார். அவர் செய்த இரண்டாவது தவறு இந்த மறியலில் அவர்

சம்பந்தப்பட்டது என்று இப்பொழுது நான் கூறவேண்டியிருக்கிறது.

* * *

ஆந்திர நக்ஷத்திரங்களான ஜி. வரலக்ஷ்மியையும், என். டி. ராமராவையும் பற்றி எனக்கு எப்பொழுதுமே மிக உயர்வான அபிப்பிராயம் இருந்து வந்தது. ராயலசீமை பிரதேசத்தில் பஞ்சம் ஏற்பட்டு, நாடெங்கும் நிதி திரட்டப்பட்ட சமயம், இந்த 'ஜோடி' ஊர் ஊராகச் சென்று ஒரு லக்ஷம் ரூபாய்கள் வரை நிதி திரட்டியளித்து ஏகோபித்த பாராட்டுதலைப் பெற்றது. அந்த முயற்சியின் போது ஒரு நாள் ஜி. வரலக்ஷ்மி மூர்ச்சையுற்றார் என்பதும் தெரிந்தது. இப்படிப்பட்ட தர்ம குணம் படைத்த 'ஜோடி' இந்த 'மறியல் திருப்பணி'யில் எதற்காக இறங்கியது என்பதுதான் தெரியவில்லை.

* * *

அதுதான் போகட்டுமென்றால், டைரெக்டர் கே. சுப்ரமண்யத்திற்கு, திடீரென்று ஏன், எப்படி, எப்பொழுது, இந்த 'வடநாட்டானை வெறுக்கும்' ஞானோதயம் ஏற்பட்டது என்றுதான் புரியவில்லை! முதன் முதலில் தமிழ்ப் படத்தில் வடநாட்டு நடிகையைப் புகுத்தி தமிழ் பேச வைத்தவர் ("நவீன சாரங்கதரா"வில் மிஸ் இந்து பாலா) அவர்தான். அத்துடன் நின்றாரா? இன்று தமிழ்நாட்டில் பிரபலமாக இருக்கும் மேக்-அப் நிபுணர் ஹரிபாபு, ஒளிப்பதிவாளர் கமல் கோஷ், மற்றும் பல வடநாட்டு டெக்னீஷ்யன்களை தமிழ்நாட்டில் இறக்குமதி செய்தவர் கே. சுப்ரமண்யம் தான். அது மட்டுமா! தமிழ் நாட்டுப் பத்திரிகைகள் அனைத்தும் ஒரு முகமாக மட்டம் தட்டி விமர்சனம் எழுதிய "தியாக பூமி" படத்திற்கு, வட நாட்டுப் பத்திரிகைகள் 'சபாஷ்' போட்டு விமர்சனம் எழுதும்படி செய்தவர் அவர். இப்படிப்பட்ட அவருக்கு திடீரென்று தமிழ் நாட்டின் மீது ஒரு அக்கரையும், தமிழ் நாட்டுப் பணத்தின்மீது ஒரு சிரத்தையும் ஏற்பட்ட மர்மம்தான் புரியவில்லை. டைரெக்டர் சுப்ரமண்யத்திடம் எனக்கு எப்பொழுதும், மதிப்பும் மரியாதையும் உண்டு. அதனால்தான் அவர் இந்த சூழ்நிலையில் சிக்கியது எனக்கு மிகவும் மனச் சங்கடத்தை அளித்திருக்கிறது.

* * *

இந்த மறியலினால் விழாவின் வசூல் பாதிக்கப்படவில்லை என்பது நிச்சயம். ஆட்டம் பார்க்க வந்தவர்கள் யாருமே மறியலுக்கு மதிப்புக் கொடுத்து திரும்பிப் போகவில்லை என்பதுடன், மறியலைப் பார்த்து நகைத்து விட்டு, மைதானத்திற்குள் ஆவலாகப் போனார்கள் என்பதுதான் உண்மை. இம் மறியலைப்பற்றி ஸினி டெக்னீஷ்யன்கள் சங்கத்தார் கொஞ்சம்கூடக் கலங்கிவிடவில்லை. சங்கத்தின் காரியதரிசிகளில் ஒருவரான ரஜனிகாந்த ராவ் ஏளனமாகக் கூறிய ஒரு விஷயத்தையும் கூறிவிடுகிறேன். "இந்த மறியலை நான்கு தினங்களுக்கு முன் ஆரம்பித்து, நகர் முழுதும் சுற்றி வந்திருந்தார்களானால். எங்கள் விழாவுக்கு இலவச விளம்பரமாவது கிடைத்திருக்கும்"—என்று சொன்னார். அவர் சொன்னது முற்றிலும் உண்மை! இம்மறியல், அவர்களது முயற்சிக்குப் பெரிய விளம்பரமாகவே உதவியது. மறியலை வேடிக்கை பார்க்க வந்த ஒரு சிலரும், அதைப் பார்துவிட்டு, கிரிக்கெட் ஆட்டத்திற்குப் போனார்கள் என்பதையும் நான் கவனித்தேன்.

"எனக்குத் தெரியும்

லக்ஸ் டாய்லட் சோப் உங்கள் சருமத்தையும் எழிலோங்கச் செய்யுமென்று."

இவ்வாறு கூறுகிறார்

வனஜா

வனஜா கூறுவதாவது: "இந்த சுத்தமான, வெண்மையான சோப் என் சருமத்திற்கு அளிக்கும் நறுமணத்தை நான் மிகவும் விரும்புகிறேன். சோபைமிக்க சரும அழகைப்பெற நான் செய்வது போல் நீங்களும் செய்யுங்கள். உங்கள் சருமத்திற்கு லக்ஸ் டாய்லட் சோப்பின் தினசரி பாதுகாப்பை அளியுங்கள்."

லக்ஸ் டாய்லட் சோப்

சினிமா நட்சத்திரங்களின்
அழகு தரும் சோப்

LTS. 371-50 TM

திரையழகன் திலிப் குமார்

பால்ராஜ் :—லிப்டன் கம்பெனியாரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள "நக்ஷத்திரங்களைச் சந்தியுங்கள்" என்ற இந்த நிகழ்ச்சி ரஸிகர்களால் பெரிதும் விரும்பப்படுகிறது. இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளை அவர்கள் மேலும் ஆவலோடு எதிர்பார்க்கிறார்கள். இந்த வருஷமும்கூட, ஒவ்வொரு மாத கடைசி ஞாயிற்றுக்கிழமையும் ஒரு நக்ஷத்திர நடிகர் அல்லது நக்ஷத்திர நடிகையை பேட்டி காண திட்டமிட்டிருக்கிறோம். லிப்டனின் இன்றைய அறிமுக நக்ஷத்திரம் திலீப் குமார். அவர் ஏன் இன்னும் வரவில்லை யென்பது வியப்பாக இருக்கிறது. அதற்காக நீங்கள் மனம் தளர்ந்து விட வேண்டாம். திலீப் தவறாது வருவதாக வாக்களித்திருக்கிறார். தவிர, எங்கள் நிகழ்ச்சித் தயாரிப்பாளர் சந்திரன் அவரை அழைத்து வரப் போயிருக்கிறார். இன்னும் ஒரு நிமிஷத்தில் அவர் இங்கு வந்துவிடக் கூடும்.

(கதவு திறக்கும் சப்தம்)

இதோ, சந்திரனே வந்து விட்டார். திலீப் எங்கே? லிப்டன் நிகழ்ச்சிக்காக காத்திருக்கும் ரஸிகர்கள் பொறுமையை இழந்து விடுவார்கள் போலிருக்கிறது.

சந்திரன் :—ரஸிகர்களே, கவலை வேண்டாம். இன்னும் ஒரு நிமிஷத்தில் திலீப் வந்து விடுவார்-இதோ வந்து விட்டார்.

பா:—வாருங்கள் திலீப், நமஸ்தே!

திலீப் :—நமஸ்தே! எனது தாமதத்திற்கு மன்னிக்கும்படி நான் ரஸிகர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

பா:—உங்கள் தாமதத்திற்கு என்ன காரணம்? திலீப், உங்கள் காலில் என்ன! ஒரேயடியாக பெரிய கட்டுகள் போட்டுக் கொண்டிருக்கிறீர்களே.

தி :—பால்ராஜ்! தாமதத்திற்கு அது தான் காரணம். "புட்பாத்" படத்திற்காக நான் நடித்துக் கொண்டிருக்கும் போது, மாடிப் படியிலிருந்து வழுக்கி விழுந்து காலில் அடிபட்டுக் கொண்டு விட்டேன்.

பா :—நீங்கள் ரொம்ப ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். "கலா ஆத்மி" யில் நீங்கள் ரொம்பவும் கஷ்டப்பட வேண்டி யிருக்கும். நீங்கள் கரிச் சுரங்கத்தில் வேலை செய்தாக வேண்டுமே!

தி :—ஆம், "கலா ஆத்மி"யில் என் பாத்திரம் மிகவும் சிரமமானதுதான்.

பா :—"கலா ஆத்மி" கதை வசனத்திலும் உங்களுக்குப் பங்கு உண்டு என்று தெரிகிறதே! அப்படத்தில், புதுமையாக சிலவற்றை நிச்சயமாக நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

தி :—அது கரிச் சுரங்கத் தொழிலாளிகளின் உண்மைக் கதை. நான் அதைக் கூடியவரை தத்ரூபமாக சித்தரிக்க முயற்சிக்கிறேன்.

பா :—குழந்தைப் பருவத்தில் உங்கள் இஷ்டமான பொழுது போக்கு என்ன?

தி :—சிறு பிராயத்தில் எனக்கு சதா விளையாடுவதில்தான் பிரியம் அதிகம். அந்தப் பருவத்தில் அதைத் தவிர வேறு எதை நான் நினைப்பது!

பா :—நீங்கள் பள்ளிக்கூட, கல்லூரி நாடகங்களில் பங்கெடுத்துக் கொண்டிருக்கிறீர்களா?

தி :—பள்ளிக்கூடம், கல்லூரி இவைகளில் நான் படித்தபோது, நாடகங்களில் நடிப்பது என்பதைக் கேட்டாலே நான் தொடை நடுங்குவேன். ஆகவே, அவைகளில் நடிப்பதைப் பற்றிய பேச்சுக்கே இடம் கிடையாது.

பா :—நீங்களோ நாடகங்களில் பங்கெடுத்துக் கொள்ளவில்லை; ஆகவே படிப்பில் கெட்டிக்காரராக இருந்திருப்பீர்கள்.



தி :—இல்லை, நான் படிப்பிலும் கூட சுடிகை இல்லை. 'புட்பால்' ஆட்டத்தில் நான் கெட்டிக்காரன். ஆகவே,

பாதி நேரம் 'புட்பால்' ஆடுவதிலேயே சரியாகப் போய்விடும்.

பா:—நீங்கள் படிப்பை நிறுத்திய போது, கல்ஸா, கல்லூரியில் சயின்ஸ் க்ரூபில், இண்டர் வகுப்பில்தானே படித்துக் கொண்டிருந்தீர்கள்.

நீ:—ஆம்.

பா:—நீங்கள் கல்லூரியை விட்டு விட்டதற்குக் காரணம், படிப்பில் நீங்கள் மந்தம் என்பதா, அதற்கு அல்லது வேறு ஏதாவது காரணம் உண்டா ?

நீ:—படிப்பில் நான் ரொம்ப மட்டம் என்று சொல்ல முடியாது. எப்படியோ கெமிஸ்ட்ரீ, பிஸிக்ஸ் ஆகிய பாடங்கள் மீது எனக்கு வெறுப்பு ஏற்பட்டு, படிப்பை நிறுத்தி விட்டேன்.

பா:—நீங்கள் கல்லூரியில் படிக்கும் போது, கல்லூரியில் படித்த பல மாணவிகள் உங்கள் மீது காதல் கொண்டிருப்பார்களே !

நீ:—கல்லூரியில் படிக்கும் போது நான் அதிகப் பிராபல்யாக இருக்கவில்லை; தவிர, பெண்கள் கண்டு மோகிக்கும்படி அப்பொழுது என்னிடம் தனியான சிறப்பு ஒன்றும் கிடையாது.

பா:—கல்லூரியை விட்டதுமே படத் தொழிலில் புக நீங்கள் முயற்சித்தீர்களா ?

நீ:—இல்லை. பூனாவிலுள்ள ஒரு மிலிட்டெரி 'கான்டீனி'ல் நான் மானேஜராக வேலை பார்த்தேன்.

பா:—சினிமாவில் நடிக்கும் சந்தர்ப்பம் உங்களுக்கு எப்பொழுது கிட்டியது.

நீ:—ஒரு கோடையின்போது நான் நண்பர்களுடன் நைனீடால் போயிருந்தேன். அங்கு நான் தேவிகாராணியைச் சந்தித்தேன். அப்பொழுது அவர்தான் பம்பாய் டாக்கீஸின் சொந்தக்காரி. நான் படங்களில் நடிக்க வேண்டும் என்று அவர்தான் யோசனை கூறினார்.

பா:—நீங்கள் முதன் முதலாக நடித்த படம் என்ன ?

நீ:—''ஜோவர் பட்டா'' தான் என்னுடைய முதல் படம்.

பா:—அப்படத்திற்குப் பிறகு ?

நீ:—''ஜோவர் பட்டா''வில் என் நடிப்புப் பிரமாதமாக இல்லை. ஆனால் டைரெக்டர் அமிய சக்ரவர்த்தி நான் நக்ஷத்திரமாகக் கூடுமென நினைத்தார்.

பா:—நக்ஷத்திரமாக நீங்கள் என்ன செய்தீர்கள் ?

நீ:—நான் மனம் தளர்ந்து விடவில்லை. டைரெக்டர் நிதின்போஸ் "மிலான்"

படத்தில் நடிக்க என்னை ஒப்பந்தம் செய்து கொண்டார். நடிப்புக்கே நான் புதிது என்பதை நான் அப்பொழுது தான் உணர்ந்தேன். நிதின்போஸ் எனக்கு நிறைய சொல்லிக் கொடுத்தார். அவருடைய ஒவ்வொரு வார்த்தைகளுக்கும், பயிற்சிக்கும் நான் ரொம்பவும் மதிப்புக் கொடுத்தேன். அதன் பலனாக பல விஷயங்களை நான் நிதின்போஸிடமிருந்துதான் கற்றுக் கொண்டேன். "மிலான்" பிரமாதமான வெற்றி பெற்றது. அதன் பிறகு, நான் பல படங்களில் நடித்தேன். உங்களுக்குத்தான் அதெல்லாம் தெரியுமே. இது தான் உங்கள் முன் இருக்கும் திலீப் குமாராகிய நான்.

பா :—உங்களுடைய உண்மைப் பெயர் யூஸுப், இல்லையா ?

தி :—ஆம்; அதுதான் சரி.

பா :—யூஸுப் என்ற உங்கள் பெயரை ஏன் திலீப் என்று நீங்கள் மாற்றிக் கொண்டீர்கள் ?

தி :—திலீப் குமார் என்ற பெயர் எனக்கு மிகவும் பிடித்தது. ஆகவே நான் அப்படி மாற்றிக் கொண்டேன். ஏன், அதில் ஆக்ஷேபணை ஏதாவது உண்டோ ?

பா :—நீங்கள் நடித்த படங்களுள் எது உங்களுக்கு மிகவும் பிடித்திருந்தது ?

தி :—நான் நடிக்கும் எல்லாப் படங்களிலுமே நான் சிறப்பாக நடிக்க முயற்சிக்கிறேன். என்றாலும், "ஜோகன்", "மிலான்" இரண்டும் எனக்கு மிகவும் பிடித்தமானவை.

பா :—திலீப்! ஹாலிவுட் படங்களைப் போன்ற சிறந்த படங்களை நாம் தயாரிக்க முடியாதா ?

தி :—ஏன் முடியாது? கண்டிப்பாக முடியும்.

பா :—ஆனால் நாம் ஏன் அப்படிப்பட்ட படங்கள் தயாரிப்பதில்லை ?

தி :—ஒரு சிறந்த படத்திற்கு நல்ல கதை தேவை. பூர்வாங்க வேலைகள் முழுவதும் தயாரானால் தவிர ஷூட்டிங் ஆரம்பிக்கக் கூடாது. பணம் படைத்தவர்களெல்லாம் படத் தயாரிப்பாளர்களாகிவிடக் கூடாது. பொதுஜனங்கள் மட்டமான படங்களுக்கு ஆதரவு அளிக்கக் கூடாது. சர்க்கார், படம் தயாரிக்கப் படுவதற்கு முன்னமே அதன் கதையைத் தணிக்கை செய்தல் வேண்டும் என்பது எனது அபிப்பிராயம். இந்த அம்சங்கள் யாவும் திருப்திகரமாயிருந்துவிட்டால் நாம் சிறந்த படங்களைத் தயாரிக்க முடியும்.

பா :—படத் தயாரிப்பாளர்கள் ஏன் மட்டமான படங்களைத் தயாரிக்கிறார்கள் என்று சொல்ல முடியுமா ?

தி :—உண்மையாகச் சொல்ல வேண்டுமானால், படத் தயாரிப்பாளர்கள் இதற்குப் பொறுப்பாளிகள் அல்ல. ரஸிகர்கள் அம்மாதிரிப் படங்களை விரும்புகிறார்கள். ஆகவே, படத் தயாரிப்பாளர்கள் தொடர்ந்து அம்மாதிரிப் படங்களையே தயாரிக்கிறார்கள். நான் படம் பார்ப்பவர்களையே இதற்காக குற்றஞ் சாட்டுவேன். ஆகவே, பொதுஜன ரஸனை மாறுதவரை, நல்ல படங்கள் வெற்றி பெறுவது கஷ்டம்.

பா :—உங்கள் நடிப்பு ஹாலிவுட் நக்ஷத்திரம் ஜேம்ஸ் ஸ்டுவர்ட்டை ஞாபகப் படுத்துகிறது. நீங்கள் அவர் பாணியைப் பின்பற்றி நடிக்கிறீர்களா என்ன ?

தி :—ஜேம்ஸ் ஸ்டுவர்ட் என் அபிமான நக்ஷத்திரம்தான். ஆனால், அவர் பாணியில் நான் நடிப்பதாக நீங்கள் எப்படிக் கூறலாம். ஏன், அவர்தான் என் மாதிரி நடிக்கிறார் என்று கூறுவேன் !

பா :—ஏன் கூடாது? சரி, உங்களுக்குப் பிடித்தமான விஷயத்துக்கு வருகிறேன். உங்களுக்கு எந்த விளையாட்டு ரொம்பப் பிடிக்கும்.

தி :—எனக்கு புட்பால் ஆட்டம்தான் ரொம்பப் பிடிக்கும் என்று நான்தான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேனே. இப்பொழுதெல்லாம் நான் கிரிக்கெட்டும் ஆட ஆரம்பித்திருக்கிறேன். தவிர, 'கோல்ப்' ஆட்டம் ஆடுவதிலும் எனக்குப் பிரியம் உண்டு.

பா :—உங்களுக்கு அவகாசம் கிடைக்கும் சமயங்களில் என்ன செய்வீர்கள் ?

தி:—எனக்கு நேரம் கிடைத்தால் நல்ல நல்ல படங்களாகப் போய்ப் பார்ப்பேன். அல்லது வீட்டில் உட்கார்ந்து புத்தகங்கள் படிப்பேன்.

பா :—எந்த மாதிரிப் புஸ்தகங்கள் நீங்கள் படிப்பீர்கள் ?

தி :—உருது, பர்ஸியா பாஷை இலக்கியங்களைப் படிப்பது எனக்கு மிகவும்

பிடிக்கும். ஆங்கில நாவல்கள்கூட சில சமயங்களில் நான் படிப்பேன்.

பா :—இரவு பகலாக நடிப்பது உங்களுக்கு அலுத்துப் போகவில்லையா ?

தி :—ஆமாம். எனக்கு அலுப்பு ஏற்படும்போது, நான் பம்பாய் நகரத்தை விட்டே, மஹாபலேஷ்வருக்குப் போய் விடுவேன்.

பா :—மஹாபலேஷ்வரில், " மவுண்ட் யுனிக்" என்ற ஒரு பங்களா உங்களுக்கு இருக்கிறதாகக் கேள்விப் பட்டேனே.

தி :—ஆம். நான் அடிக்கடி மஹாபலேஷ்வருக்குப் போவேன். அது மிகவும் ரம்மியமான ஒரு இடம். நான் அங்கு 'கோல்ப்' ஆட்டம் ஆடுவேன், அல்லது ஏரியில் படகில் உல்லாசப் பிரயாணம் செய்வேன்.

பா :—திலீப், நான் எப்பொழுதுமே உங்களை வெள்ளை நிஜார், க்ரீம் கலர் சட்டை ஆகிய இந்த உடைகளிலேயே பார்க்கிறேன். அது ஏன் ?

தி :—ஏனெனில் அதுதான் எனக்குப்

"பார்த்தாலே இனிக்கிறது. தயங்காமல் வாங்கிக்கொள் அம்மா"—பிரகாஷ் புரொடக்‌ஷன்ஸின் "பெற்ற தாய்" தமிழ்ப் படத்தில் ஜி. வரலக்ஷ்மி தோன்றும் ஒருகாட்சி இது.

பிடித்த வர்ணம். வர்ண விசித்திரமான உடைகள் எனக்குப் பிடிப்பதில்லை.

பா:—உங்களுக்குக் காதல் அனுபவம் உண்டா என்பதைத் தெரிவியுங்கள்.

தி:—நிச்சயமாக எனக்கு அப்படிப் பட்ட அனுபவம் உண்டு!

பா:—எப்பொழுது? படத் துறையில் பிரவேசிப்பதற்கு முன்னரா, அல்லது அதன் பிறகா?

தி:—எல்லாம் படவுலகில் சேர்ந்த பிறகுதான்.

பா:—உங்களுக்கு அப்பொழுது எத்தகைய உணர்ச்சி ஏற்பட்டது?

தி:—ஏன், சாதாரண எந்த ஒரு காதலனுக்கும் ஏற்படும் உணர்ச்சிதான். காதல் சூழ்நிலை – நிலவொளி – ஏதாவது ஒரு நதிக்கரை – தனிமை–இனிய மணம் – இப்படித்தான். இதெல்லாம் இருந்தால் நீங்கள் கூடத்தான் காதல் பண்ண ஆரம்பித்து விடுவீர்கள்!

பா:—இருக்கலாம்! நீங்கள் ஏன் மணந்து கொள்ளவில்லை என்பதை கூறுங்கள்.

தி:—நான் கண்டிப்பாக மணந்து கொள்ளப் போகிறேன்.

பா:—ஓ, அப்படியா! எப்பொழுது?

தி:—நிச்சயமாகச் சொல்ல முடியாது. எந்த நிமிஷமும் நடக்கலாம். கல்யாணம் என்பது ஒரு வெற்றி. அதில் பரஸ்பரம் ஒத்துப் போகும் தன்மை வேண்டும். இதற்குக் கணவனும் மனைவியும் ஒருவரை மற்றவர் நன்கு அறிந்து கொள்ள வேண்டும். "காதலின் ரகஸியம்–நன்கு புரிந்து கொள்ளுதல்தான்" என்ற பழமொழியை நீங்கள் கேட்டதில்லையா?

பா:—உங்கள் லட்சிய வாழ்க்கைத் துணைவி எப்படிப் பட்டவள்?

தி:—நான் கல்யாணம் பண்ணிக் கொள்ளும் போது நீங்களே அதைத் தெரிந்து கொள்ளுவீர்கள்.

பா:—திலீப், இந்த உலகத்தில் நீங்கள் பயப்படுவது ஏதாவது உண்டா?

தி:—உண்டு. கரிய இருள் சூழ்ந்த இரவுகளைக் கண்டால் எனக்கு நடுக்கம்.

பா:—நீங்கள் துர்தேவதைகள் உண்டு என்பதை நம்புகிறீர்களா?

தி:—நான் அவைகளை அதிகம் நம்புவதில்லை. எனினும், இருண்ட இரவுகளில் நடக்கும்போது நான் கொஞ்சம் பயப்படுவது உண்டு ஆனால், துர்தேவதை



ஏவி. எம். தயாரித்துவரும் "செல்லப்பிள்ளை" தமிழ்ப் படத்தில் ராதாகிருஷ்ணனும், சாவித்திரியும் தோன்றும் இக் காட்சியைக் காணலாம்.

கள் இருப்பதை நம்பும்படியாக எதுவும் னும் நேரவில்லை.

பா :—நீங்கள் கப்பல் மூலம் பிரயாணம் செய்வதை விரும்புகிறீர்களா, அல்லது ஆகாய விமானப் பிரயாணத்தையா?

தி :—அவசியம் நேர்ந்தாலன்றி நான் கப்பல் மூலம் பிரயாணம் செய்வதையே விரும்புகிறேன். கப்பலில்தான் பலதரப்பட்ட ஜனங்களைக் காண உதவுகிறது.

பா :—நீங்கள் பம்பாயில் எங்கே வசிக்கிறீர்கள் ?

தி :—பந்த்ராவில்.

பா :—நீங்கள் உங்கள் அபிமானிகளின் கடிதங்களுக்கு பதில் எழுதுவது உண்டா ?

தி :—ஓ ! நானே அவர்களின் கடிதங்களைப் படித்து, நானே பதில் எழுதுகிறேன். எனக்குக் கடிதம் எழுதி என்னை உத்ஸாகப்படுத்தும் அவர்களுக்கு நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

பா :—"தி கிரேட் மோகல்" என்ற படத்தில் இளவரசன் ஸலீமாக நீங்கள் நடிக்கிறீர்கள், இல்லையா ?

தி :—ஆம், நடிப்பது உண்மைதான்.

பா :—அப்படியானல் அனர்க்கலியாக நடிக்கப் போவது யார் ?

தி :—அவள் யாராயிருந்தாலும் சரி, நீங்கள் அவளை விரும்புவீர்கள் என்பது மட்டும் நிச்சயம்.

பா :—திலீப் ! உங்களை நான் அதிகம் தாமதிக்க வைத்து விட்டேன். என் விலாஸத்தைக் குறித்துக் கொண்டு, உங்கள் கல்யாணத்துக்கு எனக்குத் தவருது அழைப்பு அனுப்புங்கள்.

தி :—ஆகட்டும். உங்கள் விலாஸம் என்ன ?

பா :—c/o லிப்டன் லிமிடெட், த. பெ. 44, கல்கத்தா.

தி :—இவை தவிர வேறு ஏதாவது கேட்க வேண்டுமா, பால்ராஜ் !

பா :—இல்லை. வந்தனம்.

தி :—நமஸ்தே !

பா :—நமஸ்தே !

[பிரபல லிப்டன் டீ கம்பெனியாரின் ஏற்பாட்டின் மூலம் ஒலிபரப்பப் பட்ட பேட்டி விவரங்களை நீங்கள் மேலே படித்தீர்கள்.]

பொதுஜனம் பேசுகிறார்

★ “வேலைக்காரி” வெளி வந்து வெளுத்து வாங்கிக் கொண்டிருந்த சமயம், ‘வில்லன்’ பாலய்யாவைப்பற்றி பகுத்தறிவுத் தோழர்கள் இல்லாததும், பொல்லாததுமாக என்னென்னவோ கதைகளையெல்லாம் கண், காது, மூக்கு வைத்து ஜோடித்து விட்டார்கள். “எங்கள் பாலய்யா இருக்குமட்டும் பகுத்தறிவு இயககத்தைப் பற்றிய பயமே எங்களுக்கில்லை. எம் இயக்க மண்டபத்துக்கு அவர் ஒரு திண்மையான தூண். மணி பாத்திரத்தின் மூலம் வசனங்களை ‘கணீர் கணீர்’ என்று பேசி ஆஸ்திக பக்தர்களுக்குக் கசையடி கொடுத்திருப்பதே எம் கட்சிக்குச் சிறந்த பிரசாரமாக முடிந்திருக்கிறது” என்றெல்லாம் வாய்க்கு வந்தபடி பேசித் திரிந்தார்கள் தோழர்களும், அவர்களுடைய ‘தாஸர்’களும்! பாவம், அவர்களுடைய நம்பிக்கையில் மண்ணை வாரி இறைத்து விட்டார் நமது நடிக சிகாமணி பாலய்யா. “குண்டூசி” யில் பாலய்யா “பராசக்தி பேசுகிறாள்” கட்டுரை வந்ததும், அப்பப்பா! இங்குள்ள தோழர்களின் முகங்களைப் பார்க்க வேண்டுமே! போதாக் குறைக்குப் பாலய்யா அவர்கள் தமது கட்டுரையில் நமது அனுதாபத்திற்குரிய தோழர்களைக் கொஞ்சமும் தாட்சண்ய மில்லாமல் “ஊதாரிக் கூட்டம்”, “செம்மரி ஆட்டு மந்தைகள்”, “தரகு வாங்கும் கும்பல்”, “ரத்த வெறி பிடித்த வேங்கைகள்”, “முடிச்ச விழ்க்கும் முட்டாள் கூட்டம்” என்றெல்லாம் போடு போடென்று போட்டிருப்பதைப் பார்த்து விட்டு, பாவம்! இந்தப் பகுத்தறிவுப் புலிகள் முகத்தைப் புதைத்துக் கொண்டு போகிறார்கள்! உண்மையை உலகறியச் செய்த பாலய்யா அவர்களைத் தட்டிக் கொடுத்து ‘சபாஷ்’ சொல்லுகிறேன்!

“நவம்”, இலங்கை.

நெஞ்சு பொறுக்குதில்லையே !

உலக சமுதாயங்களிலே பாரத சமுதாயம் ஒன்று தான் கற்புக்கும், நற்பண்புகளுக்கும் உயர்வான ஸ்தானத்தைப் பெற்று வந்துள்ளது. ஆனால், இன்றைய நிலை! சந்தேகத்தின் பேரில் எத்தனை கொலைகள்! இன்று இச் சமுதாயத்தில் விபசாரிகளும், விரோதத்தைப் பரப்பி வரும் வீணர்களும் தோன்றி வருவதைக் காண்கிறோம். ஏன்? வறுமை தான் காரணமென பல வரட்டுப் பெரியார்கள் கூறலாம். மகான்களே தோன்றாததுதான் என்று சிலர் மனத் தாங்கலுடன் கூறலாம். ஆனால், உண்மையான காரணங்கள் இவைகளல்ல. ‘திருடியோ, ஏமாற்றியோ பொருளைத் தேடு’ என உபதேசிக்கும் பெரியார்களும், பெண்கள் விபசாரிகளானதை நியாயப்படுத்தி, (justification) கற்பழிக்கும் படலங்களுடைய கதைகளை எழுதிக் குவித்திடும் அண்ணாக்களும், கருணை என்னும் நிதியை பெயரளவில் படைத்திட்ட சில கதாசிரியர்களும் தான் இந்த நிலைமைக்கு உண்மையான காரணம் என்றால் அது மிகையாகாது. ஒரு ஏமாற்றுக்காரனின் வாழ்க்கையைச் சித்தரித்து உலகமே ஏமாற்றமென்று பறைசாற்றுகின்றார்கள்.

ஒவ்வொரு பள்ளிச் சிறுவனுக்கும் தாங்கள் தான் சமுதாயத்தை அறிந்து உலகுக்கு அறிவிப்பதாக இவர்களுக்கு நினைப்பு! இவர்களுடைய கதைகள் குறைபாடுகளை மிகைப் படுத்திக் காட்டி அவைகள் வளர வழி வகுக்கின்றன. ‘மனித மனம் கெட்டதைத் தான் சீக்கிரம் கைப்பற்ற விரும்பும்’ என்னும் ஆரம்ப மனோதத்துவத்தை என்றுதான் நமது மறுமலர்ச்சி எழுத்தாளர்கள் உணரப் போகிறார்களோ? உண்மையான சீர்திருத்தம் களங்கத்தின் காரணத்தை விளக்குவதில் இல்லை. ஆனால், அது களங்கம் இல்லாதிருக்கப் போரிட்ட வைராக்கிய புருஷர்களின் வாழ்க்கையிலே இருக்கிறது. எனவே, உண்மையான சீர்திருத்த நோக்குள்ளவர்களுக்கு “நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலைகெட்ட ஆசிரியர்களை நினைந்து விட்டால்” என்று தான் உருக்கமாகப் பாடத் தோன்றுகிறது.

என். அர்த்தநாரீசன்,
திருச்செங்கோடு.

கொள்ளையோ கொள்ளை!

அண்மையில் வெளிவந்து ஓடிக்கொண்டிருக்கும் "ஜான்ஸி-கி-ராணி"க்கு டிக்கட்டுகளின் விலையை உயர்த்தியிருக்கின்றனர். மதுரையில் கடைசி டிக்கட்டின் விலை 0—7—6 அணா. மற்றும் பல ஊர்களிலும் டிக்கட்டுகளின் விலை உயர்த்தப்பட்டுள்ளது. முன்பு இவ்வாறு தான் "ஸாம்ஸன் அண்ட் டிலைலா" படத்துக்கு டிக்கட்டுகளின் விலையை உயர்த்தி மதுரையில் 0—4—6 அணாவை 0—7—6 அணாவாக உயர்த்தினர். அப்போது இப்படம் ஏதோ நகரில் நன்ருக ஓடியது. பிறகு, ருசி கண்ட பூனை உறியைத் தானே பார்க்கும் என்பது போல இங்கு திரையிடப்பட்ட "டேவிட் அண்ட் பாத்ஷீபா", "தி கிரேட்டஸ்ட் ஷோ ஆன் தி எர்த்" ஆகிய படங்களுக்கும் கடைசி 0—4—6 அணாவை 0—7—6 அணாவாக உயர்த்தினர். இவ்விரண்டு படங்களும் திரையிட்டவர்களுக்கு ஒரு பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்தன வசூலில். அதே கதிதான் "ஜான்ஸி-கி-ராணி"யைத் திரையிட்டவர்களுக்கும் ஏற்பட்டது. அந்த நிலைமையை மதுரை ரசிகர்கள் உண்டாக்கி விட்டனர். முதல் ஒரு வாரம் மட்டும்தான் 0—7—6 அணாவை கடைசி டிக்கெட்டாக வைத்து படம் ஓட்டினர். பிறகு பழைய 0—4—6 அணாவுக்கு வந்து விட்டனர். எதற்காக ஒரு சில படங்களுக்கு டிக்கெட்டுகளின் விலையை உயர்த்துகின்றனர் என்பது தெரியவில்லை. ஏராளமான பொருட் செலவில் தயாரிக்கப்பட்ட பிரமாண்டமான செட்டிங்குகளைக் கொண்ட படம் என்பதாலா? அப்படிப் பார்த்தால் 0—4—6 அணாவுக்கும் அருகதையற்ற படங்கள் எத்தனையோ திரையிடப் படுகின்றனவே, அவற்றிற் கெல்லாம் 0—4—6 அணாவுக்கும் குறைவாக டிக்கட்டுகளின் விலையை நிர்ணயிக்கிருர்களா? எனவே, டிக்கட்டுகளின் விலையை அதிகப் படுத்தி அதன்மூலம் கொள்ளை லாபம் பெரும் கருத்துடன் திரையிடப்படும் படங்களுக்கு ஆதரவு கொடுக்கக்கூடாது. ஒவ்வொரு கலைக் கழகமும், ரஸிகர்களும் இப்படிப்பட்ட அடாத செயல்களைக் துணிவோடு கண்டிக்க வேண்டும்—பகிஷ்கரிக்க வேண்டும் என்பதே எனது அவா. மதுரையை இவ்விஷயத்தில் மற்றவர்கள் பின்பற்றுவார்களா?

"ஜுபிடர் பிரியன்", மதுரை.

ஒரு யோசனை

சினிமாப் படங்களுடன் செய்திப் படங்களும் காண்பிக்கப் படுகின்றன. பல விஷயங்களை அறிய இச் செய்திப் படங்கள் பெரிதும் பயன்படுகின்றன. ஆனல், இம்மாதிரி பொதுஜனங்களுக்குப் பயன் படக்கூடிய செய்திப் படங்களை அவர்கள் ஒன்றுகூட விடாமல் பார்க்க முடியாமல் போகிறது. ஏனென்ருல் ஒரு தியேட்டரில் ஒரு படமானது அனேக வாரங்கள் ஓடுகின்றன. ஆனல், ஒரு குறிப்பிட்ட செய்திப் படம் ஒரு தியேட்டரில் ஒரு வாரத்திற்கு மேல் காண்பிக்கப்படுவதில்லை. ஒருவர் ஒவ்வொரு செய்திப் படத்தையும் தவருது பார்க்க விரும்பும் பட்சத்தில் அவர், ஒரு தியேட்டரில் ஒரு படம் ஏழு வாரங்கள் ஓடும் பட்சத்தில், அதற்குள் அத்தியேட்டரில் காண்பிக்கப்படும் ஏழு செய்திப் படங்களையும் பார்க்க அவர் ஏழு முறை டிக்கெட் வாங்கிக் கொண்டு செல்லவேண்டியிருக்கிறது. பல தியேட்டர்கள் உள்ள ஊரில் இந்தத் தொந்தரவு கிடையாது. ஒவ்வொரு வாரமும் வெவ்வேறு தியேட்டர்களுக்குச் சென்று வரலாம். அப்பொழுது அவர் பிரதி வாரமும் புதுப் படங்களையும், புதுச் செய்திப் படங்களையும் பார்க்க முடிகிறது. மேலே குறிப்பிட்ட தொந்தரவுகள் யாவும் ஒரே தியேட்டர் உள்ள ஊர்களில்தான். இந்த மாதிரியான தொந்தரவுகளை நீக்க தனிப்பட்ட தியேட்டர் முதலாளிகளோ, அல்லது சர்க்காரோ ஒரு வழி செய்யலாம். தியேட்டர் முதலாளிகள் குறிப்பிட்ட ஒரு தியேட்டரில் செய்திப் படங்களை மட்டும் மிகக் குறைந்த கட்டணத்தில் காண்பிக்கலாம். அல்லது அரசாங்கமே வெளியிடங்களில் இம் மாதிரியான செய்திப் படங்களைப் பொது ஜனங்களுக்கு இலவசமாகக் காண்பிக்கலாம். இதனல் பொது ஜனங்

★ பரிசு பெற்ற கடிதம்

எழுதியவர்:

எஸ். நவரத்தினம்,

காட்டான்குடி,

சிலோன்.

கள் யாவரும் எல்லாச் செய்திப் படங்களையும் பார்க்க முடிவதுடன், அரசாங்கத்தார் எந்த நோக்கத்துடன் செய்திப் படங்களை எடுக்கிறார்களோ அந்த நோக்கமும் நிறைவேறும்.

"சத்யமங்கலம்-சுப்பு",
கோயமுத்தூர்.

உப நடிகர்கள்

சில படங்களில், பிரபல நக்ஷத்திரங்கள் சிறு உப பாத்திரமே தாங்கி வந்தாலும், அவர்கள் பெயரைப் பிரமாதமாக விளம்பரப் படுத்துகிறார்கள் பட சம்பந்தப் பட்டவர்கள். படம் நன்றாக ஓடுவதற்காக செய்யப்படும் இவ் விளம்பரம் சரியானதே. ஆனால் அதே சமயம், சில உப நடிகர்கள், பிரமாதமாக நடித்து படத்தின் வெற்றிக்குக் காரணஸ்தர்களாக இருந்துங் கூட அவர்கள் பெயரை முக்கிய நடிகர்கள் ஜாபிதாவில் வெளியிடுவதில்லை. இது மிகவும் வருந்தத்தக்க விஷயம். உதாரணமாக, "பணம்" சுமாராக ஓடி, பொதுஜன ஆதரவு பெற்றதற்குக் காரணம் கதாநாயகனின் தந்தையாக நடித்திருக்கும் தங்கவேலுவின் இயற்கை நடிப்பு தான் என்று நான் திடமாகக் கூறுவேன். ஆனால், அவர் பெயரோ ஒரு விளம்பரத்தில் கூட இடம் பெறவில்லை. பிரமாதமாக நடித்திருக்கிற தங்கவேலுவின் பெயரைப் பிரபலப் படுத்தாமல் இருந்தது மிகவும் வருந்தத்தக்க விஷயம். இனிமேலாவது பிரபல நடிகர்களின் பெயர்களுடன், படத்தின் வெற்றிக்காகப் பாடுபட்டு பிரமாதமாக நடித்திருக்கும் மற்ற உப நடிகர்களின் பெயர்களையும், நன்றாக விளம்பரப்படுத்தி அவர்களைப் பிரபலப்படுத்த வேண்டும் என்பதே என் வேண்டுகோள்.

ஏ. ஆர். ஸ்ரீனிவாஸன்,
தியாகராயநகர்.

சிந்தனைக்குரிய விஷயம்

தமிழகத்துத் திரைப்படத் தாய் சென்ற ஆண்டிலே பல சேய்களை ஈன்றாள். ஆனால், கருவிலே சிதைந்தன சில; பிறந்த பின் பெயர் சொல்லாமலேயே மறைந்தன பல; வளமுடன் வாழ்ந்து வருவதோ இப்பொழுது ஓரிரு உதவாக்கரைகள்! ஏன் இந்த நிலை! "வெட்டுக்கிளியார்" குறிப்பிட்டிருந்தபடி வைடமின் 'ப' இல்லாத குறையினால் படத் தொழிலில் மந்த நிலைமை ஏற்பட்டிருப்பது ஒருபுறமிருக்க, பட முதலாளிகள் சிலரது மண்டையில் வைடமின் 'மூ' இல்லாததினால் அத் தொழில் மிகப் பாதிக்கப்பட்டு வருகிறது. பத்தாண்டுகளுக்கு முன்பு ஒரு படத்தை மீண்டும், மீண்டும், பத்துத் தடவை பார்த்தும் சலிக்காத ரஸிகன், இன்று எவ்வளவு நல்ல படமாக இருந்தாலும் நாலைந்து தடவைக்கு மேல் போய்ப் பார்ப்பதில்லை. அவனிடத்திலும் கூட பற்றாக் குறையில் தான் உள்ளது வைடமின் 'ப'. இது நம் படத் தயாரிப்பாளர்களுக்குத் தெரிந்திருப்பினும் கூட, படு தோல்வியுறும் வகையில் தான் இன்னும் படம் தயாரித்து வருகிறார்கள். இந்தத் தோல்வியைப் பலப்படுத்த, பாதுகாப்பு வேறு தேடிக் கொள்கிறார்கள், 'டப்பிங்' படங்கள் தயாரிப்பதன் மூலம். இவைகள் தயாரித்து வெளி வந்ததும் இரண்டே நாட்கள் தியேட்டர்களில் திரையிடப் பட்டு, திரையிடப்பட்ட தேதியே நினைவிலிருந்து மறையும்படி ஓடி ஒளிந்து கொள்கின்றன தகர டப்பாக்களில்! பட முதலாளிகள் நன்றாக சிந்தனை செய்ய வேண்டும். ஒன்றுபட்டு கட்டுப்பாடாக குறிப்பிட்ட சத விகிதத்திற்கு மேல் 'டப்பிங்' படங்கள் தயாரிப்பதில்லை என்ற முடிவுக்கு வரவேண்டும். பணம் போடுகிறோம், ஏதோ ஒருகதையை எப்படியாவது படம் பிடிக்கலாம் என்ற நினைவைக் கொண்டு எந்தத் தயாரிப்பாளராவது இந்தத் தொழிலில் இறங்குவாரேயாகில், நிச்சயம் இடறி விழுந்து பரிதவிக்கத்தான் வேண்டிவரும். சிந்தனையும், செயலும் திரம்பட உருவாகி—காலத்தின் கோலத்தில் கொஞ்சம் கருத்தையும் செலுத்தி-பண்டையப் பண்பைப் பாதுகாக்கும் வகையில் பட முதலாளிகளிடையே ஒரு கட்டுப்பாடான திட்டம் உருவாகட்டும். அந்த ஒன்றுபட்ட முயற்சியே என்றும் மேம்பாட்டைத் தரும்.

எம். எம். பொன்னுசாமி, கரூர்.

கனவுதான்!

ஸோரப் மோடியின் "ஜான்ஸி-கி-ராணி" ஒரு மகோன்னதப் படம். இதுவரை வெளிவந்துள்ள நம் நாட்டுப் படங்கள் எல்லாவற்றையும் விட மிகச் சிறந்ததாக இப் படம் விளங்குகிறது. இந்தியப் பட சகாப்தத்திலேயே ஒரு மகத்தான காரியத்தை வெற்றிகரமாக முடித்திருக்கும் மோடியை எவ்வளவு வேண்டுமானாலும் பாராட்டலாம். நூறு

நன்கு குல்லாய் போடத் தெரிந்திருக்கும் வீரப்பாவுக்கு ஜெயஸ்ரீயை மயக்குவதுதானா ஒரு பிரமாதமான விஷயம்?—"நாம்" தமிழ்ப் படத்தில் இவர்களைச் சந்திக்கலாம்.

வருஷங்களுக்கு முன்பு பரத கண்டத்தையே ஒரு குலுக்குக் குலுக்கி, அன்னிய ஆட்சியை ஒழிக்க வீர சுவர்க்கம் புகுந்த ஆயிரக் கணக்கான வீரர்களை நினைவுருத்தி, உணர்ச்சி வெள்ளத்தில் கடைசி வரையில் மெய் மறந்திருக்கச் செய்கிறது இப் படம். அரசாங்கத்தையும், சட்டத்தையும், தெய்வத்தையும் நிந்திக்கும் படமெடுக்கும் நம் தமிழ்ப் பட முதலாளிகளுக்கும், ஏராளமான பணத்தைச் செலவு செய்து கீழத்தனமான, அசம்பாவிதமான சம்பவங்கள் கொண்ட படமெடுப்பவர்களுக்கும் இது சரியான படிப்பினையாக இருக்கும் என நம்பலாம். அக்கால பழக்க வழக்கங்கள் மாறாமல், சரித்திரத்துக்கு முரண்பாடு இல்லாமல், சிறு குறிப்புகளையும் சரியாக கவனித்துப் படமெடுக்கப் பட்டுள்ளது. அனாவசியமான பாட்டுக்கள் இல்லாமல் பொறுக்கி எடுத்த பாடல்கள் பின்னணியில் அழகாக ஒலிக்கின்றன. "ஜான்ஸி-கி-ராணி" போன்ற படங்கள் மேன்மேலும் வந்தால், இந்தியப் படங்கள் சிறந்த நிலையை அடையும் காலம் வெகுதூரத்தில் இல்லை எனக் கூறலாம்.

கமலம்மாள், சென்னை-1

அவமானம்

சமீபத்தில் வெளிவந்துள்ள இரு படங்களில் சம்பந்தா சம்பந்த மில்லாமலும், தமிழ் நாட்டு நாகரிகத்துக்குப் புறம்பான

வகையிலும், விதவைகளைக் கேவலப் படுத்தும் முறையில் சில காட்சிகள் சேர்க்கப் பட்டுள்ளன. ஒரு படத்தில் விதவை ஒருத்தி திருட்டுத் தனமாக ஒருவனுடன் ஓடி ஊதாரித் தனமாகச் சுற்றுவதாகக் காட்டப் பட்டுள்ளது. மற்றொரு படத்தில் இரு விதவைகள் ஊர் ஊராகச் சுற்றி ஊர் விஷயங்களைச் சேகரித்து எல்லோருக்கும் விளம்பரப் படுத்திக் கொண்டும், வெள்ளைப் புடவை அணிந்தவுடன் இந்த வேலையைத் தவிர வேறு வேலை மாதர்களுக்குக் கிடையாது என்று பறைசாற்றிக் கொண்டு திரிவதாகவும் காட்டியுள்ளது. இப் படத் தயாரிப்பாளர்கள் இக் காட்சிகளின்றி படம் தயாரித்திருக்க இயலாதா? இம் மட்ட ரகமான காட்சிகள் தான் ஹாஸ்யமா? இப்படிப்பட்ட காட்சிகளை வெளி நாட்டார் பார்த்தால் தமிழ் நாட்டவர்களைப் பற்றி என்ன நினைப்பார்கள்? இப்படிப்பட்ட காட்சிகள் 'கலை' என்ற பெயரால் படம் பிடிக்கப்பட்டு, நம் முன்னோர் சந்ததிக்கே அவமானம் தேடித் தருவது மிகுந்த இழிவான செய்கையாகும். ஆகவே, இனிமேலாவது இப்படிப்பட்ட கீழ்த்தரமான காட்சிகளைப் படத் தயாரிப்பாளர்கள் தயாரிக்காமல் இருக்க வேண்டும். படத் தயாரிப்பாளர்கள் தயாரித்தாலும் சென்ஸார் போர்டு தன் கடைமையைச் சரியாகச் செய்து முடிக்க வேண்டும்.

'கலை அரசு', கடலூர்.

போலிப் படிப்பினைகள்

திரைப் பட உலகில் இன்று தங்களை மறுமலர்ச்சி எழுத்தாளர்கள் என்று சொல்லிக்கொள்பவர்கள் கொஞ்ச காலத்திற்கு முன் எங்கிருந்தார்கள் என்பது ரஸிகர்களுக்குத் தெரியாது. இவர்கள் சமீப காலமாக நடுத்தர வகுப்பு ஜனங்களிடத்திலும் ஏழை மக்களிடத்திலும் ஓரளவு ஆதரவைப் பெற்றிருக்கிறார்கள் என்பது உண்மையே. வாழ்க்கைச் சுழலில் சிக்கித் தவிப்பவர்களைக் காப்பாற்றுவது போல் பாவனை செய்து அவர்கள் மனம் மகிழும் படி போலிக் கருத்துக்களையும் படிப்பினைகளையும் உருவாக்கி வெளியிடுகிறார்கள். அந்தக் கருத்துக்களும் படிப்பினைகளும் என்னவென்றால், கட்சி வாசனை வீசும் வசனங்கள்—விக்ரக ஆராதனைகளை கிண்டல் செய்தல்—பெரியவர்களை அவமரியாதையாகப் பேசுவது—குற்றங்கள் புரிவதற்கு நியாயம் கற்பிப்பது — அன்னிய ஸ்திரீகளிடம் பழகி அவர்களின் கற்பைக் கெடுப்பதை தெய்வீகக் காதல் என்று சொல்வது—புராதன பழக்க வழக்கங்களுக்கு உலை வைப்பது-இத்தகைய வெறுக்கத் தக்க விஷயங்களே ஆகும். முதலில் சுய சீர்திருத்தம் செய்து கொள்ள வேண்டிய இவர்கள் தங்களைச் சீர்திருத்தவாதிகள் என்று சொல்லிக் கொள்வது விந்தையே. எழுத்தாளர்கள் தாங்கள் வெளியிடும் கருத்துக்களுக்கு சமூகத்தில் எத்தகைய நன்மை உண்டாகிறது என்பதை நன்றாக யோசித்தே வெளியிட வேண்டும். அதை விட்டு விட்டு, ஆதரவையும் பணத்தையும் விரும்பி சூழ்நிலையை சுய நலத்திற்குப் பயன்படுத்தி போலிக் கருத்துக்களையும், படிப்பினைகளையும் வெளியிட்டு சமூகத்தில் கேடுகளை விளைவிக்க வேண்டாமென கேட்டுக் கொள்கிறோம்.

வி. ஆர். அழகப்பன், கண்டனூர்.

மூளை குழம்புகிறது!

சமீபத்தில், "பதிமா தேவதையின் அற்புதம்" என்ற ஆங்கிலப் படத்திற்குச் சென்றிருந்தேன். அது, பதிமா நகரத்தில் 1917ல் உண்மையாக நடந்த கதை. அப்பொழுது சூரியன் பூவுலகு நோக்கி விரைந்து வந்தான் என்ற உண்மையையும் படத் தயாரிப்பாளர்கள் வெகு அழகாகச் சித்தரித்திருக்கிறார்கள். ஒவ்வொருவரும் அப் படத்தை நன்றாக ரஸித்தனர். அப் படத்தைப் பார்த்தவுடன், சென்னையில் சில மாதங்களுக்கு முன்பு வெளியான ஒரு தமிழ்ப் படத்தைப் பற்றிய எண்ணம்தான் வந்தது. இரண்டுக்கும்தான் எவ்வளவு வேற்றுமை! அப் படத்தில் தெய்வ நிந்தனையும், தெய்வத்தை இழிவு படுத்தலும் நிறைந்திருந்தன. அதற்காகவே அப்படம் தயாரிக்கப் பட்டது போலத் தோன்றியது. ஆனால், இப் படத்திலோ ஒவ்வொரு அடியும் தெய்வத்தைப் போற்றி எடுத்துச் சொல்கிறது. தெய்வ நம்பிக்கையைப் படம் முழுதும் அள்ளிச் சொரிகிறது. மேல்நாட்டார்கள் படத்தின் மூலம் தங்கள் மதத்தின் கொள்கைகளை மக்களிடையே பரப்புகின்றனர். ஆனால், நம் தமிழர்களோ, தெய்வ நம்பிக்கையை இழிவுபடுத்தி, மக்களிடையே அருவருப்பைக் கிளரிவிடுகின்றனர். இவ்விஷயங்களைச் சிந்தித்துப் பார்த்தால் மூளை குழம்பிவிடுகிறது.

பி.எஸ்.வி. நாராயணன், மயிலை.

வீரத்தேவன் கோட்டை

இது படிக்காதவர்களுக்கு: டைரெக்டர் ரவிசந்தரின் சினிமாக் கோஷ்டியினர் வெளிப்புறக் காட்சிகளைத் தயாரிப்பதற்காக ஓர் இடத்தில் முகாமிட்டிருக்கின்றனர். இடைவேளையில், அங்கு பாழடைந்துகிடந்த வீரத்தேவன் கோட்டை பற்றிய கதையை கதாசிரியர் (கதாநாயகி காமினி முதலியோருக்குச்) சொல்கிறார்:

''சோழ நாட்டு ஜமீன்தார் குடும்பத்தைச் சேர்ந்த வீரத்தேவன் தன் பாண்டிய நாட்டு நண்பன் இருளப்பனுடன் கொள்ளிடக் கரையை அடைகிறான். திருவிழா காலமானதால், ஏராளமான கடைகளும் ஜனத்திரளும் காணப்படுகிறது. ஒரு மரத்தடியில் ஒரு கிழவியிடம் இரு பெண்கள் குறி கேட்டுக் கொண்டிருக்கின்றனர். பெண்களில் கருப்பாயுள்ள பவளவல்லியும் வீரத்தேவனும் ஒருவரையொருவர் கண்டதும் காதல் கொள்ளுகின்றனர்.

''வீரத்தேவனும் கிழவியிடம் குறிகேட்கிறான். கிழவி, ''அதிர்ஷ்ட தேவதையின் கடாக்ஷம் மட்டும் உன்மீது வீசியிருக்காவிட்டால் நீ பிச்சை எடுக்க வேண்டியவன்'' என்று கூறுகிறாள். இதைக் கேட்டதும் வீரத்தேவன் கோபமுற்று, கிழவியை அடிக்கப் போகிறான். இருளப்பன் அவனைத் தடுத்து நிறுத்துகிறான்.

''தன் மாளிகை அடைந்ததும் தாயார் மங்களாம்பிகையிடம் வீரத்தேவன் இந்த சம்பவத்தைக் கூறுகிறான். அவள் நடுங்கிப்போகிறாள். ஒரு கிழவி காரணமாகவே தன் கணவன் மாண்டதாயும், 'இந்தக் கிழவி ஒரு சூனியக்காரியாய் இருப்பாள், நீ அவள் வழிக்குப் போகாதே' என்றும் மகனிடம் கூறி, வாக்குறுதி பெறுகிறாள்.

பல நாட்களுக்குப் பிறகு பவளவல்லியும் வீரத்தேவனும் மீண்டும் சந்திக்கின்றனர், அன்றைய தினம் அரண்மனையில், குறி சொன்ன கிழவி மங்களாம்பிகையை சந்திக்கிறாள், கிழவியிடம் உள்ள ஏதோ ஒரு ரகஸியமான ஓலைச் சுவடிக்குப் பயந்து கொண்டு மங்களாம்பிகை அவளுக்குப் பணம்கொடுத்து அனுப்புகிறாள்.

இனிமேல்... முன்பே படித்தவர்களுக்கு:

நான்காம் அத்தியாயம்

134144.

லக்ஷ்மி

தென்றல் குளுமையாக வீசிக் கொண்டிருந்தது. இடைவேளையின் போது, காமினி ஜமக்காளத்தின்மீது எதிரே வந்து உட்கார்ந்ததும், எவ்விதமான தூண்டுதலின்றி கதாசிரியர், தாமே கதையைச் சொல்ல ஆரம்பித்தார்.

பஞ்சு எரி உற்றது போலவே, வீரத்தேவனுக்கும், பவ்ளவல்லிக்கும் இடையே ஏற்பட்ட அன்பு, வேகமாகப் பெருகிக்கொண்டு போயிற்று. எதற்காக என்றோ, ஏன் என்றோ அலசிப் பார்த்து ஆராய மனமின்றி நாள்தோறும், வீரத்தேவன் நண்பனுடன் கொள்ளிடக் கரையில் உலாவிக் கொண்டிருந்தான். பவளவல்லியும், நீர் எடுக்க வருவதாக போக்குக் காட்டி, நாள்தோறும் கொள்ளிடத்திற்குத் தன் தோழியுடன் விஜயம் செய்து கொண்டிருந்தாள். முதலில், ஒருவரையொருவர் பாராதது போல், அவர்கள் இருவரும் பாவனைசெய்தனர். பிறகு பார்த்து, தமக்குள்ளே லேசாக புன்முறுவலித்துக்கொண்டு, மௌனமாகத் திரும்பிச் சென்றனர். காதல் என்பதற்கு எப்பொழுதுமே ஒரு தனி சக்தியுண்டு. காதல் கொண்ட இரு உள்ளங்களும், ஒன்றையொன்று

உணர்ந்து கொண்டதும், உள்ளத்தில் குமுறிக் கொந்தளிக்கும் உணர்ச்சிகளை மெள்ள வெளியே பரஸ்பரம் தெரிவித்துக் கொள்ள ஒரு தனிப்பட்ட துணிச்சல் தானாகவே ஏற்பட்டுவிடும்.

இவ்வாறு கூறிவிட்டு ஆசிரியர் காமினியின் முகத்தை ஏரெடுத்துப் பார்த்தார். "நான் கூறுவதில் தவறு ஏதேனும் இருந்தால் ஆக்ஷேபிக்கலாம்" என்று சொல்லிவிட்டு, லேசாக நகைத்தார். "ஐயா! கதை மேலே தொடரட்டும். நான் குறுக்கிட்டுப் பேசி அதன் சுவாரஸ்யத்தைக் குறைக்க விரும்பவில்லை" என்றாள் காமினி. கதாசிரியர் மீண்டும் துவக்கினார்:

யார் முதலில் பேசியது? எதற்காக? எப்பொழுது? என்றெல்லாம் இங்கே நான் விவரிக்க முடியாது. கொள்ளிடக் கரையிலே இரண்டாவது முறையாக சந்திப்பு ஏற்பட்ட சில தினங்களில், பவளவல்லியும், வீரத்தேவனும் இணைபிரியாக் காதலர்களாக மாறிவிட்டிருந்தனர். கொள்ளிடத்திற்கு ஒருநாள் வரமுடியாவிட்டால், பவளவல்லி மன அமைதியின்றி அனலில் இட்ட புழுபோல் துடித்துவிடுவாள். அதே போல்தான், ஒரு தினம் பவளவல்லியைக் காண முடியாது அரண்மனை அலுவல்கள் குறுக்கிட்டு விட்டால், வீரத்தேவன் மனம் புழுங்கித் தத்தளித்துத் தவித்துப் போவான். இவ்வாறு ஒருவரையொருவர், நிலவும் வானமும் போலவும், பூவும் மணமும் போலவும், தாமரையும் குளமும் போலவும், வீரனும் தைரியமும் போலவும், இன்னும் அடுக்கிக் கொண்டே போனால், அவர்கள் காதலுக்கு உவமைகூற இயலாது. இவ்வாறு ஒருவரையொருவர் உயிரினும் மேலாக நேசித்து அன்பு கொண்டிருந்தனர். ஆனால், இதில் ஒரு விந்தை இருந்தது. கொள்ளிடக் கரையிலே தாழைப் புதர் நிழலிலேயும், நாவல் மரத்தின் மேடை மீதும் தினமும் சந்தித்துக் கொண்ட இந்த இளம் காதலர்கள் தங்கள் இருவரையும் விட்டு மற்ற ஏனைய விஷயங்கள் எல்லாம் பேசிக் கொண்டனர். பாண்டிய நாட்டின் வறுமையையும், நாகரீகத்தையும், அழகையும் விவரித்து பிரமிப்பு ஏற்படும் வகையில் வர்ணனை செய்து மகிழ்ந்தாள் பவளவல்லி. சோழ நாட்டின் செழுமையையும், வளமையையும் அவளுக்கு அறிமுகம் செய்வித்து ஆனந்த மடைந்தான் அந்த அழகன். 'பவளவல்லி' 'சுந்தரத் தேவன்' என்று முறையே தங்கள் பெயர்களை மட்டும் இருவரும் தெரிந்து கொண்டிருந்தனர். யுகம் நிமிஷமாக, வேகமாய் காலம் உருண்டோடிக் கொண்டிருந்த காதல் உலகிலே உலாவிக் கொண்டிருந்த அந்த இரு இளம் காதலர்களுக்கு தங்கள் நாட்டையும் தங்களையும் பற்றிப் பேசி முடிக்கவே பொழுது போதவில்லை. மேலும், தங்களைத் தவிர மற்றவர்களைப் பற்றிப் பேசி அறிந்து கொள்ள அவசியம் இருந்தாலும், அவர்கள் கருதவில்லை.

ஒரு காலத்திலே மிகவும் கம்பீரமாக முன்கூடம், முற்றம், பின்கூடம் என்று எடுப்பாகக் கட்டியிருந்த பொன்னம்பலத் தேவரின் வீடு கவனிப்புக் குறைவாலும், குடும்பத்திலே நாளடைவிலே ஏற்பட்டிருந்த வறுமை காரணத்தாலும், இங்குமங்கும் இடிந்து, பற்கள் கழன்று போன வாயைப் போல் மிகவும் அவலக்ஷணமாகக் காட்சியளித்துக் கொண்டி

ருந்தது. முன்கட்டுக் கூடத்திலே தமது திருமணத்தின் போது வாங்கியிருந்த பழய பட்டுப் பாயை விரித்துப் போட்டுவிட்டு, பொன்னம்பலத் தேவர் ஏட்டுச் சுவடி ஒன்றைக் கையில் எடுத்துக் கொண்டு உட்கார்ந்தார். குத்து விளக்கினின்று வீசிய மெல்லிய ஒளியிலே சுவடியைப் பிரித்து கண்களால் ஊன்றிப் படிக்க முயற்சிப்பது போல் அவர் காணப்பட்டாலும், உண்மையிலே அவரது சிந்தனை, சூரியன் அந்தி வாயில் வருமுன்னே நீர் எடுத்து வரத் தன் தோழியுடன் கொள்ளிடக் கரை சென்றிருந்த தமது அருமைப் பேத்தி பவளவல்லி மீது தான் லயித்துப் போயிருந்தது. நரைத்துத் தொங்கிய தமது புருவங்களை யோசனையுடன் நெரித்துக்கொண்டு கிழவர் பெருமூச்செறிந்தார். விவரிக்க முடியாத சஞ்சலம் ஒன்று அவரது உள்ளத்தை வியாபித்து வேதனை செய்யவே, சலிப்புடன் கையிலிருந்த சுவடியைக் கீழே வைத்துவிட்டு எழுந்தார்.

முன் கட்டின் வாயிற்புறத்தை அடைத்துப் பாதுகாப் பதாகப் பெயர் சொல்லித் தொங்கிக் கொண்டிருந்த உளுத்த கதவு, திறக்கப்படும் அறிகுறியாக கிரீச்சென்று ஓலமிட்டது. சாளரத்தின் வழியே, தோட்டத்திலே வளர்ந்து மண்டிக் கிடந்த எருக்கம் செடிகளை விறைத்துப் பார்த்த வண்ணம் நின்ற தேவரின் காதுகளில், ஜிலுக் ஜிலுக்கென்று பாதசரம் எழுப்பிய ஓசை நன்கு கேட்டது. குடத்தை கீழே இறக்கி வைத்துவிட்டு, மாடத்திலிருந்த குங்குமப் பரணியில் கையை விட்டு சிறிது குங்குமத்தை எடுத்து, தன் நெற்றியை அலங்கரித்துக் கொண்டாள் பவளவல்லி. சுவற்றில் மாட்டியிருந்த பெரிய பழைய கண்ணாடியில் தன் உருவத்தை ஒரு முறை உற்றுக் கவனித்து, மகிழ்ச்சியுடன் தன் இடது கரத்தைத் தூக்கி விளக்கொளியிலே ஒரு முறை அழகு பார்த்துக் கொண்டாள். தாமரைத் தண்டு போன்ற நீண்ட மோதிர விரலுக்கு அழகு செய்த மோதிரத்திலிருந்த பச்சைக் கல், விளக்கொளியில் கண்களைப் பறித்துவிடும் போல் ஒளி வீசிப் பளிச்சிட்டு மின்னியது. அழகிய அந்த ஆபரணத்தைத் தன் அன்புப் பரிசாக வீரத்தேவன் அன்று மாலையில் தான் அவளது கரத்திலே தானே அணிவித்திருந்தான். "உன் பச்சை நிற மேனிக்கு எடுத்த ஆபரணம், இதோ பச்சைக்கல் மோதிரம். எங்கள் குடும்பத்தின் பரம்பரைச் சொத்துக்களில் இதுவும் ஒன்று" என்று கூறிவிட்டு, அதை அவளது விரலில் அணிவித்தான். அவன் கூறிய அன்பு மொழிகள் பலவற்றையும் எண்ணி எண்ணி மெய்சிலிர்த்துப் போய், தன்னை மறந்து நின்று கொண்டிருந்த பவளவல்லி, "குழந்தாய் பவளம்! இங்கே வா!" என்று சிறிது கடுமையாக ஜன்னலினின்று எழுந்த குரலைக் கேட்டு திடுக்கிட்டுப் போனாள். இடது கரத்தை புடவைத் தலைப்பிலே மறைத்துக் கொண்டு, பதற்றத்துடன், "என்ன, தாத்தா! என்ன வேண்டும்!" என்று கேட்டாள்.

"ஒன்றுமில்லை, இப்படி அருகில் வா. உன்னிடம் ஒன்று முக்கியமாகச் சொல்ல வேண்டும்" என்று உத்தரவிட்ட பொன்னம்பலத் தேவர், சாளரத்தினின்று திரும்பிச் சென்று கூடத்திலே தொங்கிக் கொண்டிருந்த பழய ஊஞ்சற் பலகைமீது அமர்ந்துகொண்டார். கம்பிகளைப் பிடித்தபடி சாய்ந்துகொண்டு அருகிலே வந்துநின்ற பவளவல்லிக்கு, உள்ளே

கவிந்திருந்த இருளில் அவரது முகபாவம் சரியாக விளங்கவில்லை. ஆனால், அவர் கோபாவேசமாக இருக்கிறார் என்று மட்டும் விளங்கியது. நரைத்துத் தொங்கிய தமது மீசையை இடது கரத்தினால் ஒரு முறை தடவிக் கொடுத்துக்கொண்டு கிழவர் தொண்டையைக் கனைத்தார். பிறகு அவள் பக்கம் திரும்பி, "ஏனம்மா பவளம்! சூரியன் அஸ்தமிக்கும்வரை கொள்ளிடக் கரையில் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்?" என்று சினம் மேலோங்கிய குரலில் அதட்டிக் கேட்டார். பவளவல்லியின் முகம் சிவந்தது. நெஞ்சு பதறியது. ஒரு கணம் என்ன பதில் கூறுவதென்று விளங்காது திகைத்து நின்றாள். "கொள்ளிடக் கரையிலே உட்கார்ந்து. கதை பேசுவதிலே எங்களுக்கு பொழுது போவதே தெரிவதில்லை தாத்தா. ஏதேனும் தவறாக நடந்து கொண்டிருந்தால் மன்னிக்கக் கோருகிறேன்" என்று மிகவும் சாமர்த்தியமாக பதிலளித்தாள் பவளவல்லி.

அவளது பணிவான மொழிகள் தேவரின் கோபத்தை சிறிது தணித்தது. "குழந்தாய்! தாய்க்கு ஒரே மகளாக செல்வமாக வளர்க்கப்பட்டதனால், உலகப் போக்கே உனக்கு சரிவர இன்னும் விளங்கியபாடில்லை. உன்னையொத்த இளம் பெண்கள் கொள்ளிடக் கரையில் அகால வேளைகளில்காணப்படுவது பெரும் தவறாகும். மேலும், இந்த நாட்டை, நீ வளர்ந்து வாழ்ந்த பாண்டிய தேசம்போல் எண்ணுவதற்கில்லை. சமீப காலத்திலே பலவித காரணங்களால் இந்த நாடு வெகுவாகக் கெட்டுப்போயிருக்கிறது. யாரையும் நம்புவதற்கில்லாது நிலைமை மோசமாகிவிட்டிருப்பதால், நீ நதிக்கரையிலிருந்து திரும்பிவர அதிகப் பொழுதானால் எனக்குப் பலவிதமான ஐயங்கள் தோன்றுகின்றன. நான் சஞ்சலப்படுவது மிகவும் இயற்கையே அல்லவா? இந்தக் குலத்தை வாழ வைக்க எஞ்சியிருப்பது நீ ஒருத்திதான். என் கண்ணின் கருமணிபோன்ற உனக்கு அபாயம் ஏதேனும் ஏற்பட்டுவிட்டால்......" என்று கூறிவிட்டு, மேலே பேசமுடியாமல் நிறுத்திக் கொண்டார். துக்கமான பல பழைய சம்பவங்கள் அவரது நினைவிலே கொந்தளித்து எழும்பியதால் அவரது தொண்டை கரகரத்தது. நா தடுமாறியது.

பாட்டனின் பேச்சு முடிவில் தொனி



சென்னை நகரத்திற்கு டிஸ்ட்ரிபியூட்டர்கள்: சூராஜ் ஏஜன்ஸீஸ், 37, ஜானி ஜான்கான் ரோட், திருவல்லிக்கேணி, மதராஸ். கோயமுத்தூர், பாலக்காடு, நீலகிரிக்கு ஸோல் ஏஜெண்டுகள் : B. பாலபட்டாபி (1933ல் ஸ்தாபிக்கப்பட்டது) - - கோயமுத்தூர்.

த்த துயரம், பவளவல்லியின் உள்ளத்தை வேதனை செய்தது. "தாத்தா! இனி இவ்வாறு நதிக்கரையிலே தங்க மாட்டேன். அதிகப் பொழுதைக் கழித்து உங்களுக்கு வீணுக மன ஆயாசத்தைத் தரமாட்டேன். மன்னியுங்கள், இம்முறை மட்டும்" என்று மிகக் குழைவாக வேண்டிக் கொண்டாள் அவள்.

கானகத்தில் கதறும் குழந்தையுடன் பி.எஸ். சரோஜா தன்னந்தனியே பரிதவிக்கும் இக்காட்சி சந்திரா பிக்சர்ஸாரின் "ஜினேவா" தமிழ்ப் படத்தில் வருகிறதாம்.

தேவர் பதிலுக்கு லேசாக நகைத்தார். "உன்மீது மனத்தாங்கல் கொண்டு நான் இப்போது பேசுவதாக எண்ண வேண்டாம், பவளம்! உனது நன்மைக்காகவே இன்று நான் சிறிது கடுமையாகப் பேச நேரிட்டது. பொன்னம்பலத் தேவரின் மகள் வயிற்றுப் பேத்தி நீ என்பதை இங்குள்ள பலர் இன்னமும் சரியாகத் தெரிந்து கொள்ளவில்லை. அதுவரை நலமே" என்ருர்.

"ஏன், தாத்தா, தெரிந்தால் அதனுல் என்ன கெடுதி சம்பவிக்கும்?" என்று பவளம் குறுக்கிட்டுக் கேட்டாள். "தெரிந்து கொண்டால், அதுவும் முக்கியமாக, நமக்கு வேண்டாதவர்கள் அறிந்துகொண்டால் ஆபத்து சம்பவிக்கலாம்- கொள்ளிடக் கரையோரம் துணிவாக நீ சென்றுவரும் ஒவ்வொரு சமயமும், எங்கே அந்த வீரத்தேவன் கண்களில் நீ பட்டுவிடுவாயோ என நான் அஞ்சுகிறேன்" என்ருர். பேசி முடிப்பதற்குள் அவருக்கு மூச்சுத் திணறியது; குரல் நடுங்கியது.

"அது யார் தாத்தா அந்த வீரத்தேவன்? இந்தப் பெபரை நான் இன்றுவரை கேள்விப் பட்டது கூடக் கிடையாதே!" என்று வியப்புடன் வினவினுள் பவளவல்லி.

"அவனது பெயரை உச்சரிக்கவும் எனது நாக் கூசுகிறது. அவனைப்பற்றி இதுவரை உன்னிடம் பேச வேண்டாம் என்றுதான் எண்ணியிருந்தேன். ஆனுல், அவ்வாறு இருப்பது இனி சரியல்ல, எச்சரிக்கை செய்து வைப்பதே நலம் என்று சொல்கிறேன், கேள். வீரத்தேவன், இந்தப் பொன்னம்பலத் தேவரின் பரம வைரி" என்று கூறிவிட்டு, சினத்தைக் கட்டுப் படுத்த இயலாதவராக, தமது பரந்த மார்பின் மீது தமது வலது கரத்தால் ஆத்திரத்துடன் ஓங்கி அறைந்து கொண்டார்.

திகைப்பெய்திய பவளவல்லி, "தாத்தா! இந்த விஷயம் எனக்கு மிகவும் புதியது. இங்கு வந்து ஒரு வருஷ காலமாகியும் தாங்கள் என்னிடம் இதைச் சொல்லவேயில்லையே" என்ருள் சிறிது மனத்தாங்கலுடன்.

"உனக்கு தெரியத் தேவையில்லை என்பதற்காகவே நான் இதுவரையில் கூறவில்லை. ஆனுல் இனி நமது குடும்ப கௌரவத்தை மறைத்து வைப்பது தவறு என்று தோன்றுவதால் உனக்குக் கூறத் துணிந்து விட்டேன். ஏதாவது அபாயம் நேரலாம் என்பதற்காகவே உன்னை முன்

கூட்டியே எச்சரிக்க எல்லாவற்றையும் விவரமாகச் சொல்லி விடுகிறேன்'' என்ருர் கிழவர்.

''என்னை எந்த விதமான அபாயமும் நெருங்க முடியாது, தாத்தா. நீங்கள் எதற்காக இப்படி அஞ்சுகிறீர்கள் என்று என்னுல் ஊகிக்கவே முடியவில்லை'' என்று பேத்தி மிகவும் அசட்டையாகப் பதிலளித்தாள்.

''வீரத்தேவன் மிகவும் அழகானதொரு வாலிபன். அதனுல்...'' என்று தேவர் முடிக்குமுன், பவளவல்லி கலகலவென்று கைகொட்டி நகைத்தாள்.

''ஏழுந்தாய்! இதில் நீ சிரிப்பதற்கு நகைச் சுவை ஏதும் இருப்பதாக எனக்குப் படவில்லை. இதற்குத்தான் சொல்ல வந்தேன். உனக்கு உலகஞானம் குறைவு என்று. வீரத் தேவனின் அழகு உன் போன்ற இளம் பெண்ணுக்கு ஆபத்தை எளிதில் விளைவிக்கலாம்'' என்று கூறி விட்டு பெருமூச்செறிந்தார்.

''தாத்தா! தங்கள் கூற்று நன்று, நன்று! அழகான வாலிபர்களை இளம் பெண்கள் கண்ட மாத்திரத்தில் காதல் கொண்டு மயங்கி சுருண்டு விழுந்து விடுவார்களா? உடல் அழகிற்கு அவ்விதமான காந்த சக்தி இருப்பதாக நான் நினைக்கவில்லை. மன்மதனே மனித உருவில் வந்தால்கூட என் மனம் அவ்வளவு சுலபத்திலே கரைந்து பற்றுக்கொண்டு விடாது. உங்களுடன் இதுபற்றி விவாதித்தால் நீங்கள் ஒப்புக்கொள்ளாது மேலே பலவிதமாக தர்க்கிக்கலாம் அது போகட்டும் வீரத்தேவன் என்பவனைப் பற்றிச் சொன்னீர்களே; அவன் நமக்கு எவ்வகையில் பரம வைரியானுன். அவன் எங்கேயிருக்கிருன்? அவைகளை விவரமாகக் கூறுங்கள். கேட்க ஆவலாக இருக்கிறேன்'' என்ருள்.



நண்பர் :—நீங்கள் இந்த மாதம் எழுதியிருக்கும் கதை பிரமாதம், போங்கோ!

ஆசிரியர் :—நான் அதை எழுதுவதற்கு சிரமப்படவேயில்லை என்பதை நீங்கள் அறிந்தால் ஆச்சரியப் படுவீர்கள். காலையிலே காபி சாப்பிட்டுவிட்டு. மைதீன் புகையிலையை வாயிலே அடக்கிண்டு உட்கார்ந்தேன் பாருங்கோ......ஒரு மணி நேரத்திற்குள்ளே எழுதி முடித்துவிட்டேன்!......''

''உன் தாய் உனக்கு எல்லைமீறிய சலுகைகள் காட்டி உன் வாயை நன்ருக வளர்த்து விட்டிருக்கிருள். பாட்டன் என்று கொஞ்சமும் லச்சையின்றி என்ன பேச்சுப் பேசுகிருய்? பொல்லாத பெண்ணே? உன்னை மணந்து கொள்ளப்போகிறவனை எண்ணி நான் மெத்தவும் அனுதாபப்படுகிறேன்'' என்று பரிகாசமாகக் கூறிவிட்டு, உரத்த குரலில் நகைத்தார் கிழவர்.

''என்னை மணக்கிறவன் இருக்கட்டும். அந்த வீரத்தேவனைப்பற்றிச் சொல்லுங்கள், தாத்தா'' என்று பேத்தி கொஞ்சலாக அதட்டிக் கேட்டாள்.

''கொள்ளிடத்தின் மறுகரையிலே வாழ்ந்த சிவஞானத் தேவனின் செல்வ மகனே இந்த வீரத்தேவன். 'வாழ்ந்த' என்று ஏன் சொன்னேன் என்ருல், சிவஞானத் தேவர் தற்சமயம் ஜீவிதராக இருக்கவில்லை. பத்து ஆண்டுகளுக்கு முன்பு, ஆடிப் புதுப் புனல் திருநாள்

முடிந்த சில தினங்களுக்குப் பிறகு ஒரு நாள், சிவ ஞானத் தேவர் கொள்ளிடக் கரையில் தமது குதிரை மீது ஏறி தன்னந் தனியனாக வந்து கொண்டிருந்தார். அப்பொழுது முன்பின் தெரியாத யாரோ சிலரால் அவர் தாக்கப்பட்டு, கோர மரணத்திற் குள்ளானார்" என்று கூறிவிட்டு, கிழவர் நிறுத்தினார்.

சிறிது நேரம் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்தவர்போல் மௌனமாக இருந்துவிட்டு மீண்டும் பேசலுற்றார். சிவஞான தேவரைத் தாக்கியவர்கள் யார் என்பது இன்றுவரை மர்மமாகவே இருந்த போதிலும், அவனையும், என்னையும் அறிந்த ஒரு சிலர், அவனது கொலைக்குக் காரணம் நான்தான் என்று எண்ணி கொடுஞ்சினம் கொண்டு இருக்கிறார்கள். ஒரு சிலர் அவ்வாறே வெளியே பேசிக்கொள்வதும் என் காதுகளில் விழுந்து கொண்டுதான் இருக்கிறது. ஆனால், இந்த அவதூறைப்பற்றி நான் அணுவளவேனும் அஞ்சவேயில்லை. என்னுடைய வருத்தம் எல்லாம், அந்தக் கிராதகன் சிவஞானத் தேவனின் தலையை என் வாளால் வீசிக் கீழே உருட்ட சந்தர்ப்பம் இல்லாது போயிற்றே என்பதுதான். உன் மாமனும், மாமியும், படுகொலை அடைந்து போன அன்று தினம், புத்திர சோகத்தினால் கொந்தளித்த என் உள்ளம் ஒரு சபதத்தை மேற்கொண்டது. 'சிவஞானத் தேவனது சிரத்தை இந்தக் கையினாலே சேதித்து, பெருகும் உதிரத்தை மார்பில் பூசிக்கொண்டு, கொதிக்கும் என் உள்ளத்தைச் சாந்தப்படுத்திக் கொள்வேன்' என்று நம் குல தெய்வம் திருவரங்கன் முன்பு நான் சபதம் எடுத்துக் கொண்டேன். அந்த சந்தர்பத்திற்காக ஒவ்வொரு கணமும் காத்திருந்தேன். ஆனால், எவனோ முன்பின் அறியாத அந்நியன் ஒருவன் என்னை முந்திக் கொண்டு விட்டான். ஆனால், அதனால் காரியம் ஒன்றும் வீணாகி விடவில்லை. அந்தக் கிராதகன் வழிவந்த செல்வ மகன் வீரத்தேவன் இருக்கிறானே. என் பழியை அவனது உதிரத்திலே தீர்த்துக் கொள்ளுவேன். இந்த வறுமையும், வயோதிகமும், எனது வலிமையையோ, அல்லது கடுஞ் சினத்தையோ அசைத்துவிட முடியாது. நிச்சயம், நிச்சயம்!" என்று கூறிவிட்டு கோபத்துடன் பற்களை நறநறவென்று கடித்தார். பவளவல்லியின் நெஞ்சம் பதறியது. ஏதோ பதில் பேச நினைத்தாள். ஆனால் வார்த்தைகள் ஏதும் நெஞ்சினின்று எழும்ப மறுத்தன.

பிரஸவக் கேஸில் தேர்ந்தவராக விளங்குகிறார் இந்த லேடி டாக்டர் (இந்திரா ஆச்சார்யா)—கிருஷ்ணா பிக்சர்ஸாரின் "மருமகள்" தமிழ்ப் படத்தில்.

கிழவர் மீண்டும் தொடர்ந்தாற் போல் பேசலுற்றார்: "சிவஞானத் தேவர் மனைவி மங்களாம்பிகை இருக்கிறாளே, அவள் பெண்ணாகப் பிறந்த ஒரு பேய்; அரக்கி. கணவன் மரணமடைந்த அன்றைய தினம் அந்த அரக்கி என்ன செய்தாள் தெரியுமா? பூமியில் படிந்து கிடந்த உதிரத்தை அள்ளி முகத்திலே பூசிக்கொண்டு, "பழிக்குப் பழி, வஞ்சத்திற்கு வஞ்சம், நான் தீர்க்காவிடில் சிவஞானத் தேவரின் மனைவியே இல்லை. என் கணவரின் ஆருயிரை அள்ளிக் குடித்த கிழப் புலி பொன்னம்பலத் தேவரது தலையை என் காலடியில் போட்டு மிதித்த பின்புதான் இந்த மங்கல நாணை அகற்றுவேன்" என்று வீறிட்டுக்கத்தி, ஆர்ப்பரித்தாளாம். அவள் அவ்வாறு செய்ய இந்த பொன்னம்பலத் தேவர் தம் தலையை நீட்டிக் கொண்டு, கைகளை பூக் கொய்ய

வீரப்பா, எம். ஜி. ராமச்சந்திரன், வி. என். ஜானகி சம்பந்தப்பட்ட இந்தக் கொலைபாதகக் காட்சியை "நாம்" படத்தில் பார்க்கிறீர்கள்.

விட்டு வாளா இருந்துவிட மாட்டான். கிழப் புலி என்றாலும் வலிமை குன்றாத புலி என்பதை விரைவில் காட்ட சந்தர்ப்பத்தை எதிர்நோக்கிக் காத்திருக்கிறேன். என் மகனையும், மருமகளையும் கொன்று தீர்த்த அந்தப் பழிக்குப் பழி தீர்க்க நான் காத்திருக்கையிலே, கத்தியைக் கையால் தொட்டும் பார்த்திராத பேதைப் பெண்மணி ஒருத்தி என் மீதா வஞ்சம் கூறுவது! விரைவிலே அந்த அரக்கி, தன் அருமை மகனது உயிரற்ற உடல் மீது விழுந்து அரற்றிப் புலம்பி அழுது ஆர்ப்பரிக்கப் போகிறாள், பார்!" என்று கூறிவிட்டு பேச்சை நிறுத்தினார். பவளவல்லி திக்பிரமையுடன் சிலைபோல் மௌனமாக நின்று கொண்டிருந்ததைக் கண்டதும் கிழவர் மீண்டும் பேச ஆரம்பித்தார்:

"உன் மாமன் பாண்டித் துரைக்கும், சிவஞானத் தேவருக்கும் இடையே நீண்ட நாட்களாக பகை ஏற்பட்டிருந்தது. கொள்ளிடத்தின் இரு கரைகளிலும் வசித்த இந்த இரு தேவர்களும் ஒரு காலத்திலே நெருங்கிய நண்பர்களாக இருந்தனர் என்றால் நீ அதிசயிக்கலாம். ஆமாம், மிகவும் நெருங்கிய நண்பர்களாகப் பழகிய இருவரும், முடிவில் விஷம் போல் ஒருவரை யொருவர் வெறுத்து, விரோதம் பூண்டனர். அவர்களது பகைக்குக் காரணம் ஒரு பெண். கொள்ளிடத்தின் இக் கரையில் மேற்கே உள்ள ஒரு சிறு கிராமத்து சிவன் கோயிலுக்குப் பணிபுரிந்துவந்த, பரத்தை சொக்கநாயகி என்பவள் மோகினி உருவாக வந்த ஒரு பிசாசு என்பது என் கருத்து. கோவில் திருவிழா ஒன்றிற்கு நண்பர்களிருவரும் ஒன்றாகச் சென்றிருந்த சமயம், இருவரின் கருத்தையும் சொக்க நாயகியின் எழில் கவர்ந்து விட்டது.

அவளைத் தமது அபிமானப் பெண்மணியாக ஆக்கிக்கொள்வதில் நண்பர்கள் இருவருக்குள்ளேயும் பலத்த போட்டி ஏற்பட்டது. உன் மாமன் பாண்டித் துரைத் தேவன் பெயருக்கேற்ற வண்ணம் பார்வைக்கு வசீகரமான தோற்றம் கொண்டவன். கல்வி அறிவிலும் மிகுந்தவன். பேச்சிலும் மெத்தவும் சாமர்த்தியவான். சிவஞானத் தேவரைப் பற்றி ஏதும் சொல்வதற்கே இல்லை. எரிகின்ற கொள்ளியைப் பிடுங்கி நீர் வார்த்து எடுத்தது போன்ற கரிய மேனியும், சிவந்த கண்களும், அவனது முறுக்கிய நீண்ட மீசையும்—கொள்ளிடத்துக் காட்டேரி போலத்தான் இருந்தான். சொக்கநாயகியின் இள உள்ளம், அழகும் கம்பீரமும், அறிவும் மிகுந்த பாண்டித் துரை தேவரிடம் லயித்துப்போனதிலே வியப்பில்லை. பரத்தை மகள் ஒருத்தியால் ஏற்பட்ட விரோதத்தில் இரு குடும்பத்திற்கிடையேயும், எழுந்த பூசல்கள் கணக்கில் அடங்கா. சொக்கநாயகியின் தொடர்பு ஏற்பட்டு நான்கு ஆண்டுகள் முடிந்தபின்பு, ஒரு தினம் நம் உறவினர் ஒருவர் வீட்டுத் திருமணத்திற்காக, உன் மாமனும், மாமியும் கிளம்பினார்கள். அன்று ஏனோ என் மனம் காரணமற்று கலக்கமுற்றது. புறப்படு முன் உன் மாமனுக்கு நான் பொதுவாக இரண்டு வார்த்

தைகள் எச்சரிக்கை செய்து வைத்தேன். திருமண கோலத்திலே கலந்துகொண்டு, உன் மாமன் அன்றிரவே ஊருக்குத் திரும் பினன். உன் மாமி பருவதவர்த்தினி அப்பொழுது பூரண கர்ப்பிணியாக இருந்தாள்.

"கொள்ளிடக் கரையிலே, மரங்கள் நெருங்கிய பாதைமீது பெட்டி வண்டி வந்த பொழுது, எங்கிருந்தோ ஒரு பயங்கரமான கூக்குரல் எழுந்தது. அதைக் கேட்டு திகிலுடன் பருவதவர்த்தினி கிரீச்சென்று அலறிவிட்டாள். மரங்களின் பின்னல் மறைவாக இருந்த-யார் என்று தெரியாத பல முரடர்கள் திடீரென்று பாய்ந்து வண்டியைச் சூழ்ந்து கொண்டனர். வண்டி முகப்பிலிருந்த விளக்கை, ஒருவன் தன் கைதடியால் ஓங்கி ஒரு அடி போட்டான். விளக்கு உடைந்து அணைந்து எங்கும் இருள் சூழ்ந்து கொண்டுவிடவே, கூடச் சென்ற நம் ஆட்களுக்கு என்ன நடந்தது என்றே தெரியாது. தப்பி வந்த வண்டியோட்டி கொண்டு வந்த துர்ச்செய்தியைக் கேட்டுபதைத்து, ஆட்களுடன் நான் அந்த ஸ்தலத்திற்கு விரைந்து சென்றேன்.

"அன்று காலையில் அங்கு கண்ட கோரக் காட்சியை என் வாழ்நாள் முழுவதும் மறக்கவே முடியாது. உன் மாமனும், பூரண கர்ப்பிணியான உன் மாமியும் படுகொலை செய்யப் பட்டிருந்தனர். புழுதிமீது இரத்தம் படிந்த அவர்களது ஆடைகள் மட்டும் கிழிந்து சின்னபின்னமாகிக் கிடந்தன. கொலை செய்த பாதகர்கள் அவர்களது உடலை எங்கேயோ கொள்ளிடத்து மணலில் புதைத்து மூடிவிட்டிருந்தனர். கூடச் சென்றிருந்த நமது ஆட்களில் பலர் படுகாயமுற்று, நினைவின்றி, குற்றுயிராகக் கிடந்தனர்.

"சிவஞானத் தேவர் மீது எனக்கு சந்தேகம் இருந்த போதிலும், இப் படுகொலை கொள்ளைக்காரர்களால் ஏற்பட்டிருக்கலாம் என்று முதலில் நான் ஐயுற்றேன். ஆனல், சில மாதங்களில் எனது ஐயப்பாடு விரைவில் தெளிந்து போயிற்று. உன் மாமன் தன் கழுத்திலே பூண்டிருந்த முத்துமாலைகளும், உன் மாமியின் மேனியிலே அணிந்திருந்த ஆபரணங்கள் பலவும், சிவஞானத்தேவன் வசமிருந்தன. மங்களவல்லி அவைகளில் சிலவற்றை இங்குள்ள ஒரு பொற்கொல்லனிடம் குறைந்த விலைக்கு விற்றிருந்தாள். நமது வீட்டு நகைகளுக்கு ஒரு அடையாளம் உண்டு. அவைகளின் பின்புறத்திலே மச்சத்தின் சின்னம் பொரிக்கப் பெற்றிருக்கும்" என்று கூறிவிட்டு நிறுத்தினர்.

அதுவரை மௌனமாக இருந்த பவளவல்லி, "தாத்தா! அந்த வீரத்தேவன் பார்வைக்கு எப்படி இருப்பான்?" என்று ஆவலுடன் வினவினாள்.

"பார்வைக்கு மிகவும் வசீகரமான வாலிபன். அவனை நான் நன்கு அறிவேன். என்னையும் அவன் நன்கு அறிவான். அவனது வலது கன்னத்திலே தம்படியளவு வெட்டுக்காயம் ஒன்று உண்டு. ஊன்றிப் பார்த்தாலொழிய அது தெரிய வராது" என்று கூறினர்.

பவளவல்லியின் இருதயம் படபட வென்று அடித்துக் கொண்டது. "இதோ வந்துவிட்டேன், தாத்தா" என்று கூறிவிட்டு, ஒரே துள்ளலில் உள்ளே சென்று, கையிலிருந்த மோதிரத்தைக் கழற்றி அதன் உட்புறத்தை விளக்கொளியில் ஊன்றிப் பார்த்தாள். அந்த அழகிய பச்சைக் கல் மோதிரத்தின் உட்புறத்திலே மச்சக்குறி காணப்பட்டது. (தொடரும்)

விநோதா பிக்சர்ஸார் தயாரித்து வரும் "தேவதாஸ்" தமிழ்ப் படத்தில் சாவித்திரி தீபாராதனை செய்கிருர்.

பிரிவுபசாரமும், வரவேற்பும்

வாஹினியில் கோலாகல விருந்து

மத்திய பிலிம் தணிக்கை போர்டின் சென்னை பிராந்திய அதிகாரி ஸ்ரீ. கே. ஸ்ரீநிவாஸன் கல்கத்தா பிராந்தியத்திற்கு மாற்றலாகி சென்றதை யொட்டி சென்ற மாதம் 3ம் தேதி மாலை வாஹினி ஸ்டுடியோவில் அவருக்கு பிரிவுபசாரம் அளிக்கப் பட்டது. நகரிலுள்ள பல பட ஸ்தாபனங்கள் ஒன்று கூடி ஏற்பாடு செய்த வரவேற்பு இது. எஸ். எஸ். வாஸன் விழாவிற்குத் தலைமை வகித்தார். தொழில் மந்திரி டாக்டர் யு. கிருஷ்ணராவ், சினிமா துறைப் பிரமுகர்கள், நடிகர்கள், நடிகைகள் முதலியோர் விழாவில் கலந்து கொண்டனர். ஆரம்பத்தில் தேநீர் விருந்தளிக்கப் பட்டது. வாஸன் பேசுகையில், சினிமா தயாரிப்பாளர்கள் கோரும் உரிமைகளின் நியாயத்தை ஸ்ரீநிவாஸன் அறிவாரென்றும், ஆனல் அவர் வகிக்கும் பதவிக்கேற்ப சர்க்காரின் சில சட்ட திட்டங்களை அவர் கவனிக்க வேண்டி யிருக்கிற தென்றும் குறிப்பிட்டார். எனினும் சினிமாத் துறையிலிருப்பவர்களுக்கு ஓரளவு சுதந்திரம் வேண்டும் என்றும், அது அளிக்கப்பட்டால் துஷ்பிரயோகம் செய்யப்படாதவாறு தங்களுக்குள் ஒரு கட்டுப்பாட்டை ஏற்படுத்திக்கொள்ள முடியும் என்றும் தெரிவித்தார். பிறகு எச். எம். ரெட்டி ஸ்ரீநிவாஸனின் சேவைகளைப் பாராட்டி நல் வாழ்த்து கூறும் உபசாரப் பத்திரத்தை வாசித்தளித்தார். மத்திய தணிக்கை போர்டின் வேலை இந்தப் பிராந்தியத்தில் வெற்றியடைய ஸ்ரீநிவாஸனின் சிறந்த பணியே காரணம் என்று பத்திரத்தில் குறிப்பிடப் பட்டிருந்தது.

உபசாரத்திற்கு நன்றி தெரிவித்துப் பேசிய கே. சீனிவாஸன் கூறியதாவது:—

"இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு நாட்டு நிர்வாகம் வெற்றியடைய உதவி செய்வது ஒவ்வொருவருடைய கடமையாகும். இந்த ரீதியிலேயே நான் இந்த தணிக்கை போர்டு அதிகாரி பதவியை ஏற்றுக் கொண்டேன். தணிக்கை போர்டில் அங்கம் வகித்தவர்களின் ஒத்துழைப்பே என் வெற்றிக்கு முக்கிய காரணம். சினிமாத் தொழிலுக்கும், தணிக்கை போர்டுக்கும் இடையேயுள்ள இடைவெளியைப் போக்குவதையே நான் நோக்கமாகக் கொண்டிருந்தேன்" என்று கூறினர்.

பிறகு ஸ்டார் கம்பைன்ஸ் ஸ்ரீ. ராமய்யா ஸ்ரீ. ஸ்ரீநிவாஸன் தணிக்கை சம்பந்தமாகக் கூறிய யோசனையை வரவேற்று யாவருக்கும் நன்றி கூறினர். விழாவிற்கான ஏற்பாடுகளைச் செய்தவர் விஜயா புரொடக்ஷன்ஸ் ஸ்ரீ. நாகி ரெட்டி.

முடிவில் குமாரி கமலாவின் நாட்டியக் கச்சேரி நடைபெற்றது. குமாரி கமலாவின் நாட்டியத்தைப் பாராட்டி, உபசாரக் குழுவினர் சார்பில், ஒரு ஜோடி வெள்ளி விளக்குகளை ஸ்ரீநிவாஸன் அவருக்கு பரிசாக வழங்கினர்.

விஜயா புரொடக்ஷன்ஸ் லிமிடெட்டின் ஸ்ரீ. நாகி ரெட்டியின் அபார நிர்வாகத் திறமையை ஸ்ரீ. ஸ்ரீநிவாஸன் பாராட்டினர். ஸ்ரீ. நாகி ரெட்டி விழாக்களையும் ஆடம்பரத்தையும் உண்டு பண்ணுவதில் மிகத் திறமையுடையவர் என்றும் குறிப்பிட்டார்.

சென்ற மாதம் 4ம் தேதி மாலை அவர் பத்திரிகைக்காரர்களை சந்தித்துப் பேசினர். அவர் பேசுகையில், சென்றவருஷத்தில் சென்னை மாகாணத்தில் தயாரிக்கப்பட்ட சினிமாப் படங்களில் மத சம்பிரதாயங்களையும், சமூகப் பழக்க வழக்கங்களையும் கிண்டல் செய்யும் காட்சிகள் அதிகமாக இருந்தன என்று கூறினர்.

படங்களை தணிக்கை செய்யும் பொறுப்பை சினிமாத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களிடமே ஒப்படைப்பது இயலாத காரியமென்று அவர் சொன்னர். ஸ்ரீ. கே. சீனுவாஸன் மேலும் கூறியதாவது:

"ஹாஸ்யப் படமாக இருந்தாலும் சரி; அல்லது சோகரஸம் ததும்பும் படமாக இருந்த போதிலும் சரி; தென்னிந்திய சினிமாப் படங்களில் பெண்களின் வாழ்க்கை தவருன முறையில் சித்திரிக்கப்படுகிறது.

"வேலைக்காரப் பெண்களை அகம்பாவம் பிடித்தவர்களாகவும், விதவைகளை காதல் களியாட்டங்களில் ஈடுபடும் நங்கைகளா

கவும், காலேஜ் பெண்களை அபத்தமான வகையில் நடந்து கொள்பவர்களாகவும், மனைவிமார்களை வேலைக்காரிகளைப் போலவும், மாமியார்களை கொடுமையின் சிகரமாகவும், சினிமாக்களில் சித்திரிப்பது இந்தியப் பெண் சமூகத்திற்கே இழிவைத் தருவதாகும்.''

சென்னை பிரதேச புதிய தணிக்கை அதிகாரியாகப் பதவி யேற்றிருக்கும் எஸ். ஏ. அய்யருக்கு, தென்னிந்திய பிலிம் சேம்பர், சென்ற மாதம் 19ம் தேதி ஒரு வரவேற்பளித்தது. இந்த வரவேற்பு விழாவில் பிலிம் தொழில் பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர். சேம்பரின் தலைவர் ஏ. ராமய்யா அவரை வரவேற்றுப் பேசுகையில், நேதாஜியின் சர்க்காரில் விளம்பர அதிகாரியாகப் பணியாற்றிய எஸ். ஏ. அய்யர் இப்பதவியேற்று சென்னைக்கு வந்துள்ளது அனைவருக்கும் மகிழ்ச்சி அளிப்பதாகக் கூறினர். படங்களின் தணிக்கை படத் தொழிலினர் வசமே விடப்பட வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

எஸ். ஏ. அய்யர் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்கு பதில் அளிக்கையில் பின்கண்ட விஷயங்களைத் தெரிவித்தார், "சினிமாப் பட உற்பத்தித் தொழிலினர்: சினிமாத் தணிக்கையாளர் இவர்களிடையே பரஸ்பர ஒத்துழைப்பும் நல்லெண்ணமும் இருக்கும் வரையில் படத் தணிக்கை எவ்விதத் தொந்தரவுமின்றி வெற்றிகரமாக நடைபெறும். பிலிம் தொழிலின் நலமும், அது இயங்கும் சமூகத்தின் நலமுமே என் லட்சியமாக இருக்குமென உறுதி கூறுகிறேன்.''

சினிமா ரஸிகர்கள் சங்கம்

சென்னை, சினிமா ரஸிகர்கள் சங்கத்தினர் சென்ற மாதம் 16-ம் தேதி, ''சௌகார்'' தெலுங்குப் படத்தை ஸ்ரீ கிருஷ்ணா டாக்கீஸில் காலைக் காட்சியாகத் திரையிட்டார்கள். அவர்கள் நடத்தப் போகும் படத் தேர்தலுக்கு நிதி திரட்டவே அன்று அக்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டது. என். டி. ராமராவ், எஸ். ஜானகி, மற்றும் அப்படத்தில் நடித்த சில நக்ஷத்திரங்கள் நேரில் மேடை மீது தோன்றி ரசிகர்களுக்கு காட்சி அளித்தார்கள்.

விற்பனையாகிறது

நக்ஷத்திரம்

(மாதாந்திர சினிமா பத்திரிகை)

ஆசிரியர்:
கேஸரி

*

சிருஷ்டி ஜாதகம் — இது சகஜம்
வாஸனுடன் ஒரு நாள் — சுவைக்க
கண்ணில் பட்டது — அவியல்
காதில் விழுந்தது — கேளுங்கள்
ஸ்டூடியோ திக்விஜயம்
தீர்மானங்கள்
கடமை காட்டிய பாதை
ராசி பலன்

*

மற்றும் சிந்தனையைக் கிளறும் கட்டுரைகள்

70 பக்கங்கள்

விலை அணா 4

வருஷ சந்தா ரூபாய் மூன்று

தமிழகம் எங்கும் கிடைக்கும்

மானேஜர்

நக்ஷத்திரம்

தி. நகர், சென்னை—17.

மானகிரி "லெ"ஞ

[25-ம் பக்கத் தொடர்ச்சி]

போனுல் உதவி கிடைக்கும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு உண்டு. அவர்கள் நம்பிக்கைவீண் போனதுமில்லை. "லெ"ஞ தர்மம் செய்யாத நாளே கிடையாது என்று சொல்லலாம்.

தெய்வ பக்தி மிகுந்தவர்; எல்லா மூர்த்திகளையும் வணங்குகிறவர் என்றுலும், 'கிருஷ்ணபக்தி' மிக்கவர். அதுதான் தமது படக் கம்பெனிக்குக்கூட அதே மூர்த்தியின் பெயரை வைத்திருக்கிறர். அவர் தனிமையாக இருந்தே பார்க்க முடியாது. சதா நண்பர்கள் புடை சூழத்தான் இருப்பார். அவர் நக்ஷத்திரங்களை ஒப்பந்தம் செய்துகொள்வதெல்லாம் வாக்கு மூலம்தான். எழுத்து விவகாரமே கிடையாது. அவர் வாக்கில் மற்றவர்களுக்கு அவ்வளவு பெரிய நம்பிக்கை இருக்கிறது.

"சொல்லமாட்டார்; ஆனுல், சொல்லிவிட்டால் இவர் செய்யாமல் இருக்கமாட்டார்" என்று "மருமகள்" படத்தில் டி. பாலசுப்ரமண்யம் படித்துப் படித்துச் சொல்லும் கொள்கை "லெ"ஞவுடையதுதான் என்று சொன்னுல் மிகையாகாது.

ஒரு அழகான சிறு தியேட்டர், எடிட்டிங்-சாதனங்கள்— இவை தனியாக கம்பெனிக்குள் இருக்கின்றன. அவரது மருமகப் பிள்ளை திருப்பதி அவருக்கு வலது கைபோல் இருந்து கொண்டு, பொறுப்பான காரியங்களை சிரத்தையுடன் திறம்படச் செய்து, அவருக்கு உதவி வருகிறர்.

அவரிடம் சில உன்னதமான லக்ஷியங்கள் இருக்கின்றன. தம் வரையில் அனைவரும் மிக ஒத்துழைக்கிறர்களென்றுலும், சாதாரணமாக இத்துறையில் ஒத்துழைப்பு குறைவாயிருக்கிறது என்று அவர் வருத்தப்படுகிறர். "லைட் கூலி முதல், படமுதலாளி வரை அனைவரது எண்ணமும் மாறவேண்டும். அது மாறினுல்தான் இன்றையப் பட உலக அவலநிலை மாறும்" என்ற திட நம்பிக்கை கொண்டவராக இருக்கிறர் "லெ"ஞ.

மனைவி :—ரயிலுக்கு நாழிகையாயிடுத்து......இன்னும் என்ன தேடுகிறீர்கள் ?

பாகவதர் :—இங்கே மைதீன் புகையிலை ஒரு பாக்கெட் வைத்திருந்தேனே......அது இல்லேன்னு தொண்டை கரகரன்னுமே......ஓ ! இதோ இருக்கு......

ADVT.

மீண்டும் சாந்தா ஆப்தே

பிரபல நடிகையான சாந்தா ஆப்தே சில வருஷ ஓய்வுக்குப் பின் மீண்டும் நடிக்க வந்திருக்கிறர். ஆர்யன் பிக்சர்ஸின் மஹாராஷ்டிர சரித்திரப் படமான "தாய்டலின்" என்ற படத்தில் அவர் தோன்றுகிறர். இப் படத்திற்கான ஆரம்ப பூஜை சென்ற வாரம் பூனுவில் நடைபெற்றது.

கே. வி. கே. நாடக சபா

கே. வி. கே. நாடக சபா என்ற பெயரில் புதிய நாடக சபா ஒன்று ஆரம்பமாகியுள்ளது. இந்த சபாவின் ஆரம்ப விழா சென்ற மாதம் 22ம் தேதி அய்யம் பேட்டையில் நடைபெற்றது.



பிரகாஷ் புரடக்ஷன்ஸார் சீக்கிரமே வெளியிட விருக்கும் "பெற்ற தாய்" தமிழ்ப் படத்தில் ஜி. வரலக்ஷ்மி பிரதம பாகத்தில் நடித்திருக்கிறார்.

டி. ஆர். ராதா

கோபத்தைத் தணிக்க குளிர்ந்த முகமும், தாகத்தைத் தணிக்கத் தகுந்த பானமும் இருக்கிறது "பாவலை"யில் நடிக்கும் டி. ஆர். ராதாவிடம்.

இரவல் ஒழிக!

மு. புரட்சிப்பித்தன்

‘பொன் கொழிக்கும் பூமி’ என புலவர் பலர் போற்றிய நாடு; ‘மூன்று கடல் சூழ்ந்தது; மூவேந்தர் ஆண்டது; முத்தமிழ் முழங்குவது’ என அறிஞர்களால் புகழப்பட்ட நாடு: இத்தகைய பெருமை பெற்று, வையகத்தில் தலைநிமிர்ந்து நின்ற வளம்பொழிந்த நாடு ஆயகலைகள் அறுபத்து நான்குக்கும் தாயகமாக விளங்கி வருகிறது. சரித்திரம் பிறந்த நாளிலிருந்தே—தொன்மையான காலந் தொட்டு புரவலர்களும், புலவர்களும் முக்கலைகளைப் பேணி வளர்த்து வந்துள்ளனர். பழம் பெருமை பெற்ற ஏடுகளையும் இலக்கியங்களையும் கருத்தூன்றிக் கவனித்தால், இயல், இசை, கூத்து—முக்கலைகளும் செழித்துச் சிறப்புற்றிருந்ததை அறிந்து மனம் மகிழ்கிறோம். ஆனால், அந்த மகிழ்ச்சி நிரந்தரமாக நீடித்து நிற்க முடியாது. கணக்கிட்டுக் கூற இடலாத காலத்திலேயே கலைச் செல்வம் தழைத்திருந்த தமிழகத்தில், ‘கலை’ இன்று எந்த நிலையில் இருக்கின்றது என்பதை நினைக்கும்போது-தீவிரமாக சிந்திக்கும்போது-வியப்பு—வேதனை-வெட்கம் ஆகிய பல்வேறு உணர்ச்சிகள் ஒன்றுடன் ஒன்று போட்டியிட்டுக் கொண்டு நம்மைத் தலை குனிய வைக்கின்றன நீர்வளம் நிலவளம் நிறைந்த செழிப்புள்ள பூமி இடைக் காலத்திலே இயற்கையின் சதியால், பஞ்சம்-பட்டினி-அதைத் தொடர்ந்து கொலை. கொள்ளை, போன்ற கொடுமைகளின் உறைவிடமாக மாறிவிட்டது. காலத்தின் இந்த விபரீதப் போக்கால் கருத்திழந்த கலைஞர்கள் வறுமையின் கொடுமையால் காசின் மீது கண்ணோட்டம் செலுத்தவே. சுயநலம், சொந்த ஆசாபாசங்கள் இவற்றால் தூண்டப்பட்டதால்—தூய்மை நேர்மையும் ஒன்றியிருந்த (சினிமா) கலை—வியாபாரச் சந்தையிலே வாணிப முறைப்படி விலை கூறப்பட்டது. மக்களின் கலாரசனை பாழ்பட்டது; உண்மைக் கலையின் உயர்வு மங்கி, இரவல்—தழுவல், ஓங்கி நின்றன. போலிச் சரக்குகளிலே மக்கள் மதியைப் பறிகொடுத்து விட்டனர் என்று கூறுவதுகூட சரியல்ல, அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை ‘உருவாக்கப்பட்டது’ என்பது தான் பொருத்தமானது.

கடந்துபோன இரண்டாண்டு காலத்திலே திரையேறிய தமிழ்ப் படங்களில்—புதுமை எண்ணங்கள்—புதிய நாட்டுக்குத் தேவையான கருத்துகள் கொண்ட படம் ஏதாவது இடம் பெற்றிருக்கிறதா என்றால் ‘இல்லை’ என்ற பதில் உடனே கிடைத்துவிடும். ஏனெனில், திரைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட கதைகள். நம் நாட்டு கலாசாரத்திற்குப் புறம்பானவை; மேனாட்டு சூழ்நிலையை ஒட்டி கற்பனை செய்யப்பட்டவை. அல்லது, காலம் என்பதே கவனிக்கப்படாமல் ‘பணப்பெட்டி’யின் மீது கருத்து செலுத்தப்பட்டு, பகுத்தறிவுக்கு அப்பாற்பட்ட நம்பமுடியாத சம்பவங்களினால் கதம்பமாக்கப்பட்ட கற்பனைகளாக இருக்கும். இன்னும் சில, கண்ணீரைப் பெருக்கும் கட்டங்கள் நிறைந்த கதைகளாக இருக்கும். ஒரு குறிப்பிட்ட கதை படமாக்கப்பட்டு வெற்றி பெற்றால், தொடர்ந்து அதே போன்ற—ஒரே உணர்ச்சியுள்ள கதைகளையே எல்லாத் தயாரிப்பாளர்களும் கண்ணை மூடிக்கொண்டு படமாக்கி விடுவார்கள். இவை அனைத்தும் ஒரே சமயத்தில் வெளிவரும்போது அவை மக்களால் விரும்பப்படும் என எதிர்பார்க்க முடியுமா? சமீபத்திய படங்களின் தோல்விக்கு இது ஒரு காரணம்.

கதைகள் தான் மேனாட்டவரிடமிருந்தும் பிற தயாரிப்பாளர்களிடமிருந்தும்

சென்ற மாதம் வெளிவந்துள்ள ஜுபிடர்-மேகலா தயாரிப்பான ''நாம்'' தமிழ்ப் படத்தில் எம். ஜி. ராமச்சந்திரனும், பி. கே. சரஸ்வதியும், தோன்றும் ஒரு கட்டம் இது.

கடன் வாங்கப்படுகின்றன என்றால், படத்தில் உள்ள இதர அம்சங்களிலும் அதே நிலைதான் இருக்கிறது; நடனங்கள். நம் நாட்டு சுற்றுப்புற சூழ்நிலையைக் கொண்டு தயாரிக்கப்படும் படத்தில், அதற்கேற்ப அமைக்கப் படாமல் ஆங்கிலப் படங்களிலிருந்து கையாளப்பட்டு சற்றும் பொருத்தமற்ற வகையில் உள்ளன. '' கதா பாத்திரம் எப்படிப்பட்டது, எந்த பாகத்தில் நடிக்கிறோம், நம் நிலையில் உள்ள ஒருவர் இத்தருணத்தில் எப்படிப்பட்ட உணர்ச்சிகளைப் பிரதிபலிப்பான்!'' என்பதை சிந்தித்து, கதாபாத்திரத்தின் தன்மையை உணர்ந்து நடிக்க முயற்சிப்பதில்லை நம் நக்ஷத்திரங்களில் பட உலகில் நுழைந்தவுடன் ''நக்ஷத்திரமாக வேண்டும்; தமக்கு விசிறிகள் நாடெங்கும் தோன்ற வேண்டும்; ஒப்பந்தங்கள் பெருக வேண்டும்; உயர்ந்த ஸ்தானத்தில் மக்கள் மதிக்கும்படி முன்னேற்றத்துக்கு வர வேண்டும்'' என்ற நோக்கத்துடன், பிரபலமான முன்னணி நக்ஷத்திரங்களின் நடிப்பை 'இமிடேட்' செய்ய ஆரம்பிக்கின்றனர்.

பாடல்கள் விஷயத்திலும் இதே இழி நிலைதான். நமக்கென்று பிரத்தியேகமாக, தனித்து இயங்கி இன்ப புரிக்கு இழுத்துச் செல்லும் கர்நாடக சங்கீதம் இருந்தும், அறிவையும் திறமையையும் பயன்படுத்தாமல் வடநாட்டுப்படங்களின் இசையமைப்பை 'காப்பி' யடிப்பதிலேயே அடிமைப்பட்டுக் கிடக்கின்றனர். நம் நாட்டு இசைக்கு உயிரூட்டி, சீராட்டி உயர்ந்த நிலைக்குக் கொண்டுவர வேண்டும் என்ற எண்ணமில்லாமல், உணர்வு மழுங்கி யிருக்கும் நம் திரைப்பட சங்கீத டைரெக்டர்களைப் பற்றி நினைக்கும்போது நம் நெஞ்சம் துயரால் அலை மோதுகிறது. வட நாட்டுப் பட மெட்டு

கலைத்தான் தென்னாட்டு மக்கள் விரும்புகிறார்கள் என்பது தவறு.

கர்நாடக சங்கீத அமைப்பில் போதிய ஆர்வமும், கவனமும் செலுத்தி எளிய முறையில்—எல்லோரும் செவியுற்று இன்பமெய்தும் முறையில்—இசை அமைக்க முன் வந்தால், ரஸிகர்களால் நிச்சயம் வரவேற்கப்படும். அதை விடுத்து, ரசிகர்கள்மீது குறை கூறிக் கொண்டு, பிரபலமான ஹிந்திப் படங்களிலிருந்து எந்த 'மெட்டுகளை' புகுத்தினால் தம் புகழ் பரவும் என்பதிலே காலத்தையும் கருத்தையும் செலவிட்டு வருகிறார்கள். ஹிந்தப் பட இசை யமைப்பைத் தழுவி, அவர்களிடமிருந்து இரவல் பெற்று பாடல்கள் அமைக்கப் பட்டால்தான் தமிழ்ப் படங்கள் வெற்றி காண முடியும் என்றால், அப்படிப்பட்ட சங்கீதமே தேவை யில்லை, நமக்கு. அதைக் காட்டிலும் பாடல்கள் இல்லாத படங்களையே வேண்டுமானாலும் பார்க்கத் தயாராக இருக்கிறோமே தவிர, 'இரவல் இசையமைப்பை' இனி ஒருக்காலும் தமிழ்ப் படங்களில் புகுத்த அனுமதியோம்.

தற்போது தயாரிக்கப்படும் படங்களின் பட்டியல் வளர்கிறதே தவிர, நாம் பெருமைப்படும்படி தமிழ்ப் படங்களின் தரம் உயரவில்லை. காரணம், வெற்றி கண்ட சில தமிழ்ப் படங்களிலும் ஏதாவது ஒரு அம்சமாவது நம் நாட்டுப் பண்புக்கு ஒவ்வாத முறையில் மேனாட்டவரிடமிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருக்கும். கதை நம் நாட்டு சூழ்நிலையில் இருக்கும்; ஆனால் அதன் சம்பவங்கள் நம் நாகரீகத்திலிருந்து வேறுபட்டிருக்கும். மேனாட்டு நாவலைப் படமாக்குவதாகக் கூறி, நம் பழக்க வழக்கங்களையும், பண்பாடுகளையும் புகுத்தி ஒரு குழப்பத்தை உண்டு பண்ணி விடுகிறார்கள். ''கதைகள்—பிற நாட்டவரின் கற்பனை; நடனங்கள் மேல்நாட்டு 'பேஷன்'; நடிப்பில் பிரபல நக்ஷத்திரங்களின் 'இமிடேஷன்' இசையமைப்போ என்றால் ஹிந்திப் படங்கள் இருக்கவே இருக்கின்றன''—இந்த அவல நிலை பட உலகில் நீடிக்குமானால், தமிழ் நாட்டில் படத் தொழில் இருந்த இடம்—அடிச்சுவடுகூட தெரி மறைந்துவிடும். இந்த எச்சரிக்கையை படத் தொழிலிலுள்ளோர் மனதில் இருத்திக் கொள்ள வேண்டும்.

லோத்ரா
பெண்கள் போற்றும் டானிக்
கேஸரி குடீரம்
லிமிடெட்,
மதராஸ்—14.
தமிழ்நாடு ஏஜண்டுகள்:
சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்
மேலகோபுர வாசல்,
மதுரை.



எனினும், ஒரு குறிப்பிட்ட துறையில் தமிழ்ப் படங்கள் அபிவிருத்தி யடைந்திருக்கின்றன. அதாவது கலை நுணுக்கங்களில் நம் நாட்டு தயாரிப்பாளர்கள் தங்கள் கவனத்தைச் செலுத்தி யிருக்கின்றனர்; பாராட்டுதல்களுக்குரியது. ஒலிப் பதிவு, படப் பிடிப்பு, காட்சி யமைப்பு போன்றவைகளில் தமிழ்ப் படங்கள் தலைதூக்கி நிற்கின்றன. ஆனால், வெறும் கலையம்சங்களோ, காட்சி ஜோடனைகளோ, கண்கவரும் காட்சிகளோ இருந்தால் மட்டும் போதாது; 'படத்தில் என்ன கருத்து இருக்கிறது; இப்படம் நாட்டு மக்கள் நல் வாழ்வுக்கு என்ன திட்டங்களைக் கூறுகிறது!' என்பது தான் இன்றைய ரஸிகர்களின் ஏகோபித்த குரல்.

பளிங்குக் கற்கள் பதிக்கப்பட்ட—விண்ணைத் தொடும் ஏழடுக்கு மாளிகையாக இருக்கலாம்; ஆனால், அதில் மனிதன் வாழ்வதற்குரிய வசதியில்லை யென்றால் அதனால் யாருக்கு என்ன பயன்! அதைப் போன்றதுதான் ஒரு குறிப்பிட்ட குறிக்கோளோ, கருத்தமைப்போ இல்லாமல் தயாரிக்கப்படும் படங்களும்.

உலக அரங்கில், திரைப்படக் கலையில் தமிழ்ப் படங்கள் பெருமையுடன் உலாவ வேண்டும் என்றால் 'இரவல்' ஒழிக்கப் படவேண்டும். சுய முயற்சி—சொந்த சிந்தனை—தன்னம்பிக்கை—தன்மான உணர்வு—நாட்டுப் பெருமை இவற்றிற்கு நம் கலைஞர்கள் மதிப்பளிக்க வேண்டும்.

நல்ல அம்சங்கள் யாரிடமிருந்தாலும் எடுத்துக் கொள்ளப் படவேண்டியதே. ஆனால் அவற்றை அப்படியே கையாள்வது தவறு. பிற நாட்டவரிடமிருந்து 'கற்றுக்' கொள்ளவேண்டுமே தவிர, அவர்களின் படங்களைப் பார்த்து காப்பியடிப்பது 'கலைஞன்' என கூறப்படுவோனின் செயலல்ல. திறமையைப்பயன்படுத்தாது, உழைப்புக்கு மதிப்புக்கொடாது, அறிவுக்கு வேலை தராது, ஆராய்ச்சிக்கு இடமளிக்காது. அடுத்தவரை எதிர்பார்த்து வாழ்வது ஏளனத்திற்கு இடம் தரும் செயல். சிந்தனையை விரிவாக்கி, செயலைப் பெருக்கி சினிமாக் கலையின் தூய்மைத் தன்மையை உணர்ந்து, மக்களின் மனோபாவமறிந்து, உயரிய சித்திரங்களை உருவாக்க நம் திரைப்பட கலைஞர்கள் முன் வரவேண்டும்.

புஸ்தகப் பொழுது

இன்பமலை

[ஆசிரியர்: கி. வா. ஜகந்நாதன்; கிடைக்குமிடம்: அமுதநிலையம் லிமிடெட், சென்னை-18; விலை: ரூ. 3. பரிசுப் பதிப்பு. ரூ. 5.]

சங்க நூற்காட்சி விளக்க வரிசையில் ஆறாவதாக இப்புத்தகம் வெளி வந்திருக்கிறது. இதில், அகநானூற்றிலிருந்து எடுத்த ஐந்து பாடல்களுக்கு விளக்கம் எழுதியிருக்கிறார் ஆசிரியர். பாரதம் பாடிய பெருந்தேவனாரின் கடவுள் வாழ்த்து முதலாவதாக இடம் பெற்றுள்ளது.

அடுத்ததாக, கபிலர் பாடியுள்ள ஒரு பாடல் விளக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த குறிஞ்சித்திணை பாடலில் களவுக் காதல் புரிந்துவரும் தலைவனை அண்டி, 'தலைவியை முறைப்படி மணந்து கொள்ள ஏற்பாடு செய்ய இதுவே தக்க சமயம்', என்று, சொல்லாமல் சொல்லுகிறாள் தலைவியின் தோழி.

தலைவன் வந்து கொண்டிருப்பதைத் தலைவியிடம் தோழி கூறுவதாக அமைந்திருக்கும் அடுத்த பாட்டில், வண்டுகளின் கலக்கத்திற்கு அஞ்சி தேர்மணிகளின் நாக்கைக் கட்டிவிட்டு வருகிறானாம் தலைவன். இது தலைவன் உள்ளம் துணைவியோடு ஒன்றுபட்டு வேட்கையிலிருப்பதை நன்கு உணர்த்துகிறது. இதைப் பாடியவர் குறுங்குடி மருதனார் என்ற புலவர். குரும்பியை உண்ண புற்றில் கையை விட்டு பாம்பை உசுப்பிவிடும் கரடியும், காட்டுப் பன்றியைக் கொன்று பெண் புலிக்காக அதை இழுத்துச் செல்லும் ஆண் புலியும், வாழையைத் தின்ன வந்து அசும்பிலே விழுந்த களிறை மேலேற்ற மரங்களை முறித்து குழியில் தள்ளும் பிடியும் அச்சச் சுவை பயக்கும் காட்சிகளாக மனசிலே நிற்கின்றன. தலைவன் அன்போடு வரவேற்பானானால் இப்படிப்பட்ட பயங்கர காட்டு வழியையும் கடந்து செல்வேன் என்கிறாள் களவுக் காதலில் ஈடுபட்டுள்ள தலைவி. முறைப்படி மணம் செய்து கொள்ள தலைவனைத் தூண்டுவதற்கு அவன் காது கேட்க மறைவிடத்திலிருந்து தலைவி கூறுவதாக அமைந்துள்ள இந்த நான்காவது பாட்டு பெருங்குன்றூர் கிழார் இயற்றியதாகும்.

ஐந்தாவது பாடல், இந்திரகோபப் பூச்சிகள் ஊர்ந்த கோடும், புல் உண்ண மடப்பிணையைத் தழுவிச் செல்லும் இரலையும், அறுகம் புல்லை உண்டு அசை போட்டு நிற்கும் செருக்குள்ள நடையையுடைய பசுக்களும், மலர்ந்த மணமுடை பூக்களைக்கொண்டு விளையாடும் ஆயர்க்கூட்டங்களும், முல்லை நிறச் சிறப்பையும், எழிலையும் எடுத்துக் காட்டுகின்றன. தலைவியின் நிலையை தலைவனிடம் சொல்லச் செல்லும் பாணன், தலைவனே தேரில் வருவதைக் கண்டு திரும்பி, தான் போக வேண்டிய அவசியம் இல்லாமற் போனதைத் தோழர்களுக்குப் புலப்படுத்துவதாக அமைந்துள்ள இப்பாடல் ஒக்கூர் மாசாத்தனார் இயற்றியது.



டி. ஆர். ராஜகுமாரியின் தலை தப்பியது!—ஆர். ஆர். பிக்சர்ஸின் ''வாழப் பிறந்தவள்'' படத்தில்.

தமிழ் நாட்டின் பழைய சரித்திரத்தையும், மக்கள் பண்பாடு, நாகரிகம் முதலியவற்றையும் ஆராய்ச்சி செய்ய இந் நூல் மிக்க துணையாக நிற்கும்.

கடந்த நாட்கள்

[ஆசிரியர்: எம். மக்பூல்; விலை: 4 அணு; கிடைக்குமிடம்: எம். மக்பூல், திருச்செங்கோடு.]

அகதியான பெண் ஒருத்தியிடம் காதல் கொள்கிறான் ஒருவன். இடையில் ஏற்பட்ட பொல்லாத காலம் அவர்களைப் பிரிக்கிறது. ஆனால் காதலன் நிரந்தரமாகவே பிரிக்கப்பட்டு ஏமாற்றமடைகிறான். இதுதான் கதை. கதை படிப்பதற்கு மிகவும் ரஸமாக இருக்கிறது.

ராதையின் கனவு

[ஆசிரியை: வேங்கடலக்ஷ்மி பி. ஏ.; விலை. ரூ: 1-4-0; கிடைக்குமிடம்: அல்லயன்ஸ் கம்பெனி; த. பெட்டி 617, மயிலாப்பூர், சென்னை-4]

கண்ணிறைந்த கணவனை செல்வராஜை அடைகிறாள் ராதை. அர்த்தமற்ற ஒரு கொள்கையைக் கைப்பற்றிய கணவன், மனைவியைத் தவிக்கவிடுகிறான். முடிவில் ஜகந்நாதன், குமுதம் இருவரால் தம்பதி ஒன்றுபட கதை சுபமாக முடிகிறது. படித்து ரஸிக்க வேண்டிய தொரு நல்ல நாவல்தான் இது.

சூறுவளி

[ஆசிரியர்: ''மாயாவி''; விலை: ரூ, 1-8-0; கிடைக்குமிடம்: அமுத நிலையம் லிமிடெட், சென்னை-18.]

தமிழ் நாட்டில் சிறந்த சிறுகதை ஆசிரியர்களில் ஒருவர் ''மாயாவி.'' அவருடைய கதைகளில் வாழ்க்கையில் நாம் காணும் பலதரப்பட்ட ஆசாமிகளைச் சந்திக்கிறோம் இப்புத்தகத்திலுள்ள எட்டு சிறு கதைகளும் ஒரு முறைக்கு இருமுறை படிக்கத் தூண்டும் வகையில் சிறப்பாக இருக்கின்றன.

பத்மினியின் காதல்

[ஆசிரியர்: கே. எஸ். ரங்காச்சாரி; விலை: அணு 10; கிடைக்குமிடம்: சுவாதி பதிப்பகம், 3, காந்தி பார்க் வெஸ்ட், கும்பகோணம்.]

மிகச் சாதாரணமான ஒரு சிறு கதை, சிறு நாவலாக வளர்த்தப்பட்டிருக்கிறது. வேறு விசேஷமாகக் குறிப்பிட இப் புத்தகத்தில் ஒன்றுமில்லை.

கரிகால் வளவன்

[ஆசிரியர்: கி. வா. ஜகந்நாதன்; விலை: ரூ. 1-4-0; கிடைக்குமிடம்: அமுத நிலையம் லிட்., சென்னை-18.]

சோழ மன்னர்களிலே பிரசித்தமானவன் கரிகால் வளவன்; சரித்திர காலத்திற்கு முன் வாழ்ந்த மன்னர்களில் ஒருவன். ஐந்து வயதில் செங்கோல் பிடித்த இம் மன்னன் தன் எண்பத்தைந்தாவது பிராயம் வரை ஆட்சி புரிந்து பல நன்மைகள் செய்திருக்கிறான். பல நூல்களையும் ஆராய்ச்சி செய்து அவன் சரிதையை ஆசிரியர் எழுதியிருக்கிறார். சரித்திரம் என்றாலும் ரஸமாக இருக்கிறது.

பெண் குரல்

ஆசிரியர்; ஸாமா; விலை: அணு 4; கிடைக்குமிடம்: ஸ்ரீராம் பப்ளிகேஷன்ஸ், 16/1, ராயப்பேட்டை ஹைரோடு, சென்னை-14.]

சத்திரத்திலே படுத்திருக்கும் ஒருவன் நடுநிசியில் பெண் குரல் கேட்டு எழுந்திருக்கிறான். அந்தப் பெண், அகிலா, தன் சோகக் கதையைக் கூறுகிறாள். புத்தகத்தில் நடுவில் ஒரு பக்கம் அச்சாகாமல் வெள்ளையாகவே, கோர்வையின்றி விடப்பட்டிருக்கிறது.

ஜீவ சிலை

[ஆசிரியர்; புஷ்பத்துறை சுப்ரமண்யம்; விலை: ரூ 1-0-0; கிடைக்குமிடம்: ஸ்டார் பிரசுரம், 5, புதுமார்க்கெட் தெரு, காரைக்குடி.]

ஆசிரியர் எழுதி அவ்வப்பொழுது பல பத்திரிகைகளில் வெளியான ஆறு சிறு கதைகளின் தொகுப்பு இது. சரித்திர நிகழ்ச்சிகளைக் கொண்ட ''பாடலி''யும், ''ஜீவ சிலை''யும் நன்றாக இருக்கின்றன. மற்ற கதைகளை அவ்வளவு உயர்வாகச் சொல்வதற்கில்லை.

நான்கு சகோதரர்கள்

[ஆசிரியர்: வி. மு. சங்கரன்; விலை: 1 அணு; கிடைக்குமிடம்: எம். எஸ். சங்கர நாராயண பிள்ளை, மணிலா வியாபாரம், கடலூர் O. T.]

நான்கு சகோதரர்களை முக்கிய பாத்திரங்களாகக் கொண்டு ஆசிரியர் இந்த நாடகத்தை எழுதியிருக்கிறார். நாடகம் போற்றும்படியாக இல்லை.

படிடா தம்பி

[ஆசிரியர்: ''தங்கநிழல்''; விலை; 1 அணு; கிடைக்குமிடம்: அறிவு மலர்ப் பதிப்பகம்; கோவிந்தாகுடி, (Via) கும்பகோணம்.]

'படியுங்கள் தம்பி, தங்கைகளே' என்று சிபார்சு

செய்யக்கூடிய நல்ல புத்தகம் இது. பல சினிமாப் படங்களின் மெட்டுகளில் நல்ல கருத்துக்கள் அமைந்த பாட்டுகளை அமைத்திருக்கிறார் ஆசிரியர். நல்ல ஒரு முயற்சி இது.

வஞ்சியின் வஞ்சகம்

[ஆசிரியர்: குருகை ராஜன்; விலை: 1 அணா; கிடைக்குமிடம்: எஸ். பக்ஷிராஜ அய்யங்கார்; தெற்கு மாடவீதி. ஆழ்வார் திருநகரி.]

குறிப்பிடத் தகுதியற்ற ஒரு சின்னஞ்சிறு பிரசுரம் இது.

தொழிலாளி

[ஆசிரியர்: கம்பதாசன்; விலை: அணா 8; கிடைக்குமிடம்: கல்பனா பிரசுரம்; சென்னை-6]

இப் புத்தகத்தில், செம்படவன், நடிகன், கவிஞன், உழவன் இப்படியாகப் பல தொழிலாளிகளையும் பற்றி சிறு சிறு கவிதைகள் உள்ளன. கவிஞர், சூரியனையும் சுற்றும் உலகையும்கூடத் தொழிலாளிகளாக்கிக் கவிதை கட்டியிருக்கிறார். நேர்த்தியான வார்த்தை வர்ண ஜாலங்களால் கவிதைகளை சிறப்புறச் செய்திருக்கிறார்.

அருவிக்கரை ஆசிரமம்

[மூல ஆசிரியர்: சுதர்சன்; மொழிபெயர்ப்பு: ரா. விழிநாதன்; விலை: ரூ. 1-8-0; கிடைக்குமிடம்: அமுத நிலையம் லிட்., சென்னை-18.]

ஏற்கெனவே, "கல்கி" பத்திரிகையில் தொடர்ச்சியாக வெளிவந்த தொடர் கதை இப்பொழுதுபுத்தக வடிவில் வெளிவந்திருக்கிறது. மேனாட்டு நாகரீகம் நம் நாட்டு வாலிபர்களை எங்கனம் பாழ்படுத்துகிறது என்பதும், பெண் தெய்வாம்ஸம் பொருந்தியவள் என்பதும் இந்த நாவலில் அழகாகக் கையாளப்பட்டுள்ளன.

வெண்ணிலா

[ஆசிரியர்: ஒய். திருநாவுக்கரசு; தனிப் பிரதி விலை: 8 அணா; கிடைக்குமிடம்: ஜில்ஜில் பதிப்பகம், 37, அரண்மனைக்காரத் தெரு, சென்னை-1.[

புதிதாக வெளிவரும் மாதப் பத்திரிகை இது. முதலிதழான மார்ச் இதழில், பல சிறு கதைகள், தொடர் கதை, மற்றும் பல அம்சங்கள் உள்ளன.

உணர்ச்சி

[ஆசிரியர்: கு. சேதுராமன்; விலை: தனிப் பிரதி ஒரு அணா; கிடைக்குமிடம்: உணர்ச்சி அலுவலகம், ஈரோடு.]

கம்யூனிஸக் கொள்கையை ஆதரிக்கும் நோக்கத்துடன் ஆரம்பமாகியுள்ள வார இதழ் இது.

சென்னை மேடையில் சென்ற மாதம்

மயிலை, ரஸிக ரஞ்சனி ஸபா ஹாலில், ''மிஸ் இந்திரா'' என்ற சமூக நாடகம் சென்ற மாதம் 7-ந்தேதி நடைபெற்றது. இந்த நாடகத்தை எழுதித் தயாரித்தவர் எஸ். ஹரிஹரன் என்பவர். நாடகக் கதையும், வசனங்களும் சுமாராக இருந்தன. இதில் திருவல்லிக்கேணி நவஜோதி நாடக மண்டல் அங்கத்தினர்கள் பலரும் நடித்தார்கள். நாடகாசிரியரான ஹரிஹரன் சூதாடித் தந்தையாக நன்கு நடித்தார். அவரது மனைவியாக வந்த டி. சே. பட்டம்மாள் வெகு இயற்கையாக நடித்தார். நல்ல நடிப்புத் திறமை பெற்ற இவர் இம்மாதிரி பாத்திரங்களில் நடிப்பதுதான் வருந்தத் தக்க விஷயம். தஞ்சை சகோதரிகளான விசாவும், பிரஹதாவும் இரு நர்ஸுகளாக வந்தார்கள். இவர்களுக்கு நாடகமேடையில் நடிக்கத் திறமையில்லை என்றுதான் அன்று தெரிந்தது. நர்ஸாகவும், மேட்ரனாகவும் நடித்த பி. எஸ். பத்மாவதியும் நன்கு நடித்தார். அவரது பாட்டுகள் இனிமையாக இருந்தன. கதாநாயகனாக வந்த கல்யாணம் சிரமப்பட்டு நடித்தார். ராம்தாஸ் என்ற ஹாஸ்ய கதாபாத்திரமாக வந்த கண்ணன் நாடகத்திலேயே அடிக்கடி கலகலப்பு உண்டுபண்ணிக் கொண்டிருந்தார். அதிக ஒத்திகைகள் இல்லாமையே அன்றைய நாடகம் சோபிக்காததற்கு முக்கியமான காரணம். அன்றைய நாடகத்திற்கு சென்னை சர்க்கார் செய்தி இலாகா டைரெக்டர் ஆர். பார்த்தசாரதி தலைமை வகித்தார்.

சென்ற மாதம் 8-ந் தேதி, ''பூந்தோட்டம்'' என்ற நாடகத்தை, ஸ்டேஷனரி ஆபீஸ் இலக்கிய சங்கத்தினர் நடத்தினார்கள். தஞ்சாவூர் புயல் நிவாரண நிதிக்காக அன்று நடைபெற்ற அந்த நாடகத்திற்கு சென்னை கலெக்டர் ஸ்ரீ. டி. என். எஸ். ராகவன் ஐ. ஸி. எஸ். தலைமை வகித்தார்.

ஒய். எம். ஐ. ஏ. ஹாஸ்டல் தினவிழா சென்ற மாதம் 7-ந் தேதி, சென்னை கோகலே ஹாலில் நடைபெற்றது. பல நிகழ்ச்சிகளுக்குப் பிறகு, இறுதியில் ''தர்ம சங்கடம்'' என்ற குட்டி ஹாஸ்ய நாடகம் நடந்தது. நாடகம் மிகவும் சிறப்பாக இருந்தது. உயர்வான ஹாஸ்யத்தை நாடகாசிரியர் வி. எஸ். விஸ்வநாதன் கையாண்டிருந்தது பாராட்டத்தக்கது. பிரேமா பாத்திரத்தில் நடித்த தேவிகாராணி இயற்கையாக நடித்தார். கதாசிரியர் வி. எஸ். விஸ்வநாதன், ராமுவாக வந்து பிரமாதப்படுத்தி விட்டார். மொத்தத்தில், அன்றைய நாடகம் உயர்தர ஹாஸ்ய விருந்தாக இருந்தது.

சென்ற மாதம் 14ம் தேதி, 'வான விளக்கு'' என்ற நாடகம் சென்னை ஒற்றவாடைத் தியேட்டரில் நடைபெற்றது. நாடகத்தை, பாரத வீர வியாயாம் மண்டல் அங்கத்தினர்கள் தங்கள் மண்டல் நிதிக்காக நடித்தார்கள்.

சென்ற மாதம் 14ந் தேதி, 15ந் தேதி இரு தினங்களிலும், மயிலை ரஸிக ரஞ்சனி ஸபா ஆதரவில் ''தமிழ்ச் செல்வம்'' என்ற அருமையான நாடகம் நடந்தது. சிலப்பதிகாரம், புறநானூறு போன்ற பல இலக்கியங்களின் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட நாடகம் இது. நாடகத்தை அதன் சிறப்புக் குறையாது உணர்ச்சியுடன் நடித்தனர் டி.கே.எஸ். சகோதரர்கள். முதல் தினத்தன்று நாடகாசிரியருக்கும், பாட்டுகள் எழுதியவருக்கும் டி. கே. ஷண்முகம் பரிசுகளை வழங்கி பாராட்டிப் பேசினார்.

பத்திரிகைக் காட்சிகள்

சென்ற மாதம் 11ம் தேதி, கிருஷ்ணா பிக்சர்ஸின் ''அம்மலக்கலு'' தெலுங்குப் படத்தின் பத்திரிகைக் காட்சி மினர்வா டாக்கீஸில் நடைபெற்றது. அதே தினம் அருணா பில்ம்ஸின் ''குமாஸ்தா'' தமிழ்ப் படத்தின் பத்திரிகைக் காட்சி பாரகனில் நடைபெற்றது. மறுநாள், அவர்களது ''குமாஸ்தா'' தெலுங்குப் படத்தின் பத்திரிகைக் காட்சியும் அதே தியேட்டரில் நடந்தது. அன்றே, லிபர்ட்டி பிக்சர்ஸின் ''மதன மோஹினி''யின் பத்திரிகைக் காட்சி கெயிட்டி தியேட்டரில் நடந்தது.

புதிய கலா மந்திரம்

சென்னை, திருவல்லிக்கேணியில், சென்றமாதம் முதல் தேதி, 'ப. சம்பந்த முதலியார் கலாமந்திரம்' என்ற புது சங்கம் ஒன்று ஆரம்பமாகியுள்ளது. இச் சங்கம் இயல்—இசை—நாடகம் இவைகளை வளர்க்கப் பாடுபடுமாம்.

செங்கோட்டை ராணி

"ராதா"

சிறு கதை

உப்பரிகையின் 'பால்கனி'யில் நின்றபடி, மாலைக் கதிரவனின் ஒளியிலே கீழே விழும் நிழல்கள் நீண்டுகொண்டே போகும் விந்தையையும், பொன்னென மின்னும் மலைச் சரிவுகளையும் பார்த்து வியந்து கொண்டிருந்தாள் ரத்னா. அதே சமயம் அவள் மனதிலே விவரிக்க முடியாத பலவிதமான உணர்ச்சிகள் ஊசலாடிக் கொண்டிருந்தன.

செங்கோட்டை, செங்குத்தான மலை ஒன்றின் உச்சியிலே, எதிரிகளால் எளிதிலே கைப்பற்றிவிட முடியாத பத்திரமான இடத்திலிருந்தது. அவசியம் ஏற்பட்டு, தன் அருமை மகள் ரத்னாபாயைத் தனியே விட்டுப் போகவேண்டிய அவள் தந்தைக்கு தைரியம் கொடுத்தது செங்கோட்டையின் பலமும், பாதுகாப்புமே.

ரத்னாபாயின் தந்தைதான் செங்கோட்டையின் அதிபதி. அவர் சத்ரபதி சிவாஜியின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர். அது சமயம் ஷீஸ்காகான் என்ற முகலாய மன்னனுடன் போரில் ஈடுபட்டிருந்த மகாராஷ்டிரப் படையுடன் சேர்ந்து கொள்ள அவர் தம் படையுடன் கிளம்பிப் போனார். தம் மகள் ரத்னாவிடம் விடைபெற்றுக் கொள்ளும்போது, "கோட்டையிலே சில வீரர்களை மட்டுமே காவலாக வைத்து விட்டுப் போகிறேனே என்று அதைரியப் படாதே. நான் இல்லாத சமயம் கிழவர் தாதாஜி கவனித்துக்கொள்வார். ஔரங்கஸீப்பே எதிர்த்து வந்தாலும்—அவர் கோட்டையின் ரகசிய வழியைத் தெரிந்துகொள்ளாத வரையில்—பயமில்லை" என்று அவர் தைரிய மொழிகள் கூறினார்.

செங்கோட்டையின் ரகசிய வழியைப் பற்றிய ஒரு கதை இருந்து வந்தது. பல வருஷங்களுக்கு முன், எப்பொழுதோ ஒரு தலைவனால் கோட்டையின் ரகசிய வழி தகாத காரியங்களுக்கு பயன்படுத்தப்பட்டு வந்ததாம். அந்தத் தலைவனுடைய ஆவி எப்பொழுதும் அங்கே சுற்றிக் கொண்டிருப்பதாக ஜனங்கள் நம்பி வந்தார்கள். ஆனால், எவருமே அந்தப் பதிதனின் ஆவியைப் பார்த்ததில்லை. கோட்டைக்கு ரகசிய வழி ஒன்று இருப்பதாக சொல்லிக்கொண்டார்களே தவிர, அது எங்கிருக்கிறது என்பதும் யாருக்குமே தெரியாது.

"இன்னும் ஒரு பக்ஷத்திற்குள் எங்களைப் பற்றிய க்ஷேமலாபங்களுக்கு வீரன் தூலாஜி மூலம் செய்தி அனுப்புகிறேன். அதுவரை நீ கவலைப்படாதே" என்று கூறி, ரத்னாவிடம் தந்தை விடைபெற்றுக் கொண்டார், ரத்னாபாயின் தந்தை. தாயற்ற தன் அழகிய மகளை மிகவும் நேசித்தார். ஆனால் கடமையை மகளை விட அதிகமாக நேசித்தார். அவள் தந்தையின் தலைமையில் ஆயிரக்கணக்கான வீரர்கள் சென்றனர். அவர்களிடையே தான் இருந்தான் தூலாஜியும்.

வீரன் தூலாஜி கட்டழகன்; இளங்காளை. அவன், செங்கோட்டையின் தலைவனிடம் வீரனாக வந்து சேர்ந்து, சீக்கிரமே தந்தையின் நன்மதிப்பையும் மகளின் காதலையும் பெற்று விட்டான்.

கதிரவனும் மேற்கு திசையில் மறைந்து இருளும் தன் அதிகாரத்தை ஆரம்பித்து விட்டது. ரத்னா அப்பொழுது தான் தன் நினைவு பெற்று அங்கிருந்து கிளம்ப அடி எடுத்து வைத்தாள். கோட்டையை அடுத்திருந்த பிரதேசத்திலிருந்து குதிரைகளின் காலடி ஓசை கேட்டது. சப்தம் வந்த திசையிலே உற்றுப் பார்த்தாள். நக்ஷத்திரங்களின் ஒளியிலே, இருவர் ஒருவருடன் மற்றவர் நெருங்கியபடி

குதிரைகளில் வருவது தெரிந்தது. அவர்கள் கோட்டை வாயிலை சமீபித்ததும் அவள் கண்ட காட்சி அவள் ஆவலைப் பன்மடங்காக்கியது. அவ்விரு குதிரை வீரர்களும் நீளமானதொரு பெட்டியைச் சுமந்து வந்தனர். கோட்டை வாயிலில் வீரர்களால் அவர்கள் நிறுத்தப்பட்டார்கள்: சீக்கிரமே கிழவர் தாதாஜியும் அங்கு வந்தார். கோட்டை வாயில் திறக்கப்பட்டு, அவ்விருவரும் உள்ளே அனுமதிக்கப்பட்டனர்.

அவள் மனதிலே குறிப்பிட முடியாத பீதி ஒன்று ஏற்பட்டது. அவள் மனம் என்னவெல்லாமோ எண்ணி விட்டது. அந்த இரு குதிரைகளில் ஒன்று தன் காதலன் துலாஜியினுடையது என்பதை அறிந்தும்கூட அவளுடைய அச்சம் ஏனோ நீங்கவில்லை.

ரத்னா ஒருவிதமாக மனதைத் திடப்படுத்திக்கொண்டு கீழே இறங்கி வந்தாள். கீழே அவள் காதலன் தூலாஜி, தாதாஜியிடம் பேசிக்கொண்டிருந்தான். நீண்ட நேரப்பிரயாணத்தால் அவன் களைத்துப் போய்க் காணப்பட்டாலும் அவனுக்கு எந்த விதமான ஆபத்துமில்லை என்பது தெரிந்து ரத்னா சிறிது சமாதானமடைந்தாள். தாதாஜியின் ஆட்களிருவர் அந்தப் பெட்டியைச் சுமந்து வந்தார்கள். மூன்றாவது மனிதன் ஒருவன் பெட்டியின் பக்கத்தில் நடந்து வந்தான். பெட்டிக்குள் பார்த்த ரத்னா பயந்து நடுங்கிப் போனாள். அதனுள் கிடத்தப்பட்டிருந்த மனிதனின் உடலில் ரணகாயங்கள்.

தூலாஜி தன் தலைவனின் மகள் என்ற முறையில் ரத்னாவுக்கு வணக்கம் செலுத்தி "உண்மையில் மிகவும் பயங்கரமான காட்சி தான். இந்த வீரனை நான் வழியில் பார்த்தேன். அவனுடைய இந்த நண்பனின் உதவியால் மிகுந்த கஷ்டத்துடன் இங்கு கொண்டு வந்தேன்'' என்று கூறி, பெட்டியுடன் கூட வந்த மூன்றாவது மனிதனைக் காட்டி, "உதவிக்குத் தகுந்த ஆள் இல்லை என்பதற்காக ஒரு வீரனை விட்டு விட்டு வர முடியுமா?'' என்றான்.

''என் தந்தை சௌக்கியமா?'' என்று வாஞ்சையுடன் கேட்டாள் ரத்னா.

''சௌக்கியமாகவே இருக்கிறார். இங்கிருந்து புறப்பட்டது முதல் நடந்தவைகளை பிறகு கூறுகிறேன். உங்களுக்கு சுமை

யாக, காயம்பட்ட இந்த வீரனை இங்கு கொண்டு வந்தமைக்கு முதலில் மன்னிப்புக் கோருகிறேன்.

''தூலாஜி! நீங்கள் அந்த விஷயத்தில் வருத்தப்பட வேண்டியதேயில்லை. உதவி என்று தன்னை நாடி வந்தவர்களை செங்கோட்டை என்றுமே கைவிட்டதில்லை.''

''நான் திரும்பும் வழியில், இங்கிருந்து பல மைல்களுக்கு அப்பால் இந்த வீரன் இதே நிலையில் கிடப்பதைக் கண்டேன். இந்த வீரனைப்பற்றி அவனுடைய தோழனை இந்த ஆசாமியிடமிருந்து சில விஷயங்களைத் தெரிந்து கொண்டேன். இந்த வீரன், தெற்கேயிருந்து, சத்திரபதி சிவாஜி மகாராஜாவுக்கு முக்கியமான ஒரு கடிதம் எடுத்துச் சென்றானாம். வழியில் மொகலாயர் படையைச் சேர்ந்த சில வீரர்கள் மடக்கினார்களாம். வீரனுடைய நண்பன், இந்த பயந்தாங்குள்ளி ஓடி ஒளிந்து கொண்டானாம். இந்த வீரன் தன்னந் தனியே நின்று மொகலாய வீரர்களுடன் போரிட்டு சக்தியற்றுக் கீழே விழுந்து விட, அந்த வீரர்கள் இவனிடமிருந்த பொருள்களைப் பறித்துக் கொண்டு போய்விட்டார்களாம். சமயத்தில் போய் உயிர் ஒன்றைக் காக்க முடிந்தமைக்கு மகிழ்ச்சி அடைகிறேன்.''

''வீரர் இங்கு வந்ததில் எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. நானும் என் தாதியும் அவர் இங்கு இருக்கும் வரை நன்றாகப் பாதுகாப்போம். தேசத்துக்காகத் தங்கள் உயிரையும் மதியாது போரிடும் வீரர்களுக்கு உதவி செய்வதை விட எங்கள் இனத்தவருக்கு வேறு பெரு மகிழ்ச்சி என்ன இருக்க முடியும்?''

''மகாராஷ்டிர மங்கைக்கேற்ற பேச்சு. உண்மையில் இந்த வீரனை உங்கள் பாதுகாப்பில் வைப்பதே நலமென நம்புகிறேன்.'' — தூலாஜி.

ரத்னா காயம்பட்ட அவ் வீரனைத் தன் தந்தையின் அறையிலேயே படுக்க வைத்தாள். சமஸ்தான வைத்தியர் உடனே வரவழைக்கப் பட்டார். அவர் வீரனின் தேகத்தை நன்கு பரிசோதித்து, "உயிருக்கு பயமில்லை. இவ் வீரன் சீக்கிரமே மறுபடி தன் உயிரைத் திரணமாக மதித்துப் போராட பிழைத்து எழுவான்" என்று தமது அபிப்பிராயத்தை வெளியிட்டார். வைத்தியர், ரத்னா, தாதி, துலாஜி மூவர் உதவி கொண்டு காயங்களைக் கழுவி மருந்து வைத்துக் கட்டினார். அது முடிந்ததும் துலாஜி, "இதென்ன நீங்களெல்லாம் இன்னொரு வீரனை அடியோடு மறந்து விட்டீர்களே" என்றான். எல்லோருடைய பார்வையும் அது வரை பேசாது, அசையாது சிலை போல் நின்று கொண்டிருந்த காயம் பட்ட வீரனின் தோழன் மீது சென்றது.

"உனக்கு எங்கெங்கே காயம் ஏற்பட்டது" என்றார் வைத்தியர். அதற்கு பதிலாக அந்த விசித்திர ஆசாமி வைத்தியரை விழித்துப் பார்த்துவிட்டு பல்லை இளித்தான். வைத்தியர் மறுபடி கேட்ட போது தான் தன் கையை நீட்டினான். கையில் மிகச் சிறிய காயம் ஒன்று இருந்தது. "இவ்வளவு தானா?" என்றார் வைத்தியர்.

"இல்லை வைத்தியரே. என் முதுகில் ஆழமான மூன்று வெட்டுக் காயங்கள் இருக்கின்றன. எனக்கு வலி உயிர் போகிறது" என்று கூறி, தன் அங்கியைக் கழட்டி விட்டு முதுகைக் காட்டினான். ஆனால், அவன் முதுகில் ஒரு தழும்புகூட காணப்பட வில்லை.

வைத்தியருக்கு, அவன் பைத்தியம் என்ற விஷயம் விளங்கி விட்டது. அவன் முதுகிலே காயம் இல்லை என்பதைச் சொன்னால் அவன் ஒப்புக்கொள்ள மாட்டான் என்பதும் தெரிந்தது. பேசாமல் கையிலுள்ள சிறு காயத்துக்கு மட்டும் கழுவி மருந்து போட்டார். அதற்குள் அந்த மனிதன் போட்ட கூச்சல் சொல்லி முடியாது.

"வீர மகாராஷ்டிர இனத்துக்கே இவன் ஒரு திருஷ்டி பரிகாரம்" என்று கூறி நகைத்தான் துலாஜி.

சிகித்சை முடிந்து யாவரும் போனபின் துலாஜி ரத்னாவிடம் செங்கோட்டையிலிருந்து கிளம்பிப் போனது முதல் அன்று

வரை நடந்த விஷயங்களை விபரமாகக் கூறி முடித்தான். அவன் சொல்லி முடித்ததும் ரத்னு, "தூலாஜி, அப்படியானுல் நீங்கள் மறுபடி சீக்கிரமே திரும்பிப் போகவேண்டுமோ?" என்று கேட்டாள்.

"ஆம்; சீக்கிரமே போக வேண்டும். இன்னும் சில வீரர்களும், பொருளும் திரட்டிக் கொண்டு எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் திரும்ப வேண்டுமென எனக்குக் கட்டளை. என்ன செய்வது? யுத்தம் அப்படியிருக்கிறது" என்று கூறி, வருத்தத்தை மறைத்துக் கொள்ள புன்னகை செய்து, விடைபெற்றுக் கொண்டான்.

இரவிலே ரத்னுவும், தாதியும் கண் விழித்திருந்து, காயம்பட்ட வீரனையும், தோழனையும் கவனித்து வந்தார்கள்.

* * *

மறுநாள் காலையில் காயம்பட்ட வீரன் சௌக்கியமாகக் காணப்பட்டான். தன் நினைவு நன்ருக வந்து விட்டது. தன் விஷயத்தில் அவர்கள் எடுத்துக் கொள்ளும் சிரமத்திற்கும், சிரத்தைக்கும் தன் நன்றியறிதலை ரத்னுவுக்கும் தூலாஜிக்கும் தெரிவித்துக் கொண்டான்.

பிறகு ரத்னுவைத் தனிமையில் சந்தித்த தூலாஜி, "காயம்பட்ட வீரன் மிகவும் சந்தோஷமாகவே யிருக்கிருன். ரத்னு! உண்மையில், நான் அவனைக் கண்டு பொருமைப் படுகிறேன். உன்னைப் போன்ற அழகியின் சிசுருஷை கிடைப்பதானுல் என் வாழ்க்கையில் நான் பிரதி தினமும் காயம் பட்டுக் கொள்ளத் தயார்!" என்ருன்.

ரத்னுவின் முகம் நாணத்தால் சிவந்தது. "போரில் காயம்பட்ட மகாராஷ்டிர வீரர்கள் எவ்வளவு பேர் இருந்தாலும் இங்கு அனுப்புங்கள். நான் அவர்களுக்கெல்லாம் சந்தோஷமாக சிசுருஷை செய்வேன்" என்ருள்.

சமஸ்தான வைத்தியர் கூறியபடியே, வெகு சீக்கிரமே அந்த வீரன் தடியின் உதவிகொண்டு நடக்கும் சக்தியைப் பெற்ருன். அவனுடைய பைத்தியக்காரத் தோழனே வந்தது முதல் கோட்டையில் அங்கும் இங்கும் சுற்ற ஆரம்பித்துவிட்டான். அவன் வெகு சீக்கிரமே கிழவர் தாதாஜியிடமும் மற்றவர்களிடமும் நெருங்கிப் பழக ஆரம்பித்தான். எல்லோரும் அவனைக் கிண்டல் பண்ணி சிரித்து வந்தார்கள். அவனுக்கு எப்பொழுது பார்த்தாலும் பசிதான். சாப்பிடுவது, கோட்டையைச் சுற்றுவது, இது தான் அவன் வேலை. அத்துடன் மட்டுமின்றி, முற்றுகை ஏற்பட்டால் உபயோகிப்பதற்காக சேமித்து வைத்திருந்த தானியங்களையெல்லாம் 'பைத்தியம்' என்ற சலுகையில் வாரி வாரி இறைத்து நாசம் செய்து வந்தான்.

அந்த வீரன் உடல் தேர்ச்சிக்காக படுத்த படுக்கையாயிருந்த சமயம் ரத்னுவுடன் பேசுவது அவனுக்கு மிகவும் சந்தோஷமான பொழுது போக்காயிருந்தது. அவன், தான் ஒரு மகாராஷ்டிரப் பிரபுவுக்கு மேற்பட்ட அந்தஸ்து உள்ளவன் என்று சொல்லிக் கொண்டான். அவனுடைய, நடை, உடை பாவனைகளும் அவன் கூறியதை நிரூபிப்பதாயிருந்தன.

"பாதுகாவலாக மிகச் சிறிய படையுடன் இந்தக் கோட்டையில் இருக்க உனக்கு பயமாய் இல்லையா?" என்று கேட்டான் ஒருநாள் அந்த வீரன்.

"படை என்னவோ குறைவுதான். ஆனுல் கோட்டை மிகவும் பலமானது." என பதிலளித்தாள் ரத்னு.

"உண்மையில் கோட்டை மிகவும் பிரமாதமானது தான். அத்துடன் பழமையானதுங்கூட." அவனுடைய அடுத்த கேள்விதான் சம்பந்தமற்றதாயிருந்தது. "ஆமாம். இந்தக் கோட்டையைப்பற்றி விசித்திரமான செய்தி ஏதாவது உண்டோ? நான் கேட்பது என்னவென்ருல், கோட்டையில் பேய், பிசாசு பயம் உண்டோ?" என்ருன்.

ரத்னு ரகசிய வழி சம்பந்தமாக உள்ள வதந்தியைக் கூறி, "ஆனுல், எனக்கு நினைவு தெரிந்த வரையில் யாருமே அந்த ஆவியைப் பார்த்ததாக நான் கேள்விப்படவில்லை. அது சரி, அதைப் பற்றி நீங்கள் இப்பொழுது கேட்கவேண்டிய பிரமேயம்?" என்று வினவினுள்.

"என் தோழன் நேற்று இரவு ஒரு பிசாசைப் பார்த்ததாகக் கூறினுன். ஒருகால் அது பிரமையாகவும் யிருக்கலாம்."

"உங்கள் தோழர் மிக விசித்திர ஆசாமியாயிருக்கிருரே!"

"ஆமாம். அவன் அரைப் பைத்தியம். நேற்று நடுநிசியில் நான் திடுக்கிட்டு விழித்துக் கொண்டேன். என் எதிரே அவன் நடுங்கிக்கொண்டு நிற்பதைக் கண்டேன். தான் வெள்ளை உருவம் ஒன்றைப்

பார்த்து பயந்துப் கொண்டதாய் அவன் சொன்னான்'' என்றாள்.

மற்றொரு நாள் வீரனும், அவன் தோழனும் பேசிக் கொண்டிருந்த சமயம் ரத்னா அங்கு வந்தாள். "என்ன, மறுபடி நீங்கள் பிசாசு ஏதையாவது பார்த்தீர்களோ?'' என்று கேட்டாள்.

"நான் பார்க்கவில்லை. ஆனால் அந்தப் பிசாசு என் காதில், 'செங்கோட்டையைவிட்டு ஓடிவிடு' என்று சொல்லிக் கொண்டேயிருக்கிறது, இது மிகவும் பயங்கரமான இடம். ஆனால் நான் என் எஜமானனைத் தனியே விட்டுப்போக மாட்டேன்'' என்றான் பைத்தியம்.

திரும்பிய ரத்னா, வீரன் தன்னையே பார்த்துக் கொண்டிருப்பது கண்டு தலை குனிந்தாள். அவனும் சமாளித்துக் கொண்டு, "அம்மணி, தாங்கள் எனக்குச் செய்த உதவியை நான் எவ்வளவு பாராட்டுகிறேன் தெரியுமா? முற்றிலும் அன்னியனான என் விஷயத்தில் தாங்கள் இவ்வளவு சிரத்தை எடுத்துக் கொள்வது எனக்கே ஆச்சரியமாயிருக்கிறது. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். நீங்கள் இப்பொழுது எனக்குச் செய்யும் உதவியைக் குறித்து பிறகு எவ்வளவு சந்தோஷப்படப் போகிறீர்கள், தெரியுமா?''

அவனுடைய பேச்சையே காதில் வாங்காதவளாக ரத்னா, "இன்று உங்களுக்கு உடம்பு எப்படியிருக்கிறது?'' என்று கேட்டாள்.

"நான் பூரண சௌக்கியத்துடனேயே இருக்கிறேன். தங்கள் சிசுருஷையில் என் நிலைமை சீக்கிரமே அபிவிருத்தி அடைந்து படையுடன் போய்ச் சேர்ந்து விடுவேன். நான் இங்கிருந்து போன பிறகு என்றுமே எனது இதயத்தில் இங்கு கடந்த இன்ப நாட்கள் பசுமையாயிருக்கும். தங்களின் வசீகர உருவம் என் இதயக் கோவிலில் என்றுமே பதிந்திருக்கும்.''

ரத்னாவுக்கு அவனுடைய பேச்சு அருவருப்பையே அளித்தது. ஆனால் அவள் தன் வெறுப்பை வெளிக் காட்டவும் துணியவில்லை.

• • •

அன்று மாலை தூலாஜி ரத்னாவைப் பார்க்க வந்தான். அவன் செங்கோட்டையில் இன்னும் சில தினங்களே தங்கியிருக்க முடியும். சீக்கிரமே மறுபடி பிரிய வேண்டும் என்பதை எண்ணியபோதே இருவர் மனமும் வேதனையில் ஆழ்ந்தது. இருவரும் உப்பரிகையிலே ஆனந்தமாகப் பேசி பொழுதைப் போக்கிக்கொண்டிருந்தனர். அஸ்தமனமாகி நக்ஷத்திரங்களும் உதயமாகி விட்டன. அவர்கள் பொழுது போனது தெரியாது என்னென்னவோ பேசி மகிழ்ந்து கொண்டிருந்தார்கள்.

திடீரென்று ரத்னா தூலாஜியின் கைகளை கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, "தூலாஜி, அது என்ன? கீழே பாருங்கள்'' என்றாள் பயந்த குரலில். அவள் காட்டிய திசையில், மங்கிய ஒளியில், வெள்ளை உருவம் ஒன்று அசையாது நிற்பதைப் பார்த்தான். அன்றொரு நாள் வீரன் கூறியது ரத்னாவுக்குச் சட்டென்று ஞாபகத்துக்கு வரவே, "தூலாஜி! அது......அது பிசாசுதான்!'' என்று கூறி பயத்தினால் தூலாஜியை அணைத்துக் கொண்டாள்.

தூலாஜியும் ரகசிய வழி சம்பந்தமான வதந்தியைக் கேள்விப்பட்டிருக்கிறான். சுத்த வீரனான அவன் உடலிலும் ஒரு விநாடி நடுக்கம் ஏற்பட்டது. அடுத்த விநாடியே அந்த நடுக்கத்தை உதறித் தள்ளினான். "ரத்னா! வீணாகப் பதறாதே. அநேகமாக அது ஒரு மனிதனாகத்தான் இருக்கும்'' என்று கூறி அவளது பயத்தைத் தெளிவிக்க முயற்சித்தான்.

"இல்லை, அது மனிதனைப் போல இல்லை. பிசாசைப் போல்தான் இருக்கிறது!''

உண்மையில் அந்த உருவம் மனிதனைப் போல் இல்லவே யில்லை. அது மெல்ல நகருவது தெரிந்தது. அது நடப்பதாகவே தெரியவில்லை. காற்றிலே மிதந்து போவது போலிருந்தது.

"சரி. நாம் கீழே போய்ப் பார்க்கலாம், வா.''

தூலாஜி பரக்கப் பரக்க இறங்கி ஓடி வந்தான். அவன் கீழே வருவதும் அந்த உருவம் ஒரு மூலையில் போய் மறைவதும் சரியாக இருந்தது. அவன் அது மறைந்த பக்கம் ஓடிப் போய்ப் பார்த்தான். அங்கு எதையுமே காணோம். சிறிது தூலைவிலிருந்து யாரோ ஒருவன் கூக்குரல் போட்டபடி தூலாஜியின் மேல் வந்து விழுந்தான் ஏகமாகக் கூக்குரல் போட்ட அந்த மனிதன் வீரனின் தோழனை அரைப்பைத்தியமே என்பது தெரிந்ததும், "ஏய்! ஊளையிடுவதை நிறு

த்து, உனக்கு என்ன வந்துவிட்டது?'' என்று சற்றுக் கடுமையாகவே கேட்டான் தூலாஜி.

''எஜமான், நான் மறுபடியும் அதைப் பார்த்தேன்! அந்தப்பிசாசு!..அது என்னை அறைந்துவிட்டு எங்கேயோ மறைந்துவிட்டது. நான் செத்தே போனேன்!'' என்று அலறினான்.

இதற்குள்ளாக அந்தப் பைத்தியம் போட்ட கூச்சலில் பலர் அங்கு வந்து கூடி விட்டார்கள். எல்லோரும் தேடினார்கள். ஆனால், பலனில்லை.

தூலாஜியும், ரத்னாவும் நேரே பார்த்த பிறகு ஆவி உலாவுவது பிரமை என்பது போய், ஜனங்கள் நம்ப ஆரம்பித்தார்கள். அதன் பிறகு சில தினங்களில் கோட்டையிலுள்ள பலர் அந்த உருவத்தைப் பார்த்ததாகச் சொன்னார்கள்.

* * *

தூலாஜி திரும்ப வேண்டிய தினமும் வந்தது. கிடைக்கக்கூடிய செல்வத்தையும், சேனையையும் திரட்டியாகி விட்டது. காதலர்களின் மனம் பிரிவால் வருந்தினாலும் அதை மறைத்து ஒருவருக்கு மற்றவர் தைரிய மொழிகள் கூறிக் கொண்டார்கள். தூலாஜி, ரத்னாவிடம் விடை பெற்றுத் திரும்பும் சமயம், அந்தப் பைத்தியக்காரனைப் பார்த்தான். அவன் முகம் சவம் போல் வெளுத்துப் போயிருந்தது. ''எஜமான்! என்னால் இனி ஒரு நிமிஷம் கூட இங்கு இருக்க முடியாது. இருந்தால் பைத்தியம் பிடித்து விடும். உங்களைக் கெஞ்சுகிறேன். என்னையும் உங்களுடன் அழைத்துப் போங்கள்'' என்று கூறி கைகளைப் பிசைந்தான் அவன்.

அது சமயம், தடியின் உதவி கொண்டு அந்த வீரன், மெதுவாக அங்கே நடந்து வந்தான். தன் தோழனின் வேண்டுகோளை நிராகரிக்காது அழைத்துப் போகும்படி கேட்டுக் கொண்டு, ''தூலாஜி! அவனைத் தாங்கள் அழைத்துப் போனால் அது தாங்கள் எனக்குச் செய்யும் பெரிய உதவியாகும். அவன் என்னை இங்கு ஒரு வினாடி கூட மனச் சாந்தியுடன் இருக்க விடுவதில்லை'' என்று சொன்னான்.

''நல்லது. நான் அவனை அழைத்துப் போகிறேன். ஆனால் அவன் என்கூட வரும் இடங்களில் பேய், பிசாசுகளைக் கண்டு, அலற மாட்டான் என்பது என்ன நிச்சயம்?''

உங்கள் குடும்பங்களுக்கு அவசியமான
பர்த் ஸ்டேபிரைட்
அலுமினியம் பாத்திரங்கள் எங்களிடம் ஏராளமாய் கிடைக்கும்.

எம்.ஏ.எதிராஜுலுநாயுடு
7-A ஈவினிங் பஸார்
சென்னை-1.

''எஜமான்! இந்தப் பொல்லாத கோட்டையை விட்டு எங்கு போனாலும் நான் பேய், பிசாசுகளைக் காண மாட்டேன்'' என்று பரிதாபப்படும்படி சொன்னான்.

''சரி, என்னுடன் வா. ஆனால் இப்பொழுதே எச்சரிக்கை செய்து வைக்கிறேன். போகிற வழியில் எங்கேயாவது பேய், பிசாசுகளைப் பார்த்ததாகப் புரளி செய்தாயானால், உண்மையிலேயே உன்னைப் பேய் உலகத்துக்கு அனுப்பி விடுவேன். ஜாக்கிரதை!''

* * *

தூலாஜி புறப்பட்டுப் போன மறுநாள் இரவு, ஆழ்ந்த நித்திரையி லிருந்த ரத்னா ஏதோ சப்தம் கேட்டு விழித்துக் கொண்டாள். தன் அறையில் ஒரு மனிதன் நிற்பதைப் பார்த்ததும்,எழுந்து தன் படுக்கையில் உட்கார்ந்தாள். சட்டென்று அந்த மனிதன் தன் முரட்டுக் கையால் அவள் வாயைப் பொத்தி, ''வீணாகக் கூச்சல் போட்டு ஆட்களை அழைக்காதே. நீ அப்படிச் செய்தால் உனக்குத் தான் கெடுதி நேரிடும்'' என்று மெதுவாய் கூறினான்.

அங்கு தொங்கிய லஸ்தர் விளக்கின் ஒளியிலே 'அந்த மனிதன் வேறு யாருமல்ல, தான் சிசுருஷை செய்து காப்பாற்றிய வீரன் தான்' என்பதைத் தெரிந்து கொண்டாள் ரத்னா.

அவன், அவள் வாயைத் தன் கையால் பொத்தியபடியே, ''நான் சொல்வதைக் கவனமாகக் கேள். நீ கூச்சல் போடுவதில்லை என்று சத்தியம் செய்தால் நான் கையை எடுக்கிறேன். நீ கூச்சல் போடுவதால் எனக்கு எதுவும் பாதகமில்லை. உனக்குத்தான் வீண் சிரமம். அந்த சாளரத்தின் வழியாக என்ன தெரிகிறது என்று பார்'' எனக் கூறி, அவள் வாயைப் பொத்தியிருந்த தன் கையை எடுத்தான்.

ரத்னா சாளரத்தின் வழியே வெளியே பார்த்தாள். அஷ்டமிச் சந்திரனின் மங்கிய நிலவொளியிலே அவளுக்கு எதுவும் ஸ்பஷ்டமாகப் புலனாகவில்லை. என்றாலும் கோட்டைக்கு உள்ளேயும் வெளியேயும் ஆட்களும், குதிரைகளும் நிறைந்திருப்பது மட்டும் தெரிந்தது.

ரத்னா, அவன் பக்கம் திரும்பி, ''என்ன இது?'' என்றாள். அவள் கண்கள் ஆத்திரத்தினாலும், கோபத்தினாலும் தீச்சுடர் போலப் பிரகாசித்தன. ''உண்மையில் நீ யார்?'' என்று கேட்டாள்.

அந்த மனிதன் லேசாகப் புன்னகை புரிந்தான். ''அழகியே! வீணே பதறாதே! உன் கேள்விகளுக்கு பதில் கொடுக்க நான் காத்துக் கொண்டிருக்கிறேன். முதல் கேள்விக்கு பதில், இது யுத்தம். நான் யாரென்று நீ அவசியம் தெரிந்து கொள்ள வேண்டியதுதான். நான்தான் டில்லியின் இளவரசன் அப்துல் அமீர்ஜா. காயம்பட்ட மகாராஷ்டிர வீரனாக இங்கே வந்தது ஒரு ரகஸியத்தைத் தெரிந்து கொள்ளுவதற்காகத் தான். ஆனால், இங்கு வந்த பிறகு இரண்டு ரகஸியங்களை அறிந்து கொண்டேன். மகாராஷ்டிரத்தின் அழகு தேவதை செங்கோட்டையில் இருக்கிறாள் என்பது ஒன்று. மற்றொன்று கோட்டையின் ரகஸிய வழி.''

''ரகஸிய வழியைத் தெரிந்துகொண்டு விட்டீர்களா?'' என்று கூவினாள். அந்தக் குரலில் துக்கம், ஆவல் எல்லாம் கலந்திருந்தன.

''என்னை ஆட்டி வைக்கும் அழகியே, நான் செங்கோட்டைக்கு வந்ததே அந்த நோக்கத்துடன் தான். தூலாஜி திரும்பி வரும் செய்தியை அறிந்த நான், என் நண்பன்—நீங்கள் பைத்தியம் என எண்ணி ஏமாந்த — ஹபீப்பின் உதவியால் என் தேகத்தில் வேண்டுமென பல இடங்களில் வெட்டுக் காயங்களை ஏற்படுத்திக் கொண்டு, தூலாஜி வரும் வழியில் கிடந்தேன். எங்கள் சூழ்ச்சி வெற்றி அடைந்தது. என் நண்பன் ஹபீப் ஒரு சிறந்த நடிகன். யாரும் சந்தேகிக்காத வகையில் அவன் ஒரு அரைப் பைத்தியமாக நடித்தான். மகாராஷ்டிரத்தின் அழகு தேவதையின் சிசுருஷையில் என் காயங்கள் குணமாகி வந்த சமயம், என் நண்பன் கோட்டையின் ஒவ்வொரு பாகத்தையும் ஆராய்ச்சி செய்து வந்தான்.''

''பழைய தலைவன் ஒருவனின் ஆவியைப் பற்றிய கதை எங்கள் சூழ்ச்சிக்கு மிகவும் உதவி செய்தது. என் தோழன் இரவு நேரங்களில், ரகஸிய வழியைக் கண்டு பிடிக்க வேலை செய்யவேண்டி யிருந்ததால், நாங்கள் ஜனங்கள் மறந்து போயிருந்த பேய்க் கதையை மறுபடி கிளப்பி விட்டோம். என் தோழன் தான் பிசாசாக நடித்தான். அல்லாவின் கருணையால் எல்லாம் எங்கள் யோசனைப் படியே நடந்து விட்டது. என் நண்பன் ரகஸிய வழியையும் கண்டு பிடித்து விட்டு, அந்த முட்டாள் தூலாஜியுடன் செங்கோட்டையை விட்டு வெளியேறி விட்டான்.

"என் தோழன் இந்நேரம் கோட்டைக்கு வெளியே ஒளிந்திருக்கும் எங்கள் படையிடம் ரகஸிய வழியைக் கூறி விட்டு, தூலாஜியுடன் போயிருப்பான். எதற்குத் தெரியுமா? தூலாஜியையும் அவன் படையையும், ஏதேனும் ஒரு சூழ்ச்சி செய்து அழித்து விட்டுத் திரும்பி வரத் தான்."

ரத்னுவின் உடல் பயத்தினுல் நடுங்கியது.

"ரத்னு! வீணுக நடுங்காதே. மண்ணுேடு மண்ணுகப் போகும் மடையன் உன் காதலனை எண்ணி மனம் நோகாதே. அந்த இடத்தை எனக்கு அளித்து விடு. அதோ என் படை வீரர்கள் ரகஸிய வழியாக கோட்டைக்குள் வந்து விட்டார்கள்."

கோட்டைக்கு உள்ளேயும், வெளியேயும் ஒரே களேபரமா யிருந்தது. கூச்சல் அசாத்தியமா யிருந்தது. கத்திகள் ஒன்றுடன் ஒன்று உராயும் சப்தமும், குதிரைகளின் காலடி ஓசைகளும், ஜனங்களின் கூக்குரலும் ஏகமா யிருந்தன.

ரத்னு தன் படுக்கையில் பொத்தென்று விழுந்தாள். அவள் மனம் குழம்பிப்போயிருந்தது. மேலே என்ன செய்வது என்பது அவள் மூளைக்கு எட்டவில்லை.

"எங்கள் படை வருவதற்காகவே நான் தாமதித்திருந்தேன். என் படை மறைவிடத்திலிருந்து வெளிக் கிளம்பியதும் உன்னிடம் ஓடோடி வந்தேன். நான் உன்னுடனேயே—உன் பக்கத்திலேயே இருப்பேன். அதுவே உனக்குத் தகுந்த பாதுகாப்பு. என் ஹிருதய ராணியே, எந்த நிமிஷம் இடிந்து விழுந்து விடுமோ என்ற இந்த எலி வளையைவிட்டு என்னுடன் வா. டில்லியிலே மாடமாளிகையிலே சொகுசாக வாழலாம்."

ரத்னு பதிலே சொல்லவில்லை.

"வேண்டாம் பிடிவாதம், வா!" என்று ரத்னுவின் கையைப் பிடித்தான் வீரன். தன் பலத்தையெல்லாம் கொண்டு அவன் இரும்புப் பிடியை உதறினுள் ரத்னு. அதே சமயம், ஆயுதம் தாங்கிய சிப்பாய்கள் பலர் அறையினுள் வருவதையும் கண்டாள். அவள் தலை சுற்றியது; கண்கள் இருண்டன; அப்படியே தன் நினைவற்றுக் கீழே சாய்ந்தாள்.

* * *

ரத்னு மறுபடி கண் விழித்தபோது தன் அறையில், தன் மஞ்சத்தில் படுத்திருப்பதை உணர்ந்தாள். ஒரு அழகிய வாலிபன் கவலையுடன், குனிந்து, அவள் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். ரத்னு தன் கண்களைத் துடைத்துக் கொண்டு மறுபடியும் பார்த்தாள்.

இனிமேலுமா சந்தேகம்!

"தூலாஜி! நீங்கள்தானே!" என்று ஆனந்தத்துடன் கூவினுள். "எப்பொழுது!...எப்படி?"

"பேசாமல் படுத்துக்கொள். எல்லாம் சொல்லுகிறேன். மொகலாயர்கள் வெற்றி அடைந்திருப்பார்கள். உண்மையில் அந்த இருவரும் அசகாய சூரர்கள் தான். அநேகமாக அவர்கள் கோட்டையைக்கூட கைப்பற்றிவிட்டார்கள் என்றே சொல்லவேண்டும். ஆனுல், அரைப் பைத்தியமாக நடித்தானே, அவன் தூக்கத்தில் தன் சொந்த பாஷையான பாரஸீகத்தில் சில முக்கியமான விஷயங்களை உளறிக் கொட்டி விட்டான். அதில்தான் அவர்கள் யோசனைகளெல்லாம் தவிடு பொடியாகி விட்டன. தக்ஷணமே நான் நமது படையுடன் கிளம்பி விரைந்து வந்தேன். வெளியே குழுமி யிருந்த எதிரியின் படையுடன் போரிட்டு கோட்டைக்குள் நுழைவதற்குள் போதுமென்ருகி விட்டது. ஆனுல், நல்லகாலம் சமயத்தில் வந்துவிட்டேன்."

"தகுந்த சமயத்தில் வந்து எதிரிகளிடமிருந்து செங்கோட்டையை நீங்கள் காப்பாற்றி விட்டீர்கள்."

"கோட்டையை மட்டும்தானு? அதன் ராணியான உன்னையும் கூடத்தான்!"

ரத்னு வெட்கத்தால் முகம் சிவக்கத் தலை குனிந்தாள். வெளியே யிருந்து, "மாதா பவானிக்கு ஜேய்! சத்ரபதி சிவாஜி மகாராஜாவுக்கு ஜேய்!" என்ற கோஷங்கள் காற்றிலே மிதந்து வந்தன.

திருமூர்த்தி பஞ்சாங்கம்

சுகுணு பப்ளிஷிங் ஹவுஸ், சென்ற வருஷத்தைப் போலவே புதிய ஸ்ரீ விஜய வருஷத்திற்கான திருமூர்த்தி பஞ்சாங்கத்தை மிகச் சிறந்த முறையில் வெளியிட்டிருக்கிருர்கள். இதன் பிரசுரகர்த்தர் ஆக்கூர். கா. சு. ஸ்ரீநிவாஸன். ஆறு அணு விலையிடப்பட்டுள்ள இந்த பஞ்சாங்கம் சுகுணு பப்ளிஷிங் ஹவுஸ், 60, ஈசுவரன் கோவில் தெரு, சென்னை 17 என்ற விலாசத்தில் கிடைக்கும். பஞ்சாங்கத்தில் பல முக்கியமான விஷயங்கள் தெளிவாகக் கூறப்பட்டிருக்கின்றன.

பிரம்மலோகம்

மனோஹர் பிக்சர்ஸாரின் "மனோஹரா" நெப்டியூனில் இப்பொழுது தொடர்ந்து படமாகி வருகிறது. பிரஸாத் டைரெக்ஷனில் இக்கதை தமிழ்-தெலுங்கு-ஹிந்தி மூன்று பாஷைகளில் ஏக காலத்தில் தயாராகி வருகிறது. திரைக் கதையில் சில நல்ல மாறுதல்கள் செய்யப்பட்டிருப்பதாகத்தெரிகிறது. இப்படத்தின் வசனங்களை மு. கருணாநிதி எழுதியிருக்கிறார். இப்படங்களில் மனோஹரனாக "பராசக்தி" கணேசன் நடித்து வருகிறார். மற்றும் பி. கண்ணாம்பா, டி. ஆர். ராஜகுமாரி, ஜாவர் சீதாராமன், முஸ்தாபா ஆகியோர் முக்கிய பாத்திரங்களில் நடித்து வருகின்றனர்; சமீபத்தில் நன் மந்திரி குணசீலர் (ஜாவர் சீதாராமன்) சம்பந்தப்பட்ட சில காக்ஷிகள் படமாயின.

அழகி

எஸ். ஏ. நடராஜன். வெங்கட்ராமன், கிருஷ்ணகுமாரி மூவரும் தோன்றும் கட்டமொன்று "அழகி" படத்திற்கென நெப்டியூன் ஸ்டுடியோவில் படமாக்கப்பட்டது. இது ஜுபிடரின் தனிப் படம். சுந்தர்ராவ் நட்கர்ணியின் டைரெக்ஷனில் தமிழ்-தெலுங்கு இரு பாஷைகளிலும் இது படமாகி வருகிறது. என். சுவாமிநாதன் என்பவர் தமிழ்ப் படத்தின் வசனங்களை எழுதியுள்ளார். மற்றும் இப்படத்தில் வி. கே. ராமசாமி, நம்பியார், ரேவதி, ஸி. கே. சரஸ்வதி ஆகியோரும் நடித்து வருகின்றனர். இன்னும் மூன்றே மாதங்களில் இது திரைக்கு வந்துவிடக் கூடுமெனத் தெரிகிறது.

இன்ஸ்பெக்டர்

"மனிதனு"க்குப் பின் ஜுபிடரிலிருந்து வெளிவரப் போவது "இன்ஸ்பெக்டர்"தான் என்பது நிச்சயம். படம் பூர்த்தியாக இன்னும் இரண்டொரு காக்ஷிகளே உள்ளனவாம். அவைகளும் மிகச் சிறிய ஒட்டு வேலைகள்தானும். நா. சோமசுந்தரம் எழுதிய இந்த நாடகம் டி. கே. எஸ். கோஷ்டியினரால் நடித்து பிரபலம் அடைந்தது. சமீபத்தில் இப்படத்திற்கென போலீஸ்ஸ்டேஷன்காட்சி ஒன்று படமாகியது. டி. கே. ஷண்முகம். டி. கே. பகவதி, பாலசந்தர், சிவதாணு. எஸ். ஏ. நடராஜன், அஞ்சலிதேவி. பி. கே. சரஸ்வதி ஆகப் பலர் நடித்து வருகின்றனர். நெப்டியூன் ஸ்டுடியோவில் ஆர். எஸ். மணி டைரெக்ஷனில் உருவாகி வருகிறது படம்.

பெற்ற மனம்

பிரஸாத் ஆர்ட் பிக்சர்ஸின் "பெற்ற மனம்" வாஹினி ஸ்டுடியோவில் இடைவிடாது தயாராகி வருகிறது. தமிழ்-தெலுங்கு இருமொழிகளிலும் பிரஸாத் டைரெக்ஷனில் உருவாகி வருகிறது. படக் கதை மு. வரதராசனுடையது. தமிழ்ப் படத்தின் வசனங்களையும் அவரே எழுதியிருக்கிறார். முதன் முறையாக "பராசக்தி" கணேசன் இப்படத்தில் வில்லனாக நடிக்கிறாராம். இவர் தவிர, ராஜேந்திரன், பி. கே. சரஸ்வதி, புஷ்பவல்லி, மாஸ்டர் சேது. பிரசாத் சாவித்ரி குமாரி, சுரபி கமலா. எஸ். வி. ரங்கராவ் ஆகியோரும் நடித்து வருகிறார்கள்.

பெற்ற தாய்

பிரகாஷ் ராவ் டைரெக்ஷனில், பிரகாஷ் ஸ்டுடியோவில் அவர்களது "பெற்ற தாய்" இரு பாஷைப் (தமிழ்-தெலுங்கு) படங்களின் படப்பிடிப்பு முடிவடைந்து வருகிறது. ஜி. வரலக்ஷ்மி, நாகேஸ்வர ராவ், எம். என். எம். நம்பியார் பிரதம பாகங்களில் நடித்து வருகின்றனர். ஜி. வரலக்ஷ்மி பெற்ற தாயாக மிக உணர்ச்சியுடன் நடித்திருக்கிறாராம்.

செல்லப்பிள்ளை

ஏவி. எம். ஸ்டுடியோவில், "மேனா"வின் மேற்பார்வையில் அவர்களது "செல்லப் பிள்ளை"க்கு மெருகூட்டும் வேலை இப்பொழுது நடைபெற்று வருகிறது. புது மாதிரியான கருத்துக் கொண்ட சமூகக் கதையாக இருக்குமாம் இது. இது, தெலுங்கிலும் "வதினா" என்ற பெயரில் தயாராகி வருகிறது. தமிழ்ப் படத்தில் கண்ணாம்பா, சாவித்திரி,

பண்டரிபாய், கே. ஆர். ராமசாமி, பி. ஆர். பந்துலு, ராதாகிருஷ்ணன் ஆகப் பலர் நடித்து வருகின்றனர். இப்படம் சீக்கிரமாகவே திரைக்கு வந்துவிடக் கூடுமெனத் தெரிகிறது.

மனைவியின் மகன்

ஜம்பு புரொடக்ஷன்ஸின் 'மனைவியின் மகனு''க்காக, ரேவதி ஸ்டுடியோவில் சமீபத்தில் ஒரு பாங்கி காட்சி படமாக்கப் பட்டது. எம். வி. ராமன் டைரெக்ஷனில் தமிழ்—ஹிந்தி இருபாஷைகளிலும் இது படமாகி வருகிறது. படக் கதை ''ராவே''யினுடையது. அவரே தமிழ்ப் படத்தின் வசனங்களை எழுதியுள்ளார். ஹிந்திப் பட வசனங்களை ராஜேந்திரகிருஷ்ணன் எழுதியுள்ளார். ஏற்கெனவே உள்ள நடிகர்களுடன், 'பொட்டை' கிருஷ்ணமூர்த்தியும் இப்படத்தில் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறார். இப்படத்திற்கென தண்டபாணி ஒரு பிரமாதமான நடனத்தைத் தயாரித்து வருகிறாராம்.

பொன் வயல்

ஜயந்தி புரொடக்ஷன்ஸின் ''பொன் வயல்'' (தமிழ்) ''பங்காரு பூமி'' (தெலுங்கு) இரண்டும் வாஹினியில் பாதிக்கு மேல் தயாராகி விட்டன. ஏ. டி. கே. படம் சிறந்த முறையில்அமையவேண்டுமென சிரத்தையுடன் டைரெக்ட் செய்து வருகிறார். அஞ்சலிதேவி,புதியமுகம்மைனுவதி, டி.முத்துலக்ஷ்மி, குமுதினி, டி. ஆர். ராமச்சந்திரன், கே.சாரங்கபாணி, மனோஹர், பி. டி. சம்பந்தம் ஆகப் பலர் நடிக்கும் படங்கள் இவை. மதருஸ் பிக்சர்ஸ் வெளியீடாகஇவைஜூன்மாதம் திரைக்கு வரக் கூடும்.

பத்மினி

கோவை, சென்ட்ரல் ஸ்டுடியோவில், எஸ்.வேல்சாமி கவியின் டைரெக்ஷனில் ''பத்மினி'' பாதிக்கு மேல் வளர்ந்து விட்டதாம். பி. எஸ். கோவிந்தன், மோஹன், எஸ். மேனகா, எஸ். ஆர். ஜானகி முதலியவர்கள் பிரதம பாகங்களில் நடித்து வருகின்றனர். புதுமைக் கருத்துக்கள் நிறைந்துள்ளதாக இருக்கும் எனத் தெரிகிறது. அசோகா புரொடக்ஷன்ஸாரது தயாரிப்பாகும் இப் படம்.

குண்டூசி டைரி

பிப்ரவரி '53

22. அமைச்சூர் நடிகர்கள் குழுவினர் தங்கள் சங்கத்தின் 3-வது ஆண்டு விழாவைக் கொண்டாடினர்.
மயிலாப்பூர் பைன் ஆர்ட்ஸ் கிளப் அங்கத்தினர்கள் ''இரு மனம்'' நாடகத்தை நடித்தனர்.

26. ஜெமினியின் ''மிஸ்டர் சம்பத்'' பத்திரிகை காட்சி நடைபெற்றது.

மார்ச் '53

1. சென்னையில் ப. சம்பந்த முதலியார் கலா மந்த்ரம் என்ற பெயரில் ஒரு கழகம் ஆரம்பமாயிற்று.

3. பிரதேசதணிக்கைஅதிகாரி கே. ஸ்ரீனிவாஸனுக்கு பட உலகப்பிரமுகர்கள் பிரிவு உபசாரம் அளித்தனர்.

4. கே. ஸ்ரீனிவாஸன் பத்திரிகைப் பிரதிநிதிகளை சந்தித்துப் பேசினர்.

5. ஜுபிடர்—மேகலா கூட்டுத் தயாரிப்பான ''நாம்'' தமிழ் நாட்டில் திரையிடப் பட்டது.

7. நவஜோதி நாடக மண்டல் அங்கத்தினர்கள் ''நர்ஸ் இந்திரா'' நாடகத்தை நடித்தனர்.

11. அருணா பில்ம்ஸின் ''குமாஸ்தா'' (தமிழ்) பத்திரிகைக் காட்சி நடைபெற்றது.
கிருஷ்ணா பிக்சர்ஸ் ''அம்மலக்கலு'' தெலுங்குப் படத்தின் பத்திரிகைக் காட்சி நடைபெற்றது.

12. லிபர்ட்டி பிக்சர்ஸ் ''மதன மோஹினி'' அருணாவின் ''குமாஸ்தா'' (தெலுங்கு) இவைகளின் பத்திரிகைக் காட்சி நடைபெற்றது.

14. லிபர்ட்டி பிக்சர்ஸ் ''மதன மோஹினி'' தமிழ் நாட்டில் திரையிடப்பட்டது.

15. விகட ஜோடியான சந்தானம், சந்துரு இருவருக்கும் ''விகட ரத்னம்'' பட்டம் அளிக்கப்பட்டது.

16. சினிமா ரஸிகர்கள் சங்கத்தினர், பில்ம் தேர்தல் நிதிக்காக ''சௌகார்'' படத்தைத் திரையிட்டனர்.

19. தென்னிந்திய பில்ம் சேம்பர். புதிய பிரதேச தணிக்கை அதிகாரிக்கு வரவேற்பளித்தனர்.

வாழ்க்கை வர்ணனை

[12-ம் பக்கத் தொடர்ச்சி]

பெக்டர்'' படத்தில் அவர் நடனம் மட்டும் ஆடியிருக்கிறார்.

இவை யெல்லாவற்றையும்விட அவருக்கு மிக அரியதான சந்தர்ப்பத்தை டைரெக்டர் எம். எல். பதி தம் ''மதன மோஹினி'' படத்தில் துணிந்து அளித்திருக்கிறார். சமீபத்தில் வெளிவந்துஓடிக் கொண்டிருக்கும் இப்படத்தில், ராஜகுமாரிக்கு கதாநாயகி வேஷமே அளிக்கப்பட்டிருக்கிறது. இது தவிர அவர் இரு வேஷங்களிலும் தோன்றியிருக்கிறார். அவரைப் பொருத்தவரையில் நன்றாகவே நடித்திருக்கிறார் என்று சொல்லலாம்.

ராஜகுமாரி நடித்துள்ள படங்களை ஆராய்ந்தால் நடனத்தில் அவருக்கு நல்ல புகழ் இருக்கிறது. நடிப்பில் அவர் மிக சிரத்தை எடுத்துக் கொண்டு எவ்வளவோ முன்னேற வேண்டியிருக்கிறது. ஆனால், எதிர்காலத்தில் முன்னணிக்கு வரக்கூடியவர்தான் என்பதை மட்டும் தாராளமாய் கூறலாம்.

ராஜகுமாரி தற்போது ஸி. &. ஸி. புரடக்ஷன் ஸாரின் '' தாம்பத்யம் '' (மலையாளம்), '' இல்லரசி'' (தமிழ்) ஆகிய படங்களில் (நரசிம்ம பாரதியுடன்) நடிப்பதற்கு ஒப்பந்தம் ஆகியிருக்கிறார். அவர் இது வரை தோன்றிய எந்தப் படத்திலுமே பாடவில்லை. ஆனால், இப்பொழுதும் அவர் தொடர்ந்து சங்கீதம் பயின்று வருவதால், எதிர் காலத்தில் அவர் தமக்குத் தம் குரலையே உபயோகித்துக் கொள்ளவும் கூடும்.

சினிமாப் படங்களில் ஆடுவது தவிர, மேடையிலும் அவர் அடிக்கடி ஆடுகிறார். இப்பொழுதெல்லாம் அவரது கச்சேரிக்கு வழுவூர் ராமய்யா பிள்ளையின் சிஷ்யரான ராமசாமி நட்டுவாங்கம் செய்கிறார்.

ராஜகுமாரி சென்ற ஜனவரி மாதம் 28-ந் தேதியன்று தம் முதல் பெண் குழந்தைக்குத் தாயார் ஆன செய்தியை நீங்கள் ''குண்டூசி''யில் முன்பே படித்திருப்பீர்கள். இக்குழந்தைக்கு ''மதன மாலா'' என்று பெயரிடப்பட்டிருக்கிறது.

ரோஜா ஒத்த சிவந்த நிறமும், முத்துப் போன்ற பல் வரிசைகளும், அழகிய முகத் தோற்றமும், மெலிந்த துவளும் தேகமும் ஐந்தடி உயரமும் உடையவர் ராஜகுமாரி. அவரது தாய் பாஷை தமிழ். இது தவிர அவருக்கு தெலுங்கும், கொஞ்சம் ஆங்கிலமும் தெரியும்; தற்போது ஹிந்தி பாஷையையும் கற்று வருகிறார்.

நாவல்கள் படிப்பது, கேரம்ஸ் ஆடுவது, கொலு பொம்மைகள் சேர்ப்பது, அவைகளுக்கு அலங்காரம் செய்வது இவை யெல்லாம் ராஜகுமாரியின் பொழுது போக்குகளாம். பொம்மைகள் மீது அளவுக்கு அதிகமான ஆசை கொண்டிருப்பதனால் தானோ என்னவோ ''அவரிடம் சில பொம்மைக் குணங்கள்'' படிந்திருக்கின்றன. தாயார் கிழித்த கோட்டைத் தாண்டி அறியாத ராஜகுமாரிக்கு சாப்பாடு முதல் சாமர்த்தியம் வரை எல்லாமே அம்மாவின் உபயம்தான்!

ஸி. ஆர். ராஜகுமாரியின் தாயார் ரத்னம்மாள்

பட்டமளிப்பு விழா

விகடக் கச்சேரிகள் பல செய்துவரும் சந்தானம்-சந்துரு ஜோடிக்கு, ''விகட ரத்னம்'' என்ற பட்டம் கிடைத்திருக்கிறது. சென்ற மாதம் 15-ம் தேதி கும்பகோணத்தில், குடந்தை உதவி செஷன்ஸ் நீதிபதி, இந்தப் பட்டத்தை அவர்களுக்கு அளித்தார். இந்த விழாவின் இறுதியில் அந்த ஹாஸ்ய ஜோடியின் விகடக் கச்சேரி நடந்தது.

B4144

திருத்தம்

19-வது பக்கத்தில் வெளியாகியுள்ள (நாகய்யா-ராஜகுமாரி) படத்தின் கீழ் ஆர். ஆர். பிக்சர்ஸின் '' பணக்காரி '' என்பதற்குப் பதில் ''ஓம்-உமா புரடக்ஷன்ஸின் ''பணக்காரி'' என்று படிக்கவும்.

Edited and Published by P. R. S. Gopal (Gundoosi) at 26, Godown St., Madras—1. Printed by S. Sriraman at Commercial Printing & Publishing House, 46, Armenian Street, Madras—1.

பிள்ளை வீட்டாரின் பிணக்கு தீர்ந்தது


அழகுக்கு அழகு செய்யும் ஆபரணங்கள்.
P.A.R.
P.A. ராஜூ செட்டியார் & பிரதர்
கோயமுத்தூர்